இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 138 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 31 வியாழக்கிழமை 13.04.2017

## மதுபான நிலையங்கள் 2 நாள் பூட்டு

கொழும்பு, ஏப்.. 13
தமிழ், சிங்களபுத்தாண்டின் முதல் நாளான இன்றும் புத்தாண்டு தினமான நாளையும் நாடு முழுவதிலுமுள்ள மதுபானச்சாலைகள் அனைத்தும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. >>24

## தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க முடியாது

### சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டே அதனைச் செய்யலாம் என்கிறது அரசு

யாழ்ப்பாணம், ஏப். 13
தமிழ் அரசியல் கைதிகளைச் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்திய பின்னர்தான் விடுதலை செய்யமுடியும். அவர்களை உடனடியாக விடுதலைசெய்ய இயலாது. இவ்வாறு கொழும்பு அரசின் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் சுவாமிநாதனிடம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். >>24

## 32 பவுண் நகைகளுடன் யாழ். நகரில் மூவர் கைது

### 16 திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.13
யாழ்ப்பாணத்தில் பல திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 32 பவுண் நகைகளும், மடிக் கணினி மற்றும் 2 அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் அண் >>24

## சு.கவின் மே தினத்தில் எதிரணி பங்கேற்காது

### கூறுகிறார் ரஞ்சித் சொய்ஸா

கொழும்பு, ஏப். 13
இம்முறை கெட்டம்பே பிரதேசத்தில் நடக்கவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பொது எதிரணி உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளப் போவதில்லை என பொது எதிரணியின் பிரதித் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் சொய்ஸா தெரி >>24

## பனைசார் உற்பத்திகளுக்கு வரி அறவீட்டை நீக்குங்கள்

### அரசிடம் சரவணபவன் எம்.பி. கோரிக்கை



யாழ்ப்பாணம் ஏப் 13
வடக்கில் பனை சார் கைத்தொழிற்சாலைகளுக்குக் கொழும்பு அரசால் அறவிடப்படும் வரி அறவீட்டை அரசு நீக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்தினார்.
யாழ்ப்பாணத்துக்கு >>24

## மனித உரிமை ஆர்வலர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பில்லை

### அல் ஹுசைனுக்குக் கடிதம்

கொழும்பு, ஏப். 13
இலங்கையிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை காணப்படுவதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள >>24

# புதிய அரசமைப்புக் குறித்து கூட்டமைப்பு – ஜேவிபி பேச்சு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி.) இடையே நேற்று முன்னிரவு சந்திப்பு நடைபெற்றது. புதிய அரசமைப்புத்தான் உருவாக்கப்பட வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கைக்கு இணங்கியுள்ள ஜே.வி.பி. தமது கட்சியும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளது என்று தெரிவித்துள்ளது. அதிகாரப் பகிர்வு தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படாத போதிலும் அது தொடர்பில் தொடர்ந்தும் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டு அதனூடாக இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்குச் சமாந்தரமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய அரசியல் கட்சிகளைச் சந்தித்து வருகின்றது. புதிய அரசமைப்புக்கு ஆதரவைக் கோரும் வகையில் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.
இதனடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணியுடன் சுமார் ஒரு மணி நேரம் நேற்று இரவு சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பங்கேற்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் விஜித ஹேரத், ரில்வின் சில்வா, லால்காந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.
புதிய அரசமைப்புத்தான் உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமது கட்சி உள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. அதிகாரப் பகிர்வு விடயத்தில் கொழும்பு அரசிடம் எந்த வகையான அதிகாரங்கள் இருக்க வேண்டும், மாகாணங்களுக்கு எந்த வகையான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார். அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒருமித்த முடிவு >>24

# எமது பிள்ளைகளை மீட்டுத் தா கந்தனே!

### காணாமற் போனோரின் உறவுகள் தேங்காய் உடைத்து வேண்டுதல்



யாழ்ப்பாணம், ஏப். 13
வவுனியாவில் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுத் தேங்காய் உடைத்து வழிபாடு செய்தனர்.
அவர்களது போராட்டம் 48 ஆவது >>24

## கேப்பாபிலவு மக்கள் மைத்திரிக்குக் கடிதம்



முல்லைத்தீவு, ஏப். 13
கேப்பாபிலவில் உள்ள தங்கள் காணிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி அந்தப் பகுதி மக்களால் அரசதலைவருக்கு அவசரக் கடிதம் >>24




கண்ணீரோடுதான் நள்ளிரவில் புதுவருடம் பிறக்குது

## வடக்கில் 76 ஆயிரம் பேருக்கு பொருத்து வீடு வேண்டுமாம்

### கூறுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம்,ஏப்.13
வடக்கில் 76 ஆயிரம் பேர் பொருத்து வீடு வேண்டும் என எனக்கு விண்ணப்பித்துள்ளனர் எனக் கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். >>24

## ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மைத்திரி அரசு இப்போதும் அசமந்தமே

### சிவில் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.13
இலங்கை அரசு அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுவதால், ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றது. தீர்மானம் நிறைவேற்ற முன்னரும் இவ்வாறான நிலையே தொடர்ந்தது. தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும் அவ்வாறான நிலைமையே தொடர்கின்றது. இவ்வாறு நல்லிணக்க கலந்தாலோசனைச் செயலணியின் செயலர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு மேலும் இரு >>04

## 50 கிலோ கஞ்சா நெடுந்தீவு கடலில் நேற்று மீட்பு

### அநாமதேயப் படகில் என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 13
நெடுந்தீவுக் கடற்பரப்பில் 50 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகள் கடற்படையினரால் நேற்று மீட்கப்பட்டன என்று நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். இதன் பெறுமதி 60 லட்சம் ரூபா எனவும் அவர்கள் தெரிவித்தனர். >>24

## இலங்கை அரசின் வேகம் குறைவு

### ஐரோப்பிய நாடாளுமன்ற பன்னாட்டு வர்த்தகக் குழு ரணிலுக்குச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்ரல் 13
அடுத்த மாதம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்பதாக, இலங்கை தனது வாக்குறுதிகளை நிறைவேற் >>24

யாழ்ப்பாணத்தில் நேற்று

## வேலைதேடும் பட்டதாரிகள் அடையாள உணவு ஒறுப்பு



யாழ்ப்பாணம், ஏப்.13
வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று ஒரு நாள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த 45 நாள்களாக தமக்கான >>24

## 2 மாதங்களில் மட்டும் 250 விபத்துச் சாவுகள்

கொழும்பு, ஏப். 13
கடந்த இரண்டு மாதங்களில் நடந்த வாகன விபத்துகளில் 250 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.
நாளாந்தம் சராசரியாக எட்டுப் பேர் வாகன விபத்துகளில் உயிரிழக்கின்றனர். மதுபோதையில் வாகனங்களைச் செலுத் >>24

# வடக்குக் காணிகள் விடுவிப்பு முடிவு ஏப்ரல் இறுதியில்

## பாதுகாப்பு அமைச்சுடன் 24ஆம் திகதி முக்கிய பேச்சு என்கிறார் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம் ஏப் 13
வடக்கில் இராணுவம் அபகரித்து வைத்துள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக எதிர்வரும் 24 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுடன் முக்கிய கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் சுவாமிநாதனிடம் வடக்குக் காணிகள் விடுவிப்புக் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், வடக்கில் இராணுவம் அபகரித்துள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சகல அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள் அடங்கலாகப் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளோம். இதன்போது வடக்கில் இராணுவத்தினரிடம் உள்ள காணிகளில் எவற்றை எப்போது விடுவிப்பது என்பது தொடர்பில் ஆராயப்படும்.

கேப்பாபிலவுப் பகுதியில் விரைவில் 399 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தின் கட்டடங்களை அகற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. இராணுவத்தினர் அந்தக் கட்டடத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளனர். இராணுவத்தின் கட்டடத்தை வேறு இடத்தில் அமைக்க இராணுவம் அரசிடமே நிதியைக் கோரியுள்ளது. அவர்களுக்கு எனது அமைச்சில் இருந்து எந்தவொரு நிதியையும் நான் வழங்கமாட்டேன். அரசிடம்தான் இராணுவம் 5 மில்லியன் ரூபா நிதி தேவை எனக் கோரியுள்ளது. அதனை அரசே பரிசீலிக்கும். இராணுவத்தினர் அதிகளவான பணத்தைக் கோரவில்லை. 5 மில்லியனையே கோரியுள்ளனர். ஆகவே அந்தப் பணத்தை அரசு இராணுவத்துக்குக் கொடுக்கும்.

காணி விடுவிப்பு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னரே முடிவுகள் எட்டப்படும் என்றார். (கு-8)

## இராணுவத் தேவைகளுக்காக துறைமுகங்களை வழங்கோம்

### ஜப்பானில் கூறினார் ரணில்

கொழும்பு, ஏப். 13
இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையும் தமது நலன்களுக்காகப் பயன்படுத்துவதற்கு வெளிநாட்டுப் படைகளுக்கு அனுமதி வழங்கப்படாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க ரோக்கியோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பூகோள நிலைமைகளையும், ஜப்பானின் முக்கியத்துவத்தையும் இலங்கை விளங்கிக் கொண்டுள்ளது. பிராந்திய அமைதி மற்றும் உறுதிப்பாட்டைப் பாதுகாக்க இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது.

இலங்கையின் அனைத்துத் துறைமுகங்களினதும் பாதுகாப்பு இலங்கைக் கடற்படையின் வசமே இருக்கும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் இராணுவத் துறைமுகமாக இருக்காது. இலங்கைக் கடற்படையும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுமே இதன் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மீதான சீனாவின் ஆர்வம் குறித்து, குறிப்பாக, இராணுவ நலன்கள் தொடர்பாகச் சந்தேகங்கள் நிலவுகின்றன.

சீன நிறுவனத்துக்கும் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்படும் கூட்டு முயற்சி உடன்பாடு, எந்தவொரு வெளிநாடும் துறைமுகத்தை இராணுவத் தேவைக்காக பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையிலானதாக இருக்கும்.

இது ஒரு வர்த்தக நடவடிக்கை. இலங்கைக் கடற்படை தவிர்ந்த வேறெவரும், இலங்கைத் துறைமுகங்களை இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை.

துறைமுகத்தில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை, பொலிஸார், சுங்க மற்றும் குடிவரவுத் திணைக்களம் என்பனவே கையாளும். உள்ளகப் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டும். இந்த உடன்பாட்டு விதிகள் மீறப்பட்டால், இலங்கை அரசு எந்த இழப்பீட்டையும் செலுத்தாமல் துறைமுகத்தை மீளப் பெற முடியும்.

எந்தவொரு போர்க்கப்பலும் துறைமுகத்துக்கு வர முடியும். அதற்கு அனுமதி அளிக்கப்படும். அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படும் என்றார். (கு-4)

## போதை வில்லைகளுடன் மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 13
போதை வில்லைகளை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மருதானை, சுதுவெல்ல பகுதியில் வைத்து நேற்று அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வான் ஒன்றில் போதை வில்லைகளுடன் பயணித்த சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதை அடுத்து, குறித்த விற்பனை நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 27 போதைப்பொருளடங்கிய வில்லைகள் மீட்கப்பட்டுள்ளன. விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் கூறினர். (கு-4)



## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோர் சிக்கினர்

தென்மராட்சி ஏப். 13
கொடிகாமம் எருவன் பகுதியில் கொடிகாமம் பொலிஸார் நடத்திய திடீர்ப் பரிசோதனையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்ததுடன் அங்கிருந்த கசிப்பு மற்றும் கோடா ஆகியவற்றையும் கைப்பற்றினர்.

நேற்றுக் காலை கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து எருவன் பகுதியில் உள்ள வீடொன்றில் திடீர்ப் பரிசோதனை நடத்தியபோது கிணற்றுக்கு அருகில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

உற்பத்தி செய்யப்பட்ட 7 போத்தல் கசிப்பு மற்றும் உற்பத்திக்கு வைத்திருந்த 25 போத்தல் கோடா ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

இந்த இருவரையும் சான்றுப் பொருள்களையும் இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக அவர்கள் கூறினர். (கு-9)

## ஐ.தே.கவுக்கு விரைவில் 86 புதிய அமைப்பாளர்கள்

கொழும்பு, ஏப். 13
ஐக்கிய தேசியக் கட்சிக்கு 86 புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும், அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மே தினத்துக்குப் பின் வழங்கப்படுமெனவும் கட்சித் தலைமையகம் அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் ஏற்கனவே 116 அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அதற்கு மேலதிகமாக 86 புதிய அமைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஐ.தே.க. தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் இந்தத் தெரிவுக் குழுவில் கட்சியின் தலைமைச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம், பிரதிச் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம், கிரீன் பிளட் அமைப்பின் உறுப்பினர் லசந்த குணவர்தன மற்றும் ஐ.தே.கவின் தொலைத்தொடர்புச் செயலணியின் பணிப்பாளர் நாயகம் சுதத் சந்திரசேகர ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். (கு-4)



ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேயைச் சந்தித்துப் பேசினார். இதன்போது இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் இரு நாடுகளின் தலைவர்களும் கவனம் செலுத்தியதாகக் கூறப்பட்டது. (கு)

## காணிகளை ஒப்படைத்தது பருத்தித்துறைப் பொலிஸ்


யாழ்ப்பாணம், ஏப். 13
பருத்தித்துறை நீதிமன்றுக்கு அருகில் பொலிஸ் நிலையம் இயங்கி வந்த 20 குடும்பங்களின் காணிகள் உரியவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

குறித்த காணிகளைப் பொலிஸார் பல வருடங்களுக்கு முன்னரே கையகப்படுத்தி அதில் பொலிஸ் நிலையத்தை அமைத்திருந்தனர். அந்தக் காணிகளை விடுவிக்குமாறு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

நீண்ட இழுபறியின் பின்னர் 3 வருடங்களுக்கு முன்பு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கென நீதிமன்றுக்கு முன்பாக நவீன முறையில் கட்டடம் கட்டப்பட்டுப் பொலிஸ் நிலையம் அதில் இயங்கத் தொடங்கியது.

பொலிஸாரின் கையகப்படுத்தப்பட்ட பொலிஸ் நிலையம் அமைந்த காணி 20 குடும்பங்களுக்கு உரித்துடையவை. அந்தக் குடும்பங்களில் 13 குடும்பங்கள் நேற்றுக் காணிகளைப் பொறுப்பேற்றனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் த.ஜெயசீலன், பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத் மற்றும் பிரதேச கிராம அலுவலர் உள்ளிட்டவர்கள் குறித்த காணிக்குரிய பொது மக்களை அழைத்துக் காணிகளை நேற்று ஒப்படைத்தனர். (கு-4-26)



## தனிச் சிங்களத்தில் புது வருட சுபநேரம்

வவுனியா, ஏப் 13
தமிழ்சிங்களப் புத்தாண்டு சுபநேர அட்டவணை வவுனியா மாவட்டச் செயலகத்துக்குத் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி சிங்களப் புதுவருடப் பிறப்பு என்றே அதில் அச்சிடப்பட்டுள்ளது. இது தனிச் சிங்களத்தில் அச்சிடப்பட்டுள்ளமை குறித்து அங்கு பணியாற்றும் பெருமளவு தமிழ்ப் பணியாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். தமிழ்மொழி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (கு-4)

## சடலம் மீட்பு

பதுளை, ஏப்.13
பண்டாரவளை மாக்கந்த பெருந்தோட்டக் குடியிருப்புத் தொகுதியில் நேற்றுமுன் தினம் மாலை மர்மமான முறையில் உயிரிழந்த வயோதிபரொருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். யாசகம் செய்து வாழ்ந்து வந்த தோட்டத் தொழிலாளி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சட்ட வைத்திய பரிசோதனைக்காகச் சடலம் பண்டாரவளை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (து-ய-41)

## அங்கவீனமுற்ற பொலிஸாரை கண்காணிப்பதற்கும் நிலையம்

கொழும்பு, ஏப். 13
அங்கவீனமுற்ற இராணுவத்தினரைக் கண்காணிப்பது போன்று அங்கவீனமுற்ற பொலிஸாரையும் கண்காணிப்பதற்கு நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் இராணுவத் தளபதியுடன் தான் கலந்துரையாடியதாகவும், இதற்கு இராணுவமும் உதவிகளை வழங்கத் தயார் எனக் குறிப்பிட்ட தாகவும் அவர் கூறினார்.
பொலிஸ் அங்கவீனர்களுக்காக, பொலிஸ் வைத்தியசாலைக்கு அருகில் இந்த மத்திய நிலையத்தை அமைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார். (து-4)

# தமிழ்க் கைதிகளுக்கு புது வருடத்தில் பொதுமன்னிப்பு

### அரச தலைவர் மைத்திரிபாலவிடம் பொது அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 13
சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை புதுவருடத்துக்கு முன்னர் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்குமாறு பொது அமைப்புகள் அரச தலைவர் மைத்திரிபாலவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பான மனு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கையில் பல தசாப்த காலமாக இடம்பெற்ற இன முரண்பாடுகளின்போது ஏதோவொரு காரணத்தின் அடிப்படையிலும் காரணங்கள் ஏதுமற்ற நிலையிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலமாகச் சிறைகளில் உள்ளதால் அவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பத்தினரும் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளனர்.
பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் அல்லது அந்த நடவடிக்கைகளுக்குத் துணை நின்றனர் எனக் குற்றஞ்சாட்டியே அவர்களில் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். போரில் ஈடுபட்ட புலிகளின் உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில், அந்த போரைக் காரணம் காட்டிக் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றமை எந்தவகையிலும் நியாயமானது அல்ல. தமது பிள்ளைகள், கணவர்கள், தந்தையர்கள், சகோதர உறவுகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அவர்களது உறவுகள் புதுவருடம் போன்ற பண்டிகைகளை எப்படிக் கொண்டாட முடியும்?
இந்த நாட்டில் புதிய சமாதானமும் இனங்களுக்கு இடையே நல்லுறவும் மலர வேண்டுமாக இருந்தால் தமிழ் சிங்கள புதுவருடத்தைத் தமிழ் சிங்கள இனங்கள் இணைந்து மகிழ்வாகக் கொண்டாட வேண்டுமாக இருந்தால் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
ஏதுமறியாத அப்பாவிக் குழந்தைகள் சிறைகளில் உள்ள தங்கள் தந்தையர்களுக்காகத் தினமும் இறைவனை மன்றாடுகின்றனர்.
கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் அவர்களின் மனதில் தாங்கள் இறைவனாக அவதாரம் எடுக்க முடியும்.
தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் புதுவருடத்திற்கு முன்னர் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள். அல்லது அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்யுங்கள்.
அதற்கு முன்னதாகப் புதுவருடத்தை அவர்கள் தமது உறவுகளுடன் இணைந்து கொண்டாடுவதற்குப் பிணையிலாவது விடுதலை செய்யுங்கள் - என்றுள்ளது. (து-101)

# பிக்குகளிடையே நேற்றுக் கைகலப்பு

### இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதி

பதுளை, ஏப்.13
விகாரையொன்றில் புத்த பிக்குகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இளம் பிக்குகள் இருவர் மொனராகலை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
மோதலில் 13 மற்றும் 15 வயதுகளையுடைய இளம் பிக்குகள் இருவரே காயமடைந்துள்ளனர்.
விகாரையின் வயதுவந்த புத்தபிக்குகளுக்கும், சிறு வயதுகளையுடைய பிக்குகளுக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதாகத் தெரியவருகின்றது.
சம்பவம் தொடர்பில் மொனராகலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-ய-41)

## வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் சட்டவிரோதமாகத் தடுத்து வைப்பு

### உறவினர்களால் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 13
யாழ்ப்பாணத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் கடத்தப்பட்டு அல்லது சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. கடத்தப்பட்ட குடும்பத் தலைவர் மல்லாகம் நீதிமன்று க்கு அழைத்துவரப்பட்ட போதும் அவரை மன்றில் முற்படுத்தாமலேயே அழைத்து வந்தோர் திருப்பிக் கொண்டு சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.
கடத்தப்பட்டவருக்கு எதிராக தாபரிப்பு வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திய சிவில் உடை தரித்த நான்கு பேர் சில நாள்களுக்கு முன்னர் குடும்பத்தலைவர் ஒருவரைக் கடத்திச் சென்றனர் என்று உறவினர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது. அது தொடர்பில் அவரது மனைவி வட்டுகோட்டை பொலிஸ் நிலையத்துக்கு சென்று விசாரித்த போது, தாம் எவரையும் கைது செய்வில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர்.
சில நாள்களின் பின்னர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் குடும்பத்தலைவர் தனது மனைவிக்கு புதிய அலைபேசி இலக்கம் ஒன்றில் இருந்து தொடர்பு கொண்டு, தன்னைப் புலனாய்வுத் துறையினர் கைது செய்து அனுராதபுரத்தில் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இந்தத் தகவல்களை எவரிடமும் கூற வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.
இந்த நிலையில் குடும்பத் தலைவரின் மனைவியின் அலைபேசிக்கு தொடர்பை ஏற்படுத்திய ஒருவர் , மல்லாகம் நீதிவான் மன்றில் உள்ள தாபரிப்பு வழக்குக்காக குடும்பத்தலைவரை முற்படுத்தவுள்ளதாகக் கூறியுள்ளார். அதனால் அவரது மனைவி நேற்று நீதிமன்றுக்குச் சென்றிருந்தார்.
அவரை மல்லாகம் நீதிமன்றுக்கு அழைத்து வந்திருந்தனர். அங்கு சென்ற மனைவி கணவருடன் கதைக்க முற்பட்ட வேளை, கணவனை நீதிமன்றுக்கு அழைத்து வருவோம் என வேறு எவருக்கும் தெரியப்படுத்தினீர்களா என்று அழைத்து வந்தவர்கள் கேட்டுள்ளனர். சட்டத்தரணிக்குத் தெரியப்படுத்தியதாக மனைவி கூறியதும், அவரை மன்றில் முற்படுத் தாமல் தம்முடன் அழைத்து சென்றுள்ளனர் என்று குடும்பத்தலைவரின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-4, 37)

## சுமந்திரன் கொலை முயற்சி; 5 பேரின் மறியலும் நீடிப்பு

கிளிநொச்சி, ஏப்.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்களினதும் விளக்கமறியல் எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
அடுத்த தவணையுடன் இந்த வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நேற்று அறிவித்தார்.
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளிகளான சந்தேக நபர்கள் ஐவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
வெளிநாடொன்றில் வசிப்பதாகக் கருதப்படும் ஆறாவது சந்தேகநபருக்குப் பன்னாட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் ஐவரும் நேற்றுப் பலத்த பாதுகாப்புடன் கிளிநொச்சி நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் யாழ். வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இந்த ஐந்து பேரும் கடந்த ஜனவரி 14 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.
காராளசிங்கம் குலேந்திரன், வேலாயுதம் விஜயகுமார், முருகையா தவேந்திரன், லூசி மரியநாயகம் அஜந்தன் மற்றும் ஞானசேகரலிங்கம் ராஜ்மதன் ஆகியோரே தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-ய)

## புத்தாண்டு வாழ்த்துக்கூறும் தெருவோரப் பட்டதாரிகள்



மட்டக்களப்பு, ஏப். 13
ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் என அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் தெருவோர வேலையற்ற பட்டதாரிகள் என்ற பெயரில் கிழக்கில் ஒட்டப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு நகரப் பகுதியில் இந்தச் சுவரொட்டிகள் அதிகளவில் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
குறித்த சுவரொட்டிகள் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் தமக்கான நிரந்தர நியமனம் கோரி நேற்று 51ஆவது நாளாக மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத் தனர்.
புதுவருடம் பிறக்கும் நிலையில் எமக்கான தீர்வை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பெற்றுக்கொடுக்க வில்லை. இதனால் கறுப்பு ஆடை அணிந்து புத்தாண்டை வரவேற்கவுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (த)

## மதுவரி அதிகாரிகள் மீது பதுளையில் தாக்குதல்

### இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பு

பதுளை, ஏப்.13
சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர்களைக் கைதுசெய்யச் சென்ற பதுளை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் தாக்குதலுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மகியங்கனை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
மகியங்கனை கெசெல்பொத்த என்ற இடத்தில் சட்டவிரோத மது விற்பனை இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலொன்றினை அடுத்து, மதுவரித் திணைக்களத்தின் 8 பேர் அடங்கிய குழுவினர் அந்தப்பகுதியில் தேடுதல்களை மேற்கொண்டனர். அவ்வேளை திடீரென்று அங்கு வந்த இளைஞர்கள், அதிகாரிகள் மீது சரமாரியாகத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பொலிஸார் மூவரைக் கைதுசெய்ததுடன் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பொல்லுகள் மற்றும் கம்பிகளையும் மீட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (து-ய-41)

# ரூபா 58 மில்லியனுக்கே மைத்திரிக்கு வாகனம்

## நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13
"அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவுக்கு 600 மில்லியன் ரூபா செலவில் வாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுவது உண்மைக்கு மாறான பரப்புரை. 58 மில்லியன் ரூபாவுக்கே அரச தலைவருக்கு வாகனம் கொள்வ னவு செய்யப்பட்டது"
இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கரு ணாநாயக்க தெரிவித்தார்.
நிதி அமைச்சில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.
"மகிந்த ராஜபக்ச செலவு செய்ததில் 2 அல்லது 3 வீதத்தையே தற்போ தைய அரச தலைவரும், தலைமை அமைச்சரும் செலவு செய்து வருகின்றனர். அரச தலை வரின் பாதுகாப்புக்குத் தேவை யான வாகனம் வேண்டும் என அவரது பாதுகாப்புப் பிரிவு கேட்கும் பட்சத்தில் அதனைப் பெற்றுக் கொடுப்பதில் பிரச்சினையில்லை" என்று அமைச்சர் ரவி கருணாநா யக்க மேலும் தெரிவித்தார். (வ-5)

# இலங்கைக்கு ஜப்பான் பாராட்டு

கொழும்பு, ஏப்.13
இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, குறுகிய காலத்திற்குள் சரியான அபிவிருத்திப் பாதையில் பிரவேசித்தமை குறித்து ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.
அந்த நிறுவனத்தின் தலைவர் மினிச்சி கினவோகா நேற்று டோக்கியோவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக்குழுவைச் சந்தித்து, தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.
இந்தச் சந்திப்பில் கண்டி பெருநகர அபிவிருத்தித் திட்டம், இலகு ரயில் வலைப்பின்னல் முதலானவற்றின் பூர்வாங்க அறிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# வெள்ளைவானில் கடத்தப்பட்டவர் 5 வழக்குகளுடைய சண்டியராம்!

கொழும்பு, ஏப். 13
இபலோகம, புஞ்சிகுளம் பகுதியில் வெள்ளை வானில் கடத்திச்செல் லப்பட்ட நபர் பல்வேறு நீதிமன்றங் களில் தொடரப்பட்டுள்ள ஐந்து வழக்குகளுடன் தொடர்புடைய வர் எனவும், அவர் அநுராதபுரம் மாவட்டத்தின் பிரபலமான சண்டி யர் எனவும் கூறப்படுகின்றது.
சட்டவிரோதமாக துப்பாக்கி யொன்றை வைத்திருந்தமை, பெறுமதியான இரத்தினக்கற் களை விற்கும் வியாபாரி போல நடித்து நபரொருவரிடமிருந்து 20 இலட்ச ரூபாவை ஏமாற்றிப் பறித் தமை, நபரொருவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயன் றமை, இருவரைத் தாக்கிக் காயம் விளைவித்தமை, கொலை மிரட் டல் போன்ற குற்றச்சாட்டு களின் கீழ் இவருக்கு எதிரான ஐந்து வழக்குகள் நடந்து வருகின்றன.
"மாஞ்சி அஜந்த" எனும் புனைபெ யரில் அழைக்கப்படும் இவருக்கு எதிராக பல்வேறு குழுக்களிலிருந் தும் அவ்வப்போது அச்சுறுத்தல் கள் விடுக்கப்பட்டு வந்தது என் றும், அவ்வாறான குழு வொன்றோ அல்லது குழுக்களோ இவரைக் கடத்திச் சென்றிருக்க லாம் எனவும் பொலிஸார் சந்தே கம் வெளியிட்டனர். (ற-4)

# புத்தாண்டு விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப். 13
சித்தன்கேணி கலைநகர் விளை யாட்டுக்கழகம் மற்றும் இளை யோர் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டு விழா இன்றும் நாளையும் கலைநகர் விளை யாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று விளையாட்டுக் கழக நிர்வா கத்தினர் அறிவித்தனர்.
இன்று நடைபெறவுள்ள முதலாம் நாள் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கணக்கா ளர் சி.கஜேந்திரன், நாளை வெள் ளிக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப் பாணம் கிளிநொச்சி நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவண வன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார் கள் என அவர்கள் மேலும் தெரி வித்தனர். (வ-ரி)

# யானையுடன் மோதி ஹைஏஸ் விபத்து

முல்லைத்தீவில் இருந்து கட்டுநா யக்கவுக்கு கடந்த திங்கட் கிழமை இரவு குடும்பத்தினர் ஹைஏஸ் வாகனத்தை வாடகைக்கு அமர்த் திச் சென்றுள்ளனர்.
தண்ணீரூற்று நெடுங்கேணி வீதி யால் பயணித்துக் கொண்டிருந்த சமயம், வீதியின் குறுக்கே நின்ற யானையுடன் மோதி விபத்து ஏற்பட்டது. (ற-7)

# சாவகச்சேரி பொதுச் சந்தையில் நேற்று களை கட்டியது புத்தாண்டு வியாபாரம்

## மக்கள் கூட்டத்துக்குள் திருடர்களும் கைவரிசை

சாவகச்சேரி, ஏப். 13
சாவகச்சேரி பொதுச் சந்தையில் புத்தாண்டு வியாபாரம் நேற்று களை கட்டியது.
புத்தாடைகள் கொள்வனவு செய்ய பெருமளவு மக்கள் கூடியி ருந்தமையைப் பயன்படுத்தி பலரிடம் தங்கச் சங்கிலி மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது பிள்ளைகளுடன் சந்தையில் பொருள்கள் வாங்குவதற்கு வந்து நடைபாதை வியாபாரியி டம் உடுப்புகள் கொள்வனவு செய்து கொண்டிருந்த வேளை யில் அவரின் 2 வயது மகள் அணிந்திருந்த தங்கச் சங்கிலி திருடப்பட் டுள்ளது எனத் தெரி விக்கப்பட்டது.
"மோட்டார்சைக்கிளில் தாயும் மகளும் சந்தைக்கு வந்து மகள் நடைபாதை வியாபாரிகளிடம் பிடவைகளை கொள்வனவு செய்து கொண்டிருந்தார்.
தாய் தலைக்கவசங்களுடன் அந் தப் பகுதியில் நின்றிருந்தார்.
அந்த வேளையில் தலைக்கவசத் தினுள் வைக்கப்பட்டிருந்த கைப் பையை திருடர்கள் களவாடினர்.
அதனுள் 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் போன்றவை காணப்பட்டன" என்று தெரிவிக் கப்பட்டது.
கைப்பையுடன் பணம் பறிபோ னதால் எடுத்த உடுப்புகளை வியாபாரியிடம் கொடுத்த விட்டு தாயும் மகளும் வீடு திரும்பினர் எனவும் கூறப்பட்டது.
மேலும் சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தையில் புத்தாக நடை பாதை வியாபாரிகளுக்கு அனு மதி வழங்காத நிலையில் அரு கில் உள்ள பள்ளிவாலுக்குரிய காணியில் பள்ளிவாசல் நிர்வா கம் இடங்களை வழங்கி நடை பாதை வியாபாரிகளை வியாபா ரம் செய்ய அனுமதித்தமை குறித்து பொதுச் சந்தை வர்த்த கர்கள் கவலை தெரிவித்தனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் தற்காலிக நடைபாதை வியாபா ரத்துக்குத் தடை விதித்துள்ள நிலையில் சாவகச்சேரி பள்ளிவா சல் நிர்வாகம் சந்தைக்கு அருகில் உள்ள பள்ளிவாசல் காணியை நடைபாதை வியாபாரிகளுக்கு வழங்கியமை நகர சபை நிர்வா கத்துக்கு எதிரான செயல் என வும் வர்த்தகர்கள் குற்றஞ்சாட் டினர்.
இந்த விடயம் தொடர்பாக நகரச பையுடன் தொடர்பு கொண்ட போது இதற்கான பதில் தரக்கூ டிய அதிகாரிகள் இல்லாததால் அவர்களின் கருத்தை அறியமுடி யவில்லை. (வ-9)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு கெற்பேலிப்பகுதியிலிருந்து மணல்

தென்மராட்சி, ஏப். 13
தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருட வீட்டுத் திட்டப் பயனாளிக ளுக்கு தென்மராட்சி கிழக்கு கெற் பேலி பகுதியிலிருந்து மணல் விநியோகப்படும் என்று தென்ம ராட்சி பிரதேச செயலகத் தகவல் கள் தெரிவித்தன.
இந்த வருடம் மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தில் தென்மராட்சியில் 135 பயனாளி கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். பயனாளிகள் தெரிவுகள் பிரதேச செயலக அலுவலர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் தற் போது அனைத்துப் பிரதேச செய லக பிரிவுகளிலும் மணல் விநி யோகம் நிறுத்தப்பட்டதால் வீட மைப் புக்குத் தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கு மணல் கிடைக்காத நிலையில் திட்ட வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளது.
இதனைக் கருத்திற் கொண்டு நேற்றுமாலை 4 மணிக்கு பிர தேச செயலகத்தில் கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநி திகளுக்குமிடையே கலந்துரையா டல் நடைபெற்றது. பிரதேசத்தின் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு மட்டும் மணல் விநியோகிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த வருடம் பிரதேசத்தில் மணல் விநியோகத்தில் கட்டுப் பாடு இருந்ததால் மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஊடாக 348 பயனாளிகளுக்கும் மணல் விநியோகிக்கப்பட்டது. தற்போது மருதங்கேணி பிரதேசத்தில் மணல் விநியோகம் தடை செய் யப்பட்டுள்ளதால் தென்மராட்சி பிரதேசத்தில் கெற்பேலிப் பிரிவிலி ருந்து வீட்டுத் திட்டப் பயனாளிக ளுக்கு மட்டும் மணல் விநியோ கிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மன்னார், ஏப்.13
மன்னார் புனித சவேரியார் ஆண் கள் கல்லூரியின் பழைய மாண வர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி பொது ஒன்றுகூ டல் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்தக்கூட்டத்தில் அனைவரை யும் சமூகம் தருமாறு சங்கத்தின் செயலாளர் எஸ். டீன்சன் கேட்டுள் ளார். (வ-12)

# நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 16.5 மில்லியன் டொலர்கள்

## வழங்கியுள்ளது குவைத் அரசு

கொழும்பு, ஏப். 13
இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் நீர்ப்பாசனத் திட்டங் களுக்கு 16.5 மில்லியன் அமெ ரிக்க டொலர் களைக் குவைத் கடனாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குவைத்தின் மெல்லிய கடன் திட் டத்தின் அடிப்படையில் கடன் தொகையானது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. வழங்கப் பட்ட இந்தக் கடனானது இலங் கையில் தற்போது மேற்கொள் ளப்பட்டு வரும் பெரிய திட்டமான களுகங்கை திட்டத்துக்குச் செலவு செய்யப்படவுள்ளது.
இந்தக் கடன் தொகையானது 1.5 வீதம் வட்டியுடன், 22 வருட கால அவகாசத்துடன் இலங்கைக்குக் கிடைத்துள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (த-10)

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## ஐ.நா. தீர்மானத்தை...

வருட கால அவகாசம் வழங்குவதற்கு சிவில் அமைப்புக்களும் இணங்கியிருந்தன. இலங் கைக்குக் கால அவகாசம் வழங்கித் தீர்மான மும் நிறைவேற் பட்டிருந்தது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று வாரங்கள் கடந் துள்ள நிலையில், இலங்கை அரசு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா, இது தொடர்பில் சிவில் சமூகத்துடன் ஏதாவது ஆராய்ந்துள்ளதா என்பது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
இலங்கை அரசு ஐ.நா. தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதற்கு இதுவரை எந்த முயற் சியும் எடுக்கவில்லை. அது தொடர்பில் அக் கறை கொள்ளாமல் இருக்கின்றது. அரசமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. ஐ.நா. தீர்மானத்தை நிறை வேற்றுவது தொடர்பில் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றது. ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட முன்ன ரும் இவ்வாறுதான் செயற்பட்டது.
அதன் பின்னரும் அவ்வாறுதான் இயங்கு கின்றது. சிவில் அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தான் செயற்படுகின்றன. தொடர்ந்தும் அழுத் தம் கொடுக்கின்றன என்றார். (த-5)

# அதிகாரிகளுடன் துணையுடன் மாந்தை கிழக்கில் மரக் கடத்தல்

## குற்றஞ்சாட்டுகின்றனர் பிரதேச மக்கள்

முல்லைத்தீவு, ஏப்.13

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த மரங்கள் அதிகாரிகளின் துணையுடன் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனஎன்றுபொதுமக்கள்குற்றஞ்சாட்டுகின்றனர்.

"சிறாட்டிகுளம், மூப்பன்குளம், கொம்புவைத்தகுளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் மிகவும் பெறுமதி வாய்ந்த தேக்கு, பாலை, முதிரை போன்ற மரங்கள் பகல் வேளைகளில் வெட்டப்பட்டு தினமும் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டிய வனவளத் திணைக்களத்தின் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் சிவில் நிர்வாக அதிகாரிகளின் துணையுடன் அவை எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தமது தேவைகளுக்கு காணிகளில் உள்ள மரங்களை வெட்டமுடியாத அளவுக்கு இறுக்கமான நடைமுறைகள் காணப்படும் நிலையில் எவ்வாறு இந்த மரங்கள் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" - என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் மரக் கடத்தல்களை தடுத்து நிறுத்தி நீதிமன்றில் முற்படுத்துகின்றனர். இதை விட மக்கள் முறைப்பாடு தெரிவிக்கும் போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற - 21)

# மாணிக்க கங்கை துறையில் 20 ஆள்கொல்லி முதலைகள்

கொழும்பு, ஏப். 13

கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கையின் குளியல்துறையில் இருபது ஆள்கொல்லி முதலைகள் நடமாடுகின்றன. கங்கையில் நீராடும் யாத்திரிகர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று கதிர்காம ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொதுமக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்த முதலைகளை கங்கையிலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று திறன்கள் அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

வருடா வருடம் புதுவருட காலத்தில் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் கதிர்காமத்துக்குச் செல்வது வழக்கம். கடந்த வருடம் வந்த யாத்திரிகர்கள் இந்தக் குளியல்துறையில் நீராடியபோது மூவர் முதலைகளால் இழுத்துச் செல்லப்பட்டனர். எட்டுப் பேர் தங்களது கை, கால்களை இழந்துள்ளனர் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊவா மாகாணக் கிளை சுட்டிக்காட்டியது. (ற - 4)

### பக்திகானம் இறுவட்டு வெளியீடு

கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி மூன்றாம்வாய்க்கால், பன்னங்கண்டி பிள்ளையார் தேவஸ்தான துதிப் பாடல்கள் அடங்கிய பக்திகானம் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். வெளியீட்டு விழாவில் இசையமைப்பாளர் செயல்வீரன், ஒலிப்பதிவாளர் மலையவன், இளம்கவிஞர் தே.பிரியன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி

ஒளி அழகன் ஸ்ரூடியோ
British College of Beauty Studies இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்.

அழகுக்கலை | தையற்கலை | சிங்களம்
கேக்ஐசிங் | ஆங்கிலம் | சிகையலங்காரம்
Ladies Skills Development | சமையற்கலை

- அனைத்து பயிற்சி வகுப்புக்களும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சி அளிக்கப்படும்.
- 3, 6 மாதகால பயிற்சி வகுப்பாகவும் குறுகிய கால வகுப்பாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பை பெற கூடிய தரமான சான்றிதழை வழங்கி வருகின்றோம்.

01. Ladies Skills Development
02. Self Makeup
03. Self Hairstyle
04. Self Threading
05. Self Cleanup and Facial
06. Self Saree draping
07. Personality Development




போன்ற பயிற்சி வகுப்புக்கள் உங்களுக்கு நீங்களே எவ்வாறு செய்து கொள்வது ? என்று மிக தெளிவாக ஒரு நாள் பயிற்சி வகுப்பில் இடம் பெற உள்ளது.

உங்களுக்கு நீங்களே செய்து கொள்வதன் மூலம் பணத்தை சேமிக்க சுய நம்பிக்கை நான் அழகாக மாற முடியும் என்னாலே! என்ற Self Confidence பெற்றுக் கொள்வீர்கள்.

அன்றைய தினமே சான்றிதழ் வழங்கப்படும்.
பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி
இடம் : British College of Beauty Studies
நேரம் : 10.00 to 5.00
காலம் : 13.04.2017
இணைய விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
076 701 1645

விசேட விலைக்கழிவு !!!

நீர் சுத்திகரிப்புத் துறையில் அதி சிறந்த தொழில்நுட்பவியலாளர்களை தன்னகத்தே கொண்டு யாழ் மண்ணில் இயங்கிவரும் தன்னிகரற்ற Everpure Hi-Tec (Pvt) Ltd. நிறுவனமான நாங்கள் பிறக்கவிருக்கும் புதுவருடம் உங்கள் அனைவருக்கும் அமைதியையும், சுபீட்சத்தையும் அள்ளித்தரும் ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

இப்பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்துங்கள்!

Discount 5,000/= to 50,000/=
Valid untill 30.04.2017

சுத்தமான குடிநீருக்கான எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள மாசுக்கள், கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

Water Softener System

Tiles, Bathroom Fittings, Washing Machine களில் படியும் கல்சியம், மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!






Swimming Pool

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து, நிறுவி, பராமரித்துத் தரப்படும்.



Waste Water Treatment

வீடு, தொழிற்சாலை, உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

WE ACCEPT VISA MasterCard
WARRANTY
Everpure Hi-Tec (Pvt) Ltd.
#341, K.K.S. Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

ABI Fashion World
அபி பஷன் வேல்ட்இன்
புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி
ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

தமிழ்ப் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகள் ஒரே இடத்தில்...

சித்திரை தள்ளுபடி
10% to 60%



சல்வார் 1500/= முதல்
சல்வார் துணிகள் 800/= முதல் (ரொப் 01 இலவசம்)
சேட் 600/= முதல் (01 வாங்கினால் 01 இலவசம்)
ஹொட்டன் சாறி 800/= முதல்
பட்டுப்புடைவை 2000/= முதல்
ரீசேட் 500/= முதல் (01 வாங்கினால் 01 இலவசம்)
பான்சி சாறி 1000/= முதல் (01 வாங்கினால் 02 இலவசம்)

இச்சலுகை 23.03.2017 13.04.2017வரை

அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 5% விசேட விலைக்கழிவு. (விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)
021 222 3738
077 324 6503
abifashionworld

# இளைஞனைத்தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் விளக்கமறியல் சாலையில்

தென்மராட்சி, ஏப். 13
அல்லாரை தெற்கு இளைஞரைக் கடத்திச் சென்று வாளால் வெட்டிக் காயப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தென்மராட்சியைச் சேர்ந்த 4 இளைஞர்களில் இருவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிவான் மன்றம் இருவரை பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

"பாதிக்கப்பட்ட இளைஞனை கோப்பாய்க்கு வருமாறு சந்தேகநபர்கள் அழைத்துள்ளனர். அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் அவரை ஏற்றிச் சென்று ஆள்கள் நடமாட்டமில்லாத இடத்தில் வைத்து சந்தேகநபர்கள் தாக்கியுள்ளனர். அத்துடன், இளைஞன் மீது கூரிய ஆயுதத்தால் காலில் வெட்டி அவர்கள் காயப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து மட்டுவில் வடக்கு, கைதடி தெற்கு, நுணாவில் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் முதலாம் இரண்டாம் சந்தேகநபர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மூன்றாம், நான்காம் சந்தேகநபர்களை தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையில் விடுவிக்க நீதிவான் அனுமதித்தார். (வ-9)

# குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 13
கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் 13ஆவது வருடாந்த குருதிக் கொடை முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பொற்பதி அறிவாலயக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் என்று கழகத்தின் செயலாளர் அறிவித்தார். (வ-ரி)

# அறநெறி மாணவரின் புத்தாண்டு விழா

தென்மராட்சி, ஏப்.13
சாவகச்சேரி கல்வயல் வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையினர் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு தலைமை விருந்தினராக மருத்துவர் சு.சி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார அலுவலர் திருமதி வி.மகிந்தினியும் கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய ஆசிரியர் க.மகிந்தனும் கலந்து கொள்வர். நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், நாடகம் போன்றவை இடம்பெறும். அத்துடன் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கோகுலம் இசைக் குழுவின் இசைநாடா வெளியீடும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்
திருமதி
**இராஜேஸ்வரி சுப்பிரமணியம்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருறுகின்றோம்.
அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருடன் துயர்பகிர்ந்து ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு
நீர்வேலி.

செயலாளர், நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர்சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம்(வ.து)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அம்பலவாணர் கந்தையாபாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற புகையிரதநிலைய அதிபர்)

அன்னை மடியில் சரண்
16.10.1925

கதிர்காமசுவாமி திருவடியில் சரண்
09.04.2012

(திதி: அபரபக்க திருதியை 13.04.2017)

ஐந்தாண்டுகள் ஓடிமறைந்தாலும்
மறக்காத உங்கள் நினைவுகள்
ஐயா எங்களை விட்டுப் பிரிந்தாலும்
பிரிக்கமுடியாத எங்கள் உணர்வுகள்
கவலைகளை மாற்றும் காலங்கள்
ஆனாலும் ஆறாது என்றும் எங்கள் துயரங்கள்
கனிவான உங்கள் பாசத்தினை எண்ணி
ஏங்கும் எம் நெஞ்சங்கள்.

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோயிலடி,
காரைநகர்.

அன்பு மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## கண்ணீர் அஞ்சலி

யா/சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர்
ம.தர்மசீலன் அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சற்குணேஸ்வரி மருதையினார்**
அவர்கள் இறைபதமடைந்ததையொட்டி அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் குழாம்*
யா/ சரசாலை ஸ்ரீ கணேசவித்தியாலயம்

## நன்றி நவிலல்

**அமரர் சின்னத்தம்பி அருளானந்தன்**
(முன்னாள் பிரதம ஆசிரியர் - தினகரன், தினமுரசு, தமிழ்நாதம்)



தோற்றம்
25.12.1947

மறைவு
08.04.2017

08.04.2017 அன்று திடீர்மறைவெய்திய எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடியும், நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், பத்திரிகைகள் மூலமும் ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல், சமூகப்பிரமுகர்கள், எனது கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், முக்கிய-மாக தினகரன் ஆசிரிய பீடத்தவர்களுக்கும், Former Daily News Editor திரு.திருமதி பாலசிங்கம் அவர்களுக்கும் மேலதிகமாக சகல உதவிகளையும் இறுதிவரை உதவிபுரிந்த சகோதரன் திரு.ப. இராஜேந்திரன் (இந்தியத் தூதுவராலயம் - கொழும்பு), சகோதரி திருமதி லலிதாவதி செல்வரத்தினம் (Women in need Jaffna), மருமகன் சட்டத்தரணி ரஜிந்தன் ராமேஸ்வரன் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மனைவி - திருமதி உலகவதி அருளானந்தன்
(ஓய்வுநிலை ஆசிரியை - கொ/விவேகானந்தா தேசியக் கல்லூரி- கொழும்பு 13)
பிள்ளைகள் - அருண் (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரான்ஸ்)

இல.106, மேபீல்ட் ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு
17 . 09 . 1972



இறப்பு
14 . 03 . 2017

**திருமதி சு.டெல்வின் டெறிற்ரா**

அன்பிலும் பண்பிலும் சிறந்து நின்று அடுத்தவரின் மனதினிலே நிறைந்து நின்று
அழியாத உருவமாய் மனதில் நின்ற அன்புறவே நீ பிரிந்து சென்றதெங்கே?

குடும்பத் தலைவியாகத் திகழ்ந்தவளே துள்ளித்திரிகின்ற உன்னுருவை
அள்ளிச் சென்றுவிட காலனவன் கொண்ட காரணத்தை யாரறிவார்?

அன்பான குடும்பத்தைத் தவிக்கவிட்டு அரவணைத்த உறவுகளைக் கதறவிட்டு
அவசரமாய் நீ மறைந்த மாயமென்ன? அன்புறவே வாய்திறந்து பேசாயோ?

உம் பிள்ளைகளும், கணவனும் கலங்கித் துடிக்க
வார்த்தைகள் ஏதுமின்றி நீர் எங்கே சென்றீர்

வாழ்க்கைச் சரித்திரத்தில் இறப்பின் பின்பும்
நீர் என்றும் எம் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்.

18/1, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# நன்னீர் இன்றி நாளாந்தம் அல்லாடும் அவல நிலைமை

## ஊர்காவற்றுறை சந்தை வியாபாரிகளும் அந்தப் பகுதி மக்களும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.13
ஊர்காவல்துறையில் நிலை கொண்டுள்ள கடற்படையினரும், பொலிஸாரும் நாளாந்தம் பொதுக் கிணறுகளில் இருந்து அதிகளவு நீரைப் பயன்படுத்தும் நிலையில் ஊர்காவற்றுறைப் பொதுச் சந்தையில் நன்னீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்களும், வியாபாரிகளும் விசனம் தெரிவித்தனர்.

"கடந்த காலங்களில் சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள நீர்த் தாங்கிக்கு பவுசர் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டது. அவ்வாறு நிரப்புவது கடினம் என்று கூறி நீர்த் தாங்கிக்கு அருகே ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டது. அதன் மூலம் நீர்த்தாங்கிக்கு தண்ணீர் நிரப்பப்பட்டது. ஆழ்துளைக் கிணற்றில் பெறப்படும் நீர் உவர் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. அந்த நீரைப் பயன்படுத்தி அங்குள்ள கட்டடங்களை வியாபாரிகள் சுத்தம் செய்யவதால் நிலங்களில் உப்பு தன்மை படிவதுடன் கட்டடத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பிகளும் உக்குகின்ற நிலைமை காணப்படுகின்றது.

எமது தேவைகளுக்கு நன்னீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள கடற்படையினரும், பொலிஸாரும் நாளாந்தம் பொதுக் கிணறுகளில் இருந்து அதிகளவு நீரைப் பயன்படுத்தும் நிலையில் நாம் தண்ணீருக்கு அல்லாடும் நிலை காணப்படுகின்றது. சந்தைக் கட்டத் தொகுதியில் இருந்து வெளியேறும் கழிவு நீரை அகற்றுவதற்கான எந்த உபாயங்களும் இல்லை. நீர் சந்தைக்குள் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. நுளம்புப் பெருக்கமும் அதிகமாக உள்ளது." என்று அவர்கள் தெரிவித்தனர்.

"ஊர்காவற்றுறை மக்களுக்கான குடி தண்ணீரை நாளாந்தம் நீண்ட தூரம் சென்றே பவுசர்கள் மூலமாகக் கொண்டுவர வேண்டியுள்ளது. சாட்டி கிணற்றில் உள்ள நீரையே எடுத்து வருகின்றோம். அந்தக் கிணற்றில்தான் கடற்படையினரும் பொலிஸாரும் தங்களுக்கு தேவையான நீரையும் எடுக்கின்றனர். இக்கட்டான நிலையிலும் நாம் பொதுமக்களுக்கான குடி தண்ணீர் வழங்குகின்றோம். அதே போலவே சந்தை கட்டடத்தொகுதிக்கும் நீரை வழங்கி வந்தோம். அந்த நீரை அவர்கள் முறையற்ற விதத்தில் குளிப்பதற்கும் வேறு அநாவசிய தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். அதைக் கருத்திற் கொண்டே அங்குள்ள கட்டடங்களை கழுவுவதற்கு மட்டும் பயன்படுத்த என ஆழ்துளைக் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்தோம்.

குடி தண்ணீர் பயன்பாட்டுக்காகப் பிரத்தியேகமான 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்றை வைத்து குடி தண்ணீர் விநியோகம் செய்து வருகின்றோம். அந்த நீரை கூட சில வீணான பயன்பாட்டுக்கு உட்படுத்துகின்றனர் எனச் சிலர் எம்மிடம் நேரடியாக வந்து முறையிடுகின்றனர்.

அண்மையில் நடந்த சபைக் கூட்டத்தில் சந்தைக்கு இருக்கின்ற அளவைவிட மேலதிக நீரை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய ஆயிரம் லீட்டர் தண்ணீர் சேமிக்கக் கூடிய நீர்த்தாங்கியை அமைத்து தருகின்றோம் என்று கூறியுள்ளோம். அதற்கான பணிகள் இந்த வாரத்தில் முன்னெடுக்கப்பட வுள்ளன. வறட்சிக்கு மத்தியில் பெரும் சிரமங்களுடன் நாங்கள் வழங்கி வரும் குடிதண்ணீரை தகுந்த முறையில் பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும். என்று ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ற-8)

# கிளி. வைத்தியசாலை காணி விவகாரம் அமைச்சரின் செயலர் ஊடாக விளக்கம்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப்.13
கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தின் ஏ9 வீதியோரம் உள்ள காணியை அதன் உரிமையாளர் எனக் கூறியவருக்கு வழங்கலாம் என்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளமை தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஊடாக விளக்கம் கோரப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கென பரிந்துரைந்த காணியில் தனது சொந்தக் காணி உள்ளது. ஏனையோருக்கு நட்ட ஈட்டுப் பணம் வழங்கப்பட்ட போதும் தனக்கு வழங்கப்படவில்லை என்று ஒருவர் விண்ணப்பித்ததை அடுத்துஅவரதுநிலத்தைவிடுவிக்கலாம் என்று சுகாதாரத்துறை அதிகாரி தன்னிச்சையாகப் பரிந்துரைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தற்போது இயங்கும் நிலப்பரப்பு 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசால் சுவீகரிக்கப்பட்டது. முன்னர் வேறு ஒரு தேவைக்கெனவும் பின்னர் 1990ஆம் ஆண்டளவில் வைத்தியசாலைக்காகவும் ஒதுக்கப்பட்டது. இதன் போது பல தனியார் காணிகளும் சுவீகரிக்கப்பட்டமை உண்மையே. அவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

2005ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே புதிய வைத்தியசாலை அமைக்கப்பட்டது. காணி சுவீகரிப்பு இடம்பெற்ற காலத்துக்கு முன்பே நாட்டைவிட்டு இடம்பெயர்ந்து விட்டார் என்றும், தனது காணிக்கு எந்தவித நட்டஈடும் பெறவில்லை. காணியை மீள ஒப்படையுங்கள் எனவும் ஒருவர் பிரதேச செயலாளரை நாடியுள்ளார் என்று கூறப்படுகின்றது. பிரதேச செயலாளர் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியிடம் இது தொடர்பில் வினவியுள்ளார்.

பிரதேச செயலாளரால் கோரப்பட்ட கடிதம் தொடர்பில் மாகாணப் பணிப்பாளருக்கோ அல்லது சுகாதார அமைச்சின் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது நிலத்தை விடுவிப்பதில் ஆட்சேபனை கிடையாது என மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எழுத்தில் பதிலளித்துள்ளார். இதனால் வைத்தியசாலையின் எதிர்காலத் திட்டமிடல் அனைத்துக்கும் பங்கம் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அந்த நில உரிமையாளருக்கு நட்ட ஈடு வழங்கப்படவில்லையா என்பது ஆராயப்பட்டிருக்கவேண்டும். மாவட்டத்தின் எதிர்கால நன்மை ஆராயப்படவேண்டும். மாவட்டத்தின் வைத்திய வசதி ஆராயப்பட்டிருக்கவேண்டும்.

நில உரிமையாளருக்கு உண்மையில் நட்ட ஈடு வழங்கப்படவில்லை எனக் கண்டறியப்பட்டால் அதற்கு மாற்றுவழி என்ன என்பதனையே ஆராயவேண்டும்.

மக்களுக்குத் தேவையை பூர்த்தி செய்து இருக்கும் வளத்தைப் பெருக்கவே நாம் அரசிடம் ஊதியத்தைப் பெறுகின்றோமே அன்றி உள்ள வளத்தையும் வாரிக் கொடுத்துவிட்டு போவது எமது கடமை அல்ல.


இவை தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எவரின் ஒப்புதலுடன் எந்த ஆவணங்களின் அடிப்படையில் குறித்த பதில் வழங்கினார் என்பது தொடர்பில் ஆராய்ந்து பதிலளிக்க வேண்டும் என்று அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது - என்றார். (ற-101)

# வெலிக்கடை சிறையில் பிரமாண்ட பாற்சோறு

கொழும்பு, ஏப்.13
புதுவருடப் பிறப்பைக் கொண்டாடுவதற்காக வெலிக்கடை சிறைச்சாலையில் 410 கிலோ அரிசியைப் பயன்படுத்தி பிரமாண்டமான பாற்சோறு தயாரிக்கப்படவுள்ளது என்று வெலிக்கடை சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சிறைச்சாலையிலுள்ள சுமார் மூவாயிரம் கைதிகளுக்கான இந்தப் பாற்சோற்றைத் தயாரிக்க சிறைச்சாலை சமையலறையில் 70 கைதிகள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். நாளை காலை இந்தப் பாற்சோறு கைதிகளுக்குப் பரிமாறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரமாண்டமான தயாரிப்புக்கு 410 கிலோ அரிசி, 50 தேங்காய், ஏழு கிலோ மிளகாய், 50 கிலோ சின்ன வெங்காயம், 20 கிலோ எலுமிச்சை ஆகியவை பயன்படுத்தப்படவுள்ளன என்றும், இலங்கை சிறைச்சாலை வரலாற்றில் தயாரிக்கப்படும் மிகப் பிரமாண்டமான பாற்சோறு இதுவே எனவும் வெலிக்கடை சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-ம)



## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை ஜெயவீரசிங்கம் (ஜெசே)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஜெய வீரசிங்கம் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தையல்முத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், குணசிங்கம், பகவத்சிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் அபிராமி (லண்டன்), செந்தில்நிதி (லண்டன்), சிவகாமி (உரும்பிராய்), செந்தில்ஜனனி, செந்தில்குமார் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கலைமதி"
பலாலி வீதி, உரும்பிராய்.

தகவல்: சிவகாமி
ரவீந்திரன் (பெறாமகள்)

**021 223 0845, 077 685 7817**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

### கனகரத்தினம் சிவம்

(யாழ் மாநகரசபை,ஓய்வுபெற்ற வருமான வரி பரிசோதகர்)



அரசடி வீதி, திருநெல்வேலியைப் பிறப் பிடமாகவும் போக்காலை வீதி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சிவம் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து இராசமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் துளசிராம், பிரியராம், .சத்தியராம், கோகுலராம், திவ்யராம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தர்மபாலன், தவபாலன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் மனோகரன், மகேந்திரன், சிவபாலன், சிவமணி, புவனேந்திரன் . வசந்தா தேவி, ரூபதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் வித்தியாதரன் , நிவேதிகா, கோசல்யன், பிரவீன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

**0212055890**

### திருமதி வேலாயுதம் யோகம்மா



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவருமாகிய திருமதி வேலாயுதம் யோகம்மா கடந்த 08.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் சிவசந்திரலிங்கம் (கொழும்பு), சிவனடியான் (ஜேர்மனி), நித்தியானந்தன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சச்சிதானந்தன், வாசஸ்பதி (அச்சுவேலி), வாகேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி(கிராமஅலுவலர் - வேலணை), ஸ்ரீகரன் (ஜேர்மனி), ஜெயாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருவருள் (கொழும்பு), சுசீலா(ஜேர்மனி), வரதா (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), ராஜுகணபதி(அச்சுவேலி) காலஞ்சென்ற தனபாலசிங்கம், பரமேஸ்வரன் (கிரமஅலுவலர் - வேலணை), ரூபினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2017) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் மகள் இராஜேஸ்வரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிற்பனை வீதி,
வேலணை மேற்கு, வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 086 8540**

# அனைத்துக் குருதிவகைகளுக்கும் யாழ். போதனாவில் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையில் அனைத்துக் குருதி வகைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சித்திரைப்புதுவருடகாலம்என்பதால்குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது, இதனால் நாட்டில் உள்ள எல்லா குருதி வங்கிகளிலும் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

புதுவருடப் பிறப்பு காலத்தில் விபத்துக்கள் அதிகம் நடைபெறும் என்பதாலும், யாழ்ப்பாணம் மற்றும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில்விடுதிகளில்தங்கியுள்ளநோயாளர்களுக்கு குருதி தேவை என்பதாலும், குருதியைச் சேமித்துக் களஞ்சியப் படுத்த வேண்டிய தேவையுள்ளது. குருதிக் கொடையாளர்கள் குருதிக் கொ்டை வழங்க வேண்டும். நடமாடும் குருதிக் கொடை முகாம்களைஏற்படுத்தஅருகில்உள்ளகுருதிவங்கியுடன்தொடர்பு கொள்ள முடியும். என்றார். (ற-ரி)


## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

கரந்தன் சந்தி நீர்வேலியில் மிகவும் அமைதியான இடத்தில் 05 அறைகள், 02 விறாந்தை, சமையலறை, குளியலறை மற்றும் நீர்த்தாங்கி என்பவற்றுடன் அமைந்த பெரிய வீட்டுடன் கிணறு, மலசலகூடம் மற்றும் மரங்கள் நிறைந்த சோலையான 06 பரப்பு, 04 குழி விஸ்தீரணமான காணி ஒன்று ரூபா 45 இலட்சத்திற்கு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு - 077 036 5676

## இலவசம்

"பஞ்சாட்சரமும் சிவபுராணமும்" இனிய தெளிவுரையுடன் திரு கைலைமணிவேல் சுவாமிநாதன் அவர்களால் தொகுக்கப்பட்டு இடைக்காடு இந்துநெறிக் கழகத்தினரால் வெளியிடப்படுகின்றது. இந்த நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ள 21cm x 15 cm அளவுள்ள கடித உறையில் ரூபா 35/= பெறுமதியான முத்திரையை ஒட்டி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**கைலைமணிவேல் சுவாமிநாதன்**
மகாவித்தியாலய வீதி, இடைக்காடு, அச்சுவேலி.
மேலதிக விவரங்களுக்கு - 077 740 6484



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
076 585 9977 , 077 835 7307

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை



உ
சிவமயம்
"தொண்டர் நாள்தொறுந் துதிசெயவருள் செய் கேதீச்சரமதுதானே"

## அருள்மிகு கௌரி உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்

அருள்மிகு கௌரி உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயிலில் கருங்கல் திருப்பணி வேலைகளின் இரண்டாம் கட்டமாக கருங்கல்லால் அமைக்கப்படவிருக்கும் விமானங்களுக்கும் உட்பிரகார சந்நிதிகளுக்கும் கருங்கல் திருப்பணி முகூர்த்தமும் அத்திவாரவேலை ஆரம்பித்தலும் ஏவிளம்பி வருடம் சித்திரைமாதம் 4ம் திகதி திங்கட்கிழமை (17.4.2017) பூசைவழிபாட்டைத் தொடர்ந்து இறையருளுடன் நண்பகல் 12 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும்.

அடியார் பெருமக்களை இந்நிகழ்வில் கலந்து எம் பெருமான் அருளை பெறுமாறும் இத் திருப்பணிக்கு நன்கொடைதரவிரும்பும் அடியார்களை தாராளமாகத் தந்துதவுமாறும் திருப்பணிச்சபை சார்பில் வேண்டுகிறோம்.

புலவர்.அ.திருநாவுக்கரசு
செ.இராகவன்
இணைச் செயலாளர்கள்,
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை.


# ஒளி பாய்ச்சி மீன்பிடிப்பதால் உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு

*முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு*



முல்லைத்தீவு, ஏப்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒளி உபயோகித்து மீன்பிடிக்கும் தடை செய்யப்பட்டமுறைபயன்படுத்தப்படுகின்றது. அதனால் மீனவக் குடும்பங்கள் மிகவும்பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

முல்லைத்தீவு மாவட்டத்தில்கரைவலைத்தொழில் ஈடுபடுவதற்குரியபருவகாலம் இதுவாகும். இந்தக் காலப்பகுதிலேயே மீனவர்கள் வருமானம் பெற முடியும். தற்போது 12 மீனவர்கள்கரைவலைவளைக்கின்றனர். அதில் எந்தவித வருமானமும் பெறமுடியாத நிலையே தற்போதுள்ளது. கரை வலை மாத்திரமல்ல அனைத்து வகையான தொழில் செய்யும் மீனவர்களும் பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். வெளி மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வரும் மீனவர்கள் ஆழ் கடலில் ஒளி பாய்ச்சி சட்டவிரோதமான முறையில் மீன்பிடிக்கின்றனர். அதனாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

ஒளி பாவிக்கப்படுவதால் மீன்கள் கரைக்கு வருவதில்லை. இந்த நிலமை தொடருமானால் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும். என்றார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக சந்தைகளில் மீன் பெற்றுக்கொள்ள முடியாத நிலைகாணப்படுகின்றது. அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதாக உள்ளது."என்று பொதுமக்கள்தெரிவித்தனர். (ற-7)

# கிராம அலுவலர் வெற்றிடங்கள்; 28ஆம் திகதி நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஏப்.13

வடக்கில் உள்ள 246 கிராம அலுவலர் வெற்றிடங்களைநிரப்புவதற்குஎதிர்வரும் 28 ஆம் திகதி நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நேற்று இது தொடர்பில் உறுதியளித்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ்நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

வடக்கின் 5 மாவட்டத்தின் 917 கிராம சேவகர் பிரிவுகளிலும் 671 கிராம அலுவலர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். 246 கிராமஅலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. வெற்றிடங்களை நிரப்ப உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால்கடந்தஆண்டுவிண்ணப்பம் கோரப்பட்டு போட்டிப் பரீட்சை இடம்பெற்றது. நியமனங்கள்வழங்கப்படவில்லை. கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்ந்தும் நெருக்கடி நிலையே உள்ளது.

வெற்றிடங்களையும் நிரப்ப அமைச்சு உடன் ஆவனசெய்ய வேண்டும் என நேற்று அமைச்சின் செயலாளர் லலித்திடம் நேரில் சென்று வேண்டுகோள் விடுத்தேன். அதன்போதேசெயலாளர் மேற்படி உறுதி மொழியை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில்102கிராமஅலுவலர்களுக்கான வெற்றிடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 51 கிராம அலுவர்களுக்கானவெற்றிடங்களும், கிளிநொச்சியில் 20 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்களும், வவுனியாவில் 40 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்களும், மன்னாரில் 32 கிராம அலுவலர்கள் வெற்றிடங்களும் உள்ளன. இந்தத்தரவுகளும் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன. என்றார். (ற-101)

# கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு தண்டம்

முல்லைத்தீவு, ஏப்.13

முல்லைத்தீவு, புதுமாத்தளனில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரிடம் இருந்து 5.250 லீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் கடந்த 11 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு நீதிமன்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (ற-101)


## கார் விற்பனைக்கு

புத்தம் புதிய ஒரு மாதமளவில் இறக்குமதி செய்யப்பட்ட VITZ TOYATO (2015) Car விற்பனைக்குண்டு. Km 8 xxx (Regisation - 02/03/2017) பூரண வசதிகள் உள்ளடக்கப்பட்டது.

071 036 7904, 077 117 6591

## Civil Technology-A/L Group Class

* 2017/2018/2019 A/L மாணவர்களுக்கு தனியாகவோ/ குழுவாகவோ கற்றுக் கொடுக்கப்படும்.
* 2017 A/L மாணவர்களுக்கு துரித மீட்டல்களுடன் கடந்தகால வினாத்தாள்கள் செய்துவிடப்படும்.

077 177 3249

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாண கச்சேரிக்கு அருகில் 3 பேர் (பெண்கள்) தங்கியிருந்து படிப்பதற்கோ/ தொழில் புரிவதற்கோ உரியதான அறை வாடகைக்கு விடப்படும்.

077 737 4970, 077 737 4972

## தொலைந்துவிட்டது

வவுனியாவிற்கும் முல்லைத்தீவிற்கும் இடையில் மோட்டார் சைக்கிள், புத்தகம் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர் தொடர்புகொள்ளவும். சன்மானம் - வழங்கப்படும்.

077 613 8336


# உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு

மன்னார், ஏப்.13

வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மாகாணசபை நிதி ஒதுக்கீட்டினூடாக மன்னாரில் பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கினார். இந்த நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலியாறு மாதர், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் வெள்ளாங்குளம் கிராமஅபிவிருத்திச்சங்கம்ஆகியவற்றுக்கு ஒலிபெருக்கித் தொகுதிகளும், நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட அளவக்கை பங்கு ஆலயத்துக்கு ஓகன் வாத்தியக்கருவியும், மன்னார்பிரதேசச்செயலாளர்பிரிவுக்குட்பட்ட பனங்கட்டிக்கொட்டு கிழக்கு மாதர், கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ஒலி பெருக்கி தொகுதியும், தரவன்கோட்டை மாதர், கிராம அபிவிருத்திச்சங்கதுக்கு ஒரு தொகுதி சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டன. (ற-56)



# நியமனம் தொடர்பான அரசின் நிலையை விளக்க வேண்டும்

## தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.13

தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தும் நிலையில், தொடருந்துந் கடவைக் காப்பாளர்கள் தொடர்பாக அரசு என்ன திட்டம் வைத்துள்ளது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மாகாண தொடருந்துக்கடவைக்காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.றொகான் ராஜ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 628 தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் கடமையாற்றுகின்றனர். எதிர்காலத்தில் அவர்கள் அரச பணியாளர்களாக உள்வாங்கப்படுவார்களா என்பது தொடர்பாக அரசு தெளிவான பதிலைக் கூற வேண்டும்.

எமது பிரச்சினை தொடர்பாகக் கடந்த 3 ஆண்டுகளாக எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. அதையடுத்தே நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளோம்.

நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு தொடருந்துத் திணைக்களப் பணியாளர்களாக நாம் நியமிக்கப்பட வேண்டும். அல்லது வீதி அதிகார சபையில் உள்ள வெற்றிடங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அனைத்து அரச பணியாளர்களுக்கும் வழங்கப்படும் பண்டிகை காலக் கொடுப்பனவு எமக்கும் வழங்கப்பட வேண்டும். எங்கள் குடும்பங்கள் எந்தப் பண்டிகையையும் கொண்டாடும் நிலையில் இல்லை. எமக்கு வழங்கப்படும் 7 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவில் எமது நாளாந்தக் குடும்ப வாழ்வைக் கொண்டு நகர்த்துவதே முடியாத காரியமாகவுள்ளது. இந்த நிலையில் எமது குடும்பங்கள் எவ்வாறு மகிழ்ச்சியாகப் பண்டிகையைக் கொண்டாட முடியும்?.

எமது பிரச்சினைக்குப் புத்தாண்டுக் காலத்தில் அரசு சரியான தீர்வை வழங்க வேண்டும்.

பணிப்புறக்கணிப்பு நடத்தப்படுவதால் தொடருந்து கடவைகளூடாகப் பயணிக்கும் மக்கள் அவதானத்துடன்செயற்படவேண்டும் என்று கோருகின்றோம். என்றார். (ற-21)

# மன்னாரில் தொடர்கின்றன நில மீட்புப் போராட்டங்கள்



முள்ளிக்குளம்



முசலி

மன்னார், ஏப்.13

தமது பூர்வீக நிலங்களில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி முள்ளிக்குளம் மக்கள் நடத்திவரும் போராட்டமும், பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தி மறிச்சுக்கட்டியில் மக்கள் நடத்திவரும் போராட்டமும் நேற்றும் தொடர்ந்தன.

முள்ளிக்குளம் மக்கள் தமது கோரிக்கையைவலியுறுத்திநேற்று 21ஆவது நாளாகவும், மறிச்சுக்கட்டியில் மக்கள் நேற்று 17ஆவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.



முள்ளிக்குளத்தில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை நேற்றுமுன்தினம் சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழு சந்தித்துக் கலந்துரையாடியது. மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாளாந்தம் மக்கள் போராட்டக் களத்துக்குச் சென்று போராட்டத்தில் பங்கேற்கின்றனர். தமது நிலங்கள் விடுவிக்கப் படும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.

முசலிப் பிரதேசத்தில் மக்களின் வாழ்விடங்களை வன எல்லைப் பகுதிகளாக அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மறிச்சுக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலை அரச தலைவர் உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் மக்கள், அது வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் தெரிவித்தனர். (ற-56)

# 'கரை எழில்' நூலில் சர்சைக்குரிய கருத்துகள் நீக்கம

கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலத்தின் கலாசார விழாவில் வெளியிடப்பட்ட கரை எழில் நூலில்வெளியான சர்ச்சைக்குரிய கருத்துக்கள் நீக்கப்பட்டுள்ளன என்று கரைச்சிக் கலாசாரப் பேரவை தெரிவித்தது.

அந்த நூலில் கிளிநொச்சியும் மலையகத் தமிழர்களும் என்னும் கட்டுரை வெளியாகியிருந்தது. அதில் கிளிநொச்சி வாழ் மலையகத் தமிழர்களை இழிவுபடுத்தும் விதமாகக் கருத்துக்கள் வெளியாகியிருந்தன என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து கலாசார விழாவில் வெளியிடப்பட்ட 15 வரையான நூல்களைத் தவிர ஏனைய நூல்களில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் நீக்கப்பட்டன என்று கலாசாரப் பேரவை தெரிவித்தது. (ற-35)

# சாரதி மீது தாக்குதல் என முறைப்பாடு

தென்மராட்சி, ஏப்.13

பயணிகளை ஏற்றுவதற்காகத் தரித்து நின்ற இ.போ.ச. பேருந்துச் சாரதியை, தனியார் பேருந்தின் நடத்துநர் ஒருவர் தாக்கினார் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை வரணி, சிட்டிவேரம் அம்பாள் ஆலயத்துக்கு முன்பாக நடந்துள்ளது.

பயணிகளை ஏற்றும் விடயத்திலேயே முறுகல் நிலை ஏற்பட்டு தாக்குதல்நடத்தப்பட்ட என்று சாரதியால்முறைப்பாடுசெய் யப்பட்டது. விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ற-9)

# தியாகங்களை மனதில் இருத்தி பண்பாட்டைக் காக்கவேண்டும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், ஏப்.13

எமது இனத்துக்காக இதுவரை காலமும் கொடுக்கப்பட்ட உயர்ந்த தியாகங்களை மனதில் இருத்தி இளைஞர்கள் கல்வி, விளையாட்டு, பண்பாடு என்பவற்றைக் கட்டிக் காக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார், நானாட்டன் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முருங்கனில் அண்மையில் சண்றையில் விளையாட்டுக் கழகம் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தியது. அதன் இறுதியாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது

இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுவதை வரவேற்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுவது குறைந்துள்ளதாலேயே இளைஞர்கள் வழிதவறிப் போகின்றனர். எமது இனத்துக்காக இத்தனை காலமும் கொடுக்கப்பட்ட விலைமதிப்பற்ற உயிர்களுக்கு பலனில்லாது செய்துவிடக் கூடாது.

எமது அபிவிருத்தி, கல்வி, பண்பாடு, கலாசாரம்என்பவற்றைஇளைஞர்களே கட்டிக் காக்க வேண்டும்.

சுற்றுப்போட்டியை நடத்திய விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட அணிகளின் விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்திக்கு 50 ஆயிரம் ரூபாவும் 2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்குகின்றேன். மைதான அபிவிருத்திக்கான நிதியை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பேன்–என்றார். (ற-21)

# வவு. கற்பகபுரத்துக்கு 347 நிரந்தர வீடுகள்

வவுனியா, ஏப்.13

வவுனியா, கற்பகபுரம் கிராமத்தைச் சேர்ந்த 347 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கற்பகபுரத்தில் 78 வீடுகளும், புதிய கற்பகபுரத்தில் 269 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. இந்த வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 5 லட்சம் ரூபா பெறுமதியானவையாக அமைக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் த.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டப் பணிப்பாளர் திருமதி டி.குறூஸ், சிறிரெலா கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, சிறிரெலோ கட்சியின் இளைஞர் அணித் தலைவர் ப.கார்த்திக், கற்பகம் கிராம அலுவலர் த.தர்சிகா ஆகியோர் இணைந்து அடிக்கல் நட்டனர். (ற-21)



# புகையிலை மாற்றுப் பயிரால் எந்தவித இலாபமும் இல்லை

## செய்கையாளர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஏப்.13

புகையிலைச் செய்கையை நிறுத்தினால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மாற்றுப் பயிர்ச் செய்கையில் எந்த இலாபமும் இல்லை என்று யாழ். மாவட்ட புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

போதைப் பொருள் அற்ற நாடு என்ற செயற்றிட்டம் கடந்த ஆண்டு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2020ஆம் ஆண்டு போதைப் பொருளற்ற நாட்டை உருவாக்கும் நோக்குடன் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நாடு முழுவதும் போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக நாட்டில் புகையிலைச் செய்கையை முற்றாக நிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் புகையிலைச் செய்கை மேற்கொள்பவர்கள் அதைத் தவிர்த்து மாற்றுப் பயிர்களைப் பயிரிட வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் விவசாயப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

மாற்றுப்பயிர்ச்செய்கையால்தமக்கு எந்தவித இலாபமும் இல்லை என்று புகையிலைச் செய்கையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். அதேவேளை, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு புகையிலைச் செய்கை அதிகளவில் பயிரிடப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. (ற-ரி)

# வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 100 மெ.தொன் அரிசியை இந்தியா வழங்கும்

## அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அறிவிப்பு



கொழும்பு.ஏப்.11
"மோசமான வறட்சியை எதிர்நோக்கியுள்ள இலங்கைக்கு உதவும் முகமாக , 100 மெற்றிக்தொன் அரிசி விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும். ஏற்கனவே குடி தண்ணீர் விநியோகத்துக்கான தண்ணீர்த் தாங்கிகளை இந்தியா வழங்கியுள்ளது."

இவ்வாறு இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் குறிப்பிட்டார்.

இந்திய நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "வறட்சி நிவாரண உதவிகளை வழங்குமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை அடுத்து, 8 குடிதண்ணீர் விநியோகத் தண்ணீர்தாங்கிகளையும், 100 மெற்றிக்தொன் அரிசியையும்வழங்க இந்தியா முடிவெடுத்தது. அதற்கமைவாகபாரவூர்திகளில்பொருத்தப் பட்ட 8 தண்ணீர்த் தாங்கிகள் கடந்த மார்ச் 21ஆம் திகதி இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன. அயல்நாடுகள்நெருக்கடியில் சிக்கும் போது உதவுகின்ற முதல்நாடுஎன்றவகையில்இந்த அவசர உதவியை இந்தியா அனுப்பி வைத்தது. அத்துடன் விரைவில் 100 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும்" என்று சுஷ்மா சுவராஜ் குறிப்பிட்டார்.

அதேவேளை. இலங்கைக்கு வறட்சி நிவாரணமாக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பாகிஸ்தான் அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

> “8 குடிதண்ணீர் விநியோகத் தண்ணீர்தாங்கிகளையும், 100 மெற்றிக் தொன் அரிசியையும் வழங்க இந்தியா முடிவெடுத்தது. அதற் கமைவாக பாரவூர்திகளில் பொருத்தப்பட்ட 8 தண்ணீர்த் தாங்கிகள் கடந்த மார்ச் 21ஆம் திகதி இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன.

# அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும்

## சமரவிக்கிரம தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.11
"சீனாவுடனான அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமைக்கு கொழும்பு அரச தரப்பினரே காரணம். எனினும் இந்த மாத இறுதிக்குள் குறித்த உடன்பாட்டில் இலங்கை அரசு கையழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

இவ்வாறு அனைத்துலக வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக சீனாவுடனான உடன்பாட்டை இந்த மாத இறுதிக்குள் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசு விரும்புகிறது. எமது தரப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எமது பக்கத்தில் தான் பந்து இருக்கிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்வதற்காகச் சீனாவிடம் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி இலங்கை அரசுடன் சீனா பேச்சு நடத்தக்கூட இல்லை. எமது பதிலுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் இந்த மாத இறுதிக்குள் இந்த உடன்பாட்டில் இலங்கை அரசு கையெழுத்திடும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானில் இருந்து எதிர்வரும் 16ஆம் திகதி நாடு திரும்பிய பின்னர், துறைமுக உடன்பாடு தொடர்பில் எவ்வளவு குத்தகைக் காலத்துக்கு இணங்கலாம் என்று நாம் முடிவு செய்ய வேண்டும்." என்றார். (ஐ)

# மே தினக்கூட்டத்தை மு.கா. நடத்தாது

கொழும்பு,ஏப்.11
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மே தினத்தன்று எந்தவொரு கூட்டங்களையும், நிகழ்வுகளையும் நடத்தாது. ஆனால் எமது கட்சிக்கு அழைப்பு விடுக்கும் கூட்டங்களில் கலந்து கொள்வோம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் மே தினக் கூட்டத்தில் மட்டுமே கலந்து கொள்வோம் என்றும் அவர் தெரிவித்தார். தம்புள்ளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் வெளியேறிச் செல்லும்போது, ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# பன்னாடுகளை வரவழைப்பதால் கிடைக்காது தீர்வு

## தமிழர் தரப்பின் நேரடிப் பேச்சே சிறந்தது என்கிறார் சம்பிக்க

கொழும்பு, ஏப். 11
"நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுழ் என்றால், தமிழர் தரப்பு நேரடியாக அரசுடன் பேச்சுக்கு வர வேண்டும். அதை விடுத்து பன்னாட்டை வரவழைத்து தீர்வு காண நினைத்தால், அது ஒரு போதும் சாத்தியப்படாது. கூட்டு அரசின் ஆட்சியை மாற்றியமைக்கலாம் என்று சிலர் கனவு காண்கின்றனர். அனைத்துப் பிரச்சினைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு கூட்டு அரசின் பயணம் தொடரும்."

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்களின் பின்னர் கூட்டு அரசு பிளவுபடும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதனோடு பன்னாட்டுப் பொறுப்புக் கூறல் விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"குறித்த பிரதேசங்களுக்கு மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் மூலம் அரசியல் செய்யும் யுகம் கடந்த அரச தலைவர் தேர்தலுடன் முடிவுக்கு வந்துள்ளது. இந்த அரசு நாட்டின் சகல பகுதியிலும் அனைவருக்கும் சென்றடையும்



வகையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இலங்கையைப் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றி, அதன் மூலம் நாட்டின் வறுமை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணும் வகையில்அரசுசகலமுயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

ஒரு சிலர் போயா தினங்களைக் கணக்கில் கொண்டு, அதன் மூலம் ஆட்சியை மாற்றுவதாகக் கூறி வருகின்றனர். அடுத்த தேர்தலின் போதும் தனித் தனியாக நாம் தேர்தலில் போட்டியிடலாம். எனினும் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னும், பொதுத் தேர்தலின் பின்னும், அதேபோன்று அரச தலைவர் தேர்தலின் பின்னரும், பிரதான இரண்டு கட்சிகளும் இணைத்து ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும். அதன் மூலம் ஆட்சி கவிழும் என்று சிலர் கனவு காண்கின்றனர். இந்த நாட்டின் அபிவிருத்தி மற்றும் தேசியப் பிரச்சினைகள் மற்றும் பன்னாட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும் வெற்றி கொண்டு அதன் மூலம் நாட்டில் மறுமலர்ச்சி ஒன்றை உருவாக்கும் வரையில் கூட்டு அரசின் பயணம் தொடரும்.

இன்று வடக்கு - கிழக்கில் இனவாதம் பேசிக்கொண்டு அதன் மூலம் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று முயற்சிக்கும் நபர்களுக்கு எமது அரசின் மூலம் எந்தவித வாய்ப்புகளும் ஏற்படுத்திக்கொடுக்க முடியாது. புதிய அரசமைப்பின் மூலம் இனவாதம் பரப்புவதையோ அல்லது நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதையோ நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பன்னாட்டுத் தரப்புடன் இணைந்து நாட்டைப் பிரிக்க எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதற்குக் கூட்டு அரசே தடையாகச் செயற்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

பொறுப்புக் கூறல் விடயத்தில் அரசு சரியான முறைமையைக் கையாண்டு வருகின்றது. நாம் எமது உள்ளகப் பொறிமுறை மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கச் செயற்பட்டு வருகின்றோம்-"என்றார். (ஐ-10)

# மகிந்தவால் நாட்டின் ஆட்சியை மாற்ற முடியாது

கொழும்பு.ஏப்.11
"தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஜப்பான் செல்கின்றார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மகிந்த சுதந்திரக் கட்சியுடன் இணைந்து. முடியுமானால் ஆட்சியைக் கவிழ்த்துக் காட்டட்டும். எதைச் செய்தாலும் மகிந்தவால் நாட்டின் ஆட்சியை மாற்றியமைக்க முடியாது"

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் மகிந்த ராஜபக்சவுக்குச் சவால் விடுத்தார்.

மகிந்தவின் கும்பலுக்கு நாம் பயந்தவர்களல்ல. கூட்டு எதிரணிக்குப் பயந்தால் நாம் காலிமுகத்திடலில் மே தினக் கூட்டம் நடத்துவதற்கு இடமளித்திருக்க மாட்டோம். மகிந்தவால் நாட்டின் ஆட்சியை மாற்றி அமைக்கவே முடியாது" எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மக்கள் மனங்களை இணைப்பவர்களே உண்மையான ஆன்மிகத் தலைவர்கள்

## அரச தலைவர் எடுத்துரைப்பு

கொழும்பு, ஏப். 11
நல்லிணக்கத்தைப் பலப்படுத்தி அனைத்துச் சமயத் தத்துவங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மக்களின் மனங்களை இணைக்கும் பணியின் உண்மையான தூதுவர்களாக இருப்பவர்களே ஆன்மிகத் தலைவர்கள்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய மற்றும் சமய நல்லிணக்கம் தொடர்பான கலாசார நிகழ்வு மற்றும் கலாசூரி மார்சலின் ஜயகொடி திருத்தந்தைக்கு கௌரவமளிக்கும் நிகழ்வு தங்கொடுவைச் சிங்கக்குளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
"திரிபிடகம், விவிலியம், அல்குர்ஆன், பகவத் கீதை ஆகியவற்றில் நாம் எதிர்பார்க்கும் நல்லிணக்கத்துக்கு வழிகாட்டப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகள், இந்து, இஸ்லாமியம், கத்தோலிக்கச் சமயத் தலைவர்களுக்கு இதனைச் சமூகத்தில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு உள்ளது. அனைத்து இனங்களுக்கு மத்தியில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திலேயே வரலாற்றுக் காலம் தொட்டு எமது நாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இன்றும் அனைத்து மக்கள் மத்தியில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்திப் பலமான மக்கள் சமூகமாக நாம் முன்னேறிச்செல்ல வேண்டும்" என்று அரச தலைவர் தெரிவித்தார்- என்றுள்ளது. (ஐ-10)

# வடக்கில் தொடர்கிறது சந்தைக் கழிவு முறை

## அதிகாரிகள் பாராமுகம் என விவசாயிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.11

விவசாய விளைபொருள்களுக்கு வடக்கு மாகாணத்தில் கழிவு அறவிடப்படும் முறைமை நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ளன. அது இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

"சந்தைக் கழிவு முறையை நிறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துக்குரியது." என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கொள்கைப் பிரகடனமாக வடக்கு மாகாணத்தில் 2014ஆம் ஆண்டு முதல் விவசாய விளைபொருள்களுக்கு 10 சதவீதக் கழிவு அறவிடப்படும் முறை இல்லாது ஒழிக்கப்படும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

சந்தைக் கழிவு முறை வடக்கு மாகாணத்தில் தொடர்கின்றது என்பதை அறிந்திருந்தும் அதிகாரிகள் மௌனமாக இருப்பதும், நடைமுறை நிறுத்தப்படும் என்று கூறிய அமைச்சர் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காதிருப்பதும் வேதனையளிக்கின்றது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

"மரக்கறிகளை திருநெல்வேலி மற்றும் மருதனார்மடம் சந்தைகளில் விற்பனைக்கு எடுத்துச் செல்வது வழக்கம். மரக்கறி வகைகளுக்குக் கழிவுகள் அறவிடப்பட்டே எமக்குரிய பணத்தை வியாபாரிகள் தருவார்கள். 50 கிலோ மரக்கறியை விற்பனைக்காகக் கொண்டு செல்லும்போது 5 கிலோ வரை கழிவு அறவிடப்படுகின்றது. கழிவு அறவிடப்படுவதால் நாங்கள் விவசாயத்துக்கு செலவு செய்யும் பணத்தை மீள முழுமையாகப் பெறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது." என்று சங்குவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

"நான் பத்து வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்து வருகின்றேன். எங்கள் விளைபொருள்களுக்கு இப்போதும் பத்துக்கு ஒன்று என்று கழிவு அறவிடப்படுகின்றது. வடக்கு விவசாய அமைச்சு கழிவு அறவிடக் கூடாது என்று சில வருடங்களுக்கு முன்னர் அறிவித்தது எங்களுக்குத் தெரியும். ஆனால் சந்தை வியாபாரிகள் அதனைக் கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை. அதையும் மீறிச் சந்தை வியாபாரிகளிடம் சத்தம் போட்டால் மரக்கறியை எடுக்கமாட்டோம் என்று சொல்கின்றார்கள்" என்று கூறுகின்றார் இணுவிலைச் சேர்ந்த பாக்கியநாதன் என்ற விவசாயி.



(கோப்புப்படம்)

"மரக்கறிகளை விற்பனைக்காக விவசாயிகளிடமிருந்து நாம் சந்தையில் வைத்து கொள்வனவு செய்யும்போது கழிவுகள் அறவிடப்படுவது வழக்கம். விவசாயிகளிடம் இருந்து நாம் கொள்வனவு செய்யும் தொகையிலிருந்து சிறு தொகை இலாபத்தை வைத்தே நாம் வியாபாரத்தில் ஈடுபடுகின்றோம். கொழும்பு, தம்புள்ளை போன்ற பிரதேசங்களில் கழிவு முறைமை இல்லை. அங்கு கொள்வனவு செய்யப்படும் மரக்கறி வகைகளின் பெறுமதிகளிலும் பார்க்க அதிக விலையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தக் கழிவு முறைமையை நமது விவசாயிகளேபழக்கத்துக்குகொண்டு வந்தார்கள்." என்று மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் சிலர் தெரிவித்தனர்.

"ஆரம்ப காலத்திலிருந்தே சந்தை வியாபாரத்தின் போது கழிவு அறவிடப்பட்டு வருகின்றது. இதனை விவசாயிகளின் சம்மதத்துடனேயே அறவிடுகின்றோம். இந்தச் சந்தையில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சந்தைகளிலுமே இந்த கழிவு அறவிடப்படும் முறை இருக்கின்றது" என்று கூறுகின்றனர் திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள்.

"பொதுச் சந்தைகளைக் குத்தகைக்கு வழங்கும்போது விவசாயிகளிடம் கழிவுகள் அறவிடக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போதும் கழிவுகள் அறவிடப்படுகின்றன என்று அறிகின்றோம்.

நாங்கள் சந்தைக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் கேட்டால் ஒரு தரப்பு விவசாயிகள், கழிவுகள் அறவிடப்பட்டாலும் பரவாயில்லை எங்களின் மரக்கறிகளை விற்பனை செய்துவிட வேண்டும் என்கின்றனர். இன்னொரு தரப்பு விவசாயிகள் நாங்கள் கொண்டுவரும் மரக்கறிகளுக்கு கழிவு அறவிடப்படுகின்றது என்று கூறுகின்றனர்.

இது தொடர்பாக முறைப்பாடுகளைத் தாருங்கள். நாங்கள் முறைப்பாடுகளைப் பெற்று அதனை விசாரணை செய்கின்றோம் என்றால் யாரும் முறையிடுகின்றனர் இல்லை. அவ்வாறு முறைப்பாடு கிடைத்து சந்தையில் கழிவு அறவிடப்படுவது உறுதியானால் அவர்களைச் சந்தை கட்டடத் தொகுதிக்குள் உள்நுழைய அனுமதி மறுக்கப்படும். கழிவு அறவிடலுக்கு எதிராக எமது திணைக்களம் முறையான நடைமுறையை பின்பற்ற முடியாதுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். இதற்கு என்று தனியாக நாங்கள் ஆள்களை நியமித்துக் கண்காணிப்புக்களை மேற்கொள்ளவில்லை." என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார். (ற-5.8)

## மறிச்சுக்கட்டி மக்களின் போராட்டம் தொடர்கிறது

### நவவி எம்.பி. நேரில் சென்று ஆதரவு



மன்னார், ஏப்.11

தமது வாழ்வாதார நிலங்கள் வன எல்லைப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மறிச்சுக்கட்டி மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அரச தலைவரால் வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.



மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினருமான நவவி நேற்று முன்தினம் போராட்டக் களத்துக்குச் சென்றார். அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மாந்தை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சனூஸ், அமைச்சரின் இணைப்பாளர் முஜாஹிர் ஆகியோரும் உடன் சென்றனர்.

வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று மக்கள் தெரிவித்தனர். தமது போராட்டத்துக்கு கட்சி பேதமின்றி அரசியல் தலைவர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-56)

## கூரையுடைத்து திருட்டு

யாழ்ப்பாணம் அரியாலை ஏவி வீதியிலுள்ள பல சரக்குக் கடையின் கூரையுடைத்து பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடையின் மேல் கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் கடையிலிருந்த சிகரட் பைக்கற்கள், பால் மா பைக்கற்கள் எனப் பல பொருள்களைத் திருடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. திருட்டு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி1)

## நள்ளிரவில் வீடு புகுந்து தாக்குதல்

பளை, ஏப்.11

பளை, இத்தாவிலில் நள்ளிரவு வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதவர்கள் வீட்டில் இருந்தவர்களைத் தாக்கியதுடன், உடமைகளையும் சேதப்படுத்தி விட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகப் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

அந்தப் பகுதி வாழ்வின் எழுச்சித் திட்டத் தலைவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. வாகனத்தில் வந்திறங்கிய கும்பலே தாக்குதல் நடத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-9)

## படைகள் வசம் உள்ள காணிகள் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், ஏப்.11

மன்னார் மாவட்டத்தில் முப்படைகளின் வசம் 3 ஆயிரத்து 294 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது என்று தேசிய நல்லிணக்கச் செயலணி தெரிவித்துள்ளது. அந்தத் தரவுகள் அப்பட்டமான பொய்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினர் வசம் 20.45 ஏக்கர் தனியார் காணிகளும், ஆயிரத்து 942.27 ஏக்கர் அரச காணியும் உள்ளன. கடற்படையினர் வசம் 101 ஏக்கர் தனியார் காணியும் ஆயிரத்து 3.70 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன. விமானப் படையினர் வசம் தனியார் காணிகள் இல்லாத போதும் 227 ஏக்கர் அரச காணி உள்ளது. முழுவதுமாக 3 ஆயிரத்து 294.42 ஏக்கர் நிலம் மட்டுமே படையினர் வசம் உள்ளன என்று கூறப்படுகின்றது.

உண்மைக்குப் புறம்பானதும், உள் நோக்கம் கொண்டு தயார் செய்யப்பட்ட தரவாகவுமே இதைக் கருதவேண்டியுள்ளது. வடக்கில் படையினர் இருந்த லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களும் விடுவிக்கப்பட்டுத் தற்போது சிறிய அளவிலேயே உள்ளனர் என்ற மாயத் தோற்றத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது என்பதனை செயலணி புரிந்துகொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் சன்னார் பகுதியில் மட்டும் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பிலே இராணுவத்தினர் தற்போதும் சூட்டுப் பயிற்சி செல் தாக்குதல் பயிற்சியில் ஈடுபடுவது தெரியுமா என்பதை அறிய விரும்புகின்றேன். வெள்ளாங்குளம் பகுதியில் உள்ள ஆயிரம் ஏக்கர் தென்னந்தோட்டம் படையினரின் கொள்வனவுச் சொத்தா என்பதையும் கூற வேண்டும். மாவட்டத்தில் கடற்படையினர் இல்லாத இடமே இல்லை என்ற நிலையில் தற்போது மக்கள் தமது நிலம் எனக் கேட்டுப்போராடும் முள்ளிக்குளத்திலுள்ள 600 ஏக்கரும் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது என்றே நாம் கருதுகின்றோம்.



நாம் இனம் காட்டியுள்ள 5 ஆயிரத்து 100 ஏக்கரையும் இணைத்து மொத்தமாக 8 ஆயிரத்து 394 ஏக்கர் நிலத்துக்கு அதிகமான பிரதேசம் தற்போதும் படையினரின் ஆக்கிரமிப்பிலேயே உள்ளது. மன்னாரில் மட்டுமல்ல. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட நிலையில் அந்த மாவட்டங்களில் படையினரிடம் உள்ள நிலங்கள் தற்போது வெளிக்கொணரப்பட்டுள்ளன.

கூட்டரசில் மக்கள் நேர்மையான செயற்பாடுகளின் மூலம் தீர்வை எட்ட விரும்புகின்றனர். போலியான தரவுகளை வெளியிட்டு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதை அல்ல என்றார். (ற-101)

## நீ யூதாசா? இயேசுவின் சீடனா?

குற்றமற்ற இரத்தத்தை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்த துரோகி யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுடன் தன் வாழ்வை முடித்தான்.

நம்பிக்கைத் துரோகத்தால் புண்படும் போது அதனைப் பற்றியே எல்லோரிடமும் புலம்பித் தள்ளி பரிதாபத்தைச் சம்பாதித்துக் கொள்வோர் ஒருபுறம். மனதில் வஞ்சத்தை வளர்த்து பழிக்குப்பழிவாங்கத் துடிப்போர் மறுபுறம். பழிக்குப்பழி வாங்கும் கதாபாத்திரங்களை விசிலடித்துக் கொண்டாடி நமக்குள்ளும் அதே வெறியை வளர்த்துக் கொள்ளும் நாம் நம்பிக்கைத் துரோகத்தை வெற்றிகொள்ளும் யுக்தியை இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்வோம்.

இன்றைய சூழலில் பழிக்குப்பழி, காட்டிக்கொடுப்பு போன்றவை நச்சுப்பாம்புக்கு உணவூட்டுவது போன்றது. எந்த நேரத்திலும் எமக்கு எதிராபத்தை தோற்றுவித்து மன அமைதியை தொலைக்கச் செய்யும் இதற்கு முற்றுப்புள்ளியிடவும் பகையுணர்வை வளர்க்கும் குருதிக்கு குருதி என்ற சங்கிலித் தொடரிலிருந்து விடுபடவும் இயேசு மன்னிக்கும் பண்பாட்டைக் கையிலெடுக்கிறார் நாமும் யூதாசுகளாக வாழப்போகின்றோமா? இயேசுவின் மன்னிப்பை வாழ்வாக்கப் போகின்றோமா? சிந்திப்போம்.




எஸ். யேசுதாஸ்.

## கழுதைகளால் தொல்லை

கிளிநொச்சி, ஏப்.11

பூநகரி, கிராஞ்சி, வேரவில் பிரதேசங்களின் கழுதைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்குள்ள பொது மண்டபங்கள், பொது இடங்களை அவை அசுத்தப்படுத்துகின்றன என்றும் கூறப்படுகின்றது.

"மீள்குடியமர்வின் பின்னரே அந்தப் பகுதியில் கழுதைகள் காணப்பட்டன. ஆரம்பத்தில் ஓரிரு கழுதைகள் காணப்பட்டன. தற்போது அவை பெருகியுள்ளன. பொது இடங்கள் பொது மண்டபங்கள் போன்றவற்றை அசுத்தப்படுத்துகின்றன." என்று கிராஞ்சி மகளிர் அமைப்பு தலைவி த.ஜெயசித்ரா தெரிவித்தார்.



இவை தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. (ந - 6)

# முல்லைத்தீவு, நாயாறு களப்பில் சட்டவிரோதத் தொழில் செய்த தெற்கு மீனவர் வெளியேற்றம்

## நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம்

முல்லைத்தீவு, ஏப்.11

முல்லைத்தீவு, நாயாறு களப்பில் சட்டவிரோதமாகத் தொழில் செய்தவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று செம்மலை மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்ததார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மாவட்ட நிர்வாகங்களுக்குத் தெரியாது திணைக்களத்தால் நாயாறு களப்புப் பகுதியில் தொழில் புரிய தென்னிலங்கை மீனவர்கள் 23 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அது தொடர்பில் நாம் உடனடியாக மீன்பிடி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அனுமதிகள் அனைத்தையும் உடனடியாகத் தடை செய்யுமாறு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்பாளருக்கு உத்தரவிட்டார். நாயாறு களப்புப் பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடும் 23 படகுகளையும் தடை செய்யுமாறு பணிப்பாளர் நாயகம் மாவட்ட பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்தில் உத்தரவிட்டார்.

அதன்பின்னரும் 23 படகுகளும் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டன. இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அவர்கள் இது தொடர்பில் மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டனர். அமைச்சின் எழுத்துமூலமான உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என மாவட்ட திணைக்களத்தால் அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

தடை உத்தரவு தொடர்பாகத் திணைக்களத்தால் மீனவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்படாததால் நீதிமன்றின் உதவி பெறப்பட்டு தீர்ப்பின் பிரகாரம் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களால் அமைக்கப்பட்ட 4 வாடிகளில். இரு வாடிகள் அகற்றப்பட்டபோதும் இரு வாடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை - என்றார். (ந - 101)



முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கடைசிப் பங்குனித் திங்கள் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வழிபாடுகளில் கலந்து கொண்டு, தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ந – 7)

## விசேட உணவு பொதிகளின் விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட சதொச விற்பனை நிலையங்களில் 10 அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளின் விற்பனை அதிகரித்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட சதொச விற்பனை முகவர்கள் தெரிவித்தனர்.

ஆயிரத்து 515 பெறுமதியான உணவுப்பொருள்கள் அடங்கிய பொதியை 975 ரூபாவுக்கு விற்பனை செய்யுமாறு நிதி அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, நேற்றிலிருந்து இருந்து எதிர்வரும் 20ஆம் திகதி முதல் வடக்கு மாகாணத்தில் உள்ள சதொச விற்பனை நிலையங்களில் இந்த விசேட விலைக் கழிவிலான பொதி விற்பனை செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணம், அச்சுவேலி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய சதொச விற்பனை நிலையங்களில் இந்த விசேட உணவுப் பொருள்கள் பொதிகளை அதிகளவான மக்கள் வாங்கிச் செல்வதாக விற்பனை முகவர்கள் தெரிவித்தனர். (ந - ரி)

# மாற்றுக் காணிகளை ஒருபோதும் ஏற்கோம்

## கேப்பாபிலவு மக்கள் திட்டவட்டம்





முல்லைத்தீவு, ஏப்.11

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த எங்கள் காணிக்கு நட்ட ஈட்டையோ, மாற்றுக்காணியையோ ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. எங்கள் பூர்வீகக் காணிகளுக்குச் செல்லும் வரைக்கும் எங்கள் போராட்டம் முற்றுப்பெறாது.

இவ்வாறு கேப்பாபிலவில் போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். நேற்று 41 நாளாகவும் அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

"41 நாள்களாக நாங்கள் இந்த இடத்தில் இரவு பகலாக எமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றோம். இது வரை ஓர் அரச அதிகாரியும் இங்கு வரவில்லை. காணிகள் விடுவிக்கப்படும் எனக் கூறுகின்றார். உத்தியோகபூர்வமாக எமக்கு இதுவரை எவரும் கூறவில்லை. எங்கள் பரம்பரைக்காணியில் இராணுவம் கோடிக்கணக்கில் செலவு செய்துள்ளது. மாற்றுக்காணிகள் தான் வழங்கப்படவுள்ளன. நட்ட ஈடு வழங்கப்படும் என்று கூறி எம்மைத் துன்பப்படுத்துகின்றார்கள். எங்கள் காணிகளுக்கும் எங்கள் வீடுகளுக்கும் உரிய பெறுமதியை யாரும் தீர்மானிக்க முடியாது. காலந்தோறும் எங்கள் வியர்வையாலும், உழைப்பாலும் தன்மானத்துடன் தான் வாழ்ந்து வந்தோம். அகதியாக அலைந்தபோதும் நாம் கௌரவத்துடன் தான் வாழ்ந்தோம். இனியும் நாம் சலுகைகளுக்காக சோரம் போகப்போவதில்லை." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர். (ந-7)

## மேலதிக பேருந்துச் சேவை புத்தாண்டு காலத்தில் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 11

புத்தாண்டுக் காலத்தில் மேலதிக பேருந்துச் சேவைகள் எவையும் நடத்தப்பட மாட்டாது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையும், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமும் தெரிவித்துள்ளன.

சித்திரைப் புத்தாண்டுப் பொருள் கொள்வனவுக்காக யாழ்ப்பாண நகருக்குப் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வரத் தொடங்கியுள்ளனர். புத்தாண்டு நெருங்கும் நிலையில், நகருக்கு வருபவர்களின் எண்ணிக்கை இன்னும் பலமடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

"வெளிமாவட்டங்களுக்கான பேருந்துச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் மேலதிக சேவைகளைக் கோரினால், யாழ்ப்பாணத்துக்கான சேவைகள் அதிகரிக்கப்படலாம்." என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை "மக்களின் நெரிசலை கவனத்திற் கொண்டு, உள்ளூர் பேருந்துச் சேவைகளில் நேர மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது." என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர். (ந-5.10)

## விபத்தில் பெண் சாவு

திருகோணமலை, ஏப்.11

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதி அலஸ்தோட்டம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட போது அலஸ்தோட்டம் கடற்கரைப் பகுதியிலிருந்து திருமலை நகர் நோக்கிப் பயணித்த பெண்ணுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று கூறப்படுகின்றது.

வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் உடலம் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-40)

# யாழ்ப்பாணத்தில் களை கட்டுகிறது புத்தாண்டு நடைபாதை வியாபாரம்

## தமது வியாபாரம் பாதிப்படைகின்றது என நகர் வர்த்தகர்கள் கவலை



யாழ்ப்பாணம், ஏப்.11
புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபாதை வியாபாரம் களை கட்ட ஆரம்பித்துள்ள நிலையில், அவற்றால் தாம் பாதிக்கப்படுகின்றோம் என்று நகர் வர்த்தகர்கள் கவலை வெளியிட்டனர்.

ஒவ்வொரு பண்டிகைக் காலத்துக்கும் தென்பகுதியிலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் பெருந்தொகையான நடைபாதை வியாபாரிகள் வடக்கை நோக்கிப் படையெடுக்கின்றனர். அவர்களால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன என்று வணிகர் கழகம் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. நடைபாதை வியாபாரிகள் அனுமதி பெறாது வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர் என்றும், அவர்களுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் கழகம் குற்றஞ்சாட்டுகின்றது.

நுகர்வோர் முறைப்பாடு செய்யாத சந்தர்ப்பத்தில் நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று உள்ளூராட்சித் திணைக்களம் கூறுகின்றது. நுகர்வோரைப்பொறுத்தவரையில், மிகக்குறைந்த விலையில் நடைபாதை வியாபாரிகளிடம் பொருள்கள் கிடைக்கின்றன. அவர்கள் அங்கேயே பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புகின்றனர்.

"கடந்த 6 வருடங்களாக பண்டிகைக் காலங்களில் வியாபாரம் செய்ய யாழ்ப்பாணம் வருகின்றேன். நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆனாலும் நாம் வியாபாரம் செய்கின்றோம். எமக்குப் போதுமான அளவு இலாபம் ஒவ்வொரு தடவையும் கிடைக்கின்றது." என்று கூறுகின்றார் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் கண்டியைச் சேர்ந்த அருஸ் முகமட்.

"பண்டிகைக் காலங்களில் நாங்கள் வேறு இடங்களுக்குச் செல்வதில்லை. யாழ்ப்பாணத்துக்கே ஒவ்வொரு தடவையும் வருவோம். யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் வரவேற்பு (வியாபாரம்) ஏனைய இடங்களில் கிடைப்பதில்லை. நாம் இலாபத்தைப் பெற்றுக் கொள்கின்றோம். இங்குள்ள வர்த்தகர்களுக்கு இடையூறு விளைவிக்க விரும்புவதில்லை. எமது வாழ்வாதாரத்துக்கே இங்கு வந்து விற்பனை செய்கின்றோம்" - என்று கூறுகின்றார் பாசையூரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த முஸ்னி ராவிக்.

"எமது வியாபார நடவடிக்கைக்கு உள்ளூர் வர்த்தகர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். நாம் வியாபாரத்தின் இலாபத்தை நம்பித்தான் வாழ்கின்றோம். மக்கள் எங்களிடம் வந்து பொருள்களை கொள்வனவு செய்கின்றனர். எமக்கு வியாபாரம் செய்வதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை அனுமதி வழங்கினால் சிறப்பாக இருக்கும்." என்று தெரிவித்தார் கண்டியிலிருந்து வந்து நடைபாதை வியாபாரம் மேற்கொண்டுள்ள மொகமட் அம்ஜத்.

"எமது வியாபாரிகள் வாடகை, வரி, ஊழியர் சேமலாப நிதி என்பவற்றைச் செலுத்தித்தான் வியாபாரம் செய்கின்றனர். பண்டிகைக் காலத்திலேயே எங்கள் வியாபாரிகளுக்கும் அதிகளவான வியாபாரம் நடைபெறும். அந்தக் காலங்களில் நடைபாதை வியாபாரிகள் இங்கு வந்தால், எமது வியாபாரிகளுக்கு பெரிய நட்டம் ஏற்படும். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. நாம் விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தி சட்டத்துக்கு அமைவாக வியாபாரத்தில் ஈடுபடுகின்றோம். நடைபாதை வியாபாரிகள் தரமற்ற பொருள்களை இங்கே கொண்டு வந்து கொட்டிவிட்டுப் போகின்றார்கள்.

வட மத்திய மாகாண சபை தனது எல்லைப் பிரதேசத்தில் நடைபாதை வியாபாரத்துக்குத் தடை விதித்துள்ளது. தனது உள்ளூர் வியாபாரிகளைப் பாதுகாக்கின்றது. ஆனால் வடக்கு மாகாண சபை அப்படி எதனையும் செய்யவில்லை. அனுமதியில்லாமல் நடைபாதை வியாபாரிகள் இங்கே வியாபாரம் செய்ய தாராளமாக விட்டிருக்கின்றார்கள்." என்று குற்றஞ்சாட்டுகின்றார் யாழ்ப்பாண மாவட்ட வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம்.

"வெளியிடங்களிலிருந்து வருகின்ற வியாபாரிகள் இங்கே வியாபாரம் செய்வதற்கு நாம் தடை விதிக்கவில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியுடன் நடைபாதை வியாபாரிகளுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கு வரி செலுத்த வேண்டும். வாகனங்களில் வந்து, அனுமதி பெறாமல் விற்பனை செய்யும் நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நடைபாதை வியாபாரிகள் குறைந்த விலைக்குபொருள்களைவிற்பனைசெய்வதால் ஏழை மக்கள் பயனடைகின்றனர். மக்கள் இது தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளையும் செய்யவில்லை. மக்களின் நலன் கருதியே அனுமதியுடன் இயங்க அனுமதித்துள்ளோம்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் தமது முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். நுகர்வோரின் நலனே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

உள்ளூர் வியாபாரிகளின் நலன் கருதி வெளிமாவட்ட வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம்." - என்று கூறினார் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன்.

(ந - 5,ரி1)

# வற்றாப்பளை வீதியை திறந்துவிடக் கோரிக்கை



முல்லைத்தீவு, ஏப். 11
வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியை மக்கள் பயன்படுத்துவதற்கு இராணுவம் தடை ஏற்படுத்தி வருகின்றது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கடைசிப் பங்குனித் திங்கள் வழிபாட்டுக்காகச் சென்ற ஏராளமான அடியவர்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டபோதும் புதுக்குடியிருப்பு வற்றாப்பளை வீதியை இடைமறித்து கேப்பாபிலவு கிராமத்தைகையகப்படுத்திமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீதியைப் பொதுமக்கள் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. காட்டைச் சீர் திருத்தி மாற்று வீதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாற்று வீதியைப் பயன்படுத்துவதால் இடையூறுகளை கருத்திற் கொண்டு நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் அந்த வீதி திறக்கப்படவிருந்தது. அந்த நிகழ்வு கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. விரைவாக மக்களின் பாவனக்கு திறந்து விடப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் இதுவரையும் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை.

போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ள மாற்றுவீதி வழியாக ஐந்து கிலோமீற்றருக்கு மேல் பயணிக்க வேண்டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பொதுமக்களின் நிலையை கருத்திற்கொண்டு குறித்த வீதியை விரைவாக மக்கள் பாவனைக்கு அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ந - 7)

# நானாட்டான் எரிபொருள் நிலைய குறைபாடுகளைத் தீர்க்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.11
மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நானாட்டான் எரிபொருள் விற்பனை நிலையம் குறைபாடுகளுடன் இயங்குகின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. 3 எரிபொருள்களினதும் இயந்திரங்கள் பாதுகாப்பற்ற முறையில் கற்களுக்கு மேல் வைக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களுக்கு சிறந்த சேவையை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" - என்று நானாட்டான் பிரதேச மக்களும், நுகர்வோரும் கோருகின்றனர்.



"எரிபொருள் இயந்திரத்தின் திருத்த வேலைகளுக்காக இயந்திரம் பொருத்தப்பட்ட கொங்கிரீட் பகுதி அண்மையில் உடைக்கப்பட்டது. ஒவ்வொரு படிமுறைகளின் ஊடாக இயந்திரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. மக்களுக்கான சேவையை வழங்குவதற்காகவும், இயந்திர திருத்த வேலைகள் முழுமையாக நிறைவுபெறும் வரையிலும் தற்காலிகமாக இயந்திரத்தை கொங்கிரீட் கற்களின் மேல் வைத்துள்ளோம். இது தொடர்பாக வட பிராந்திய பெற்றோலிய கூட்டுத் தாபனத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம்" - என்று மன்னார் மாவட்ட நானாட்டான் பிரதேச கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

"மன்னார் மாவட்ட நானாட்டான் பகுதியின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது. திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமையும் இயந்திரத்தின் முக்கிய பகுதிகள் கழற்றப்பட்டு ஆராயப்பட்டது. எதிர் வரும் சித்திரை புதுவருடத்துக்குள் நானாட்டான் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கப்படும்" - என்று பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

(ந - ரி,56)

# 4 மாதக் குழந்தை சாவு

கிளிநொச்சி, ஏப்.11
கிளிநொச்சி, இயக்கச்சியில் நித்திரைக்குச் சென்ற குழந்தை மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது. பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் குழந்தையின் தாயார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சங்கத்தார் வயலில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தாய்ப்பால் அருந்திவிட்டு 4 மாதக் குழந்தை உறங்கியது. அதிகாலை எழுந்த தாய் பிள்ளையை பார்த்தபோது பிள்ளை மயக்கமுற்ற நிலையில் இருப்பதை அவதானித்தார். பளை வைத்தியசாலைக்குக் குழந்தையைக் கொண்டு சென்றனர். பளை வைத்தியசாலையில் இருந்து உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் குழந்தை மாற்றப்பட்டது என பொலிஸாருக்கு தாய் தெரிவித்துள்ளார்.

"இறப்புக்கான காரணம் ஆரம்பகட்ட பரிசோதனைகளில் கண்டறியப்படவில்லை. மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை வந்த பின்னரே நோய்க் காரணி தொடர்பாகத் தெரிவிக்கமுடியும்" - என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

(ந - 6)

# ப.நோ.கூ. சங்கங்களுக்கு 12 மில். ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப்.11
யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் விடுத்த கோரிக்கைகளின் பேரில் 3 சங்கங்களுக்கு 12 மில்லியன் ரூபா மீள்குடியேற்ற அமைச்சால் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ப.நோ.கூ.சங்கங்கள் சில கடந்த ஆண்டு முன்வைத்த திட்டங்களின் பிரகாரம் 12 மில்லியன் ரூபாவுக்கான அனுமதி கிடைத்துள்ளது. அதில் குறித்த சங்கங்கள் விடுத்த கோரிக்கைகளின் பேரில் 3 சங்கங்களுக்கும் கிடைத்த மொத்த 12 மில்லியன் ரூபா நிதியும் மீள்குடியேற்ற அமைச்சு அனுமதித்துள்ளது.

அச்சுவேலி ப.நோ.கூ.சங்கத்துக்கு ஓர் அரிசி ஆலை அமைப்பதற்காக 7 மில்லியன் ரூபாவும், அளவெட்டி ப.நோ.கூ.சங்கத்துக்கு ஓர் அரைக்கும் ஆலைக்காக 3 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்துக்கான எரிபொருள் விற்பனை நிலையப் பணிகளுக்காக 2 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட நிதிகளுக்கான பணிகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவேண்டும். சங்கங்களுக்கு தற்போது இது தொடர்பாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ந - 101)

# எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவாக வெனிசுலாவில் மக்கள் போராட்டம்

## அரச படையினரின் தலையீட்டால் அது கலவரமாகவும் உருப்பெற்றுள்ளது



வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றிக் அரசியலில் ஈடுபட 15 ஆண்டுகாலம் தடை விதிக்கப்பட்டதைத்தொடர்ந்து அங்கு மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. போராட்டங்களை அரச படையினர் வன்முறையின்மூலம் அடக்கினர். இதனால் அங்கு பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.
தென்னமெரிக்க நாடான வெனிசுலாவில் நிகோலஸ் மதுரோ அதிபராக உள்ளார். அவரது நடவடிக்கைக்கு பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எனவே எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றிக் கேப்ரில்ஸ் தலைமையில் பொதுமக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். அடுத்த ஆண்டு வெனிசுலாவில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. அதில் அதிபர் மதுரோவை எதிர்த்து கேப்ரில்ஸ் போட்டியிட உள்ளார். ஹென்றிக்குக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்று கருதப்படும் நிலையில் அவர் அரசியலில் ஈடுபட 15 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. அரசின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.
தலைநகர் கராகஸ் உள்ளிட்ட பல நகரங்களில் நேற்றுமுன்தினம் பரவலாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கராகஸில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஒன்று திரண்டு போராடினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. கேப்ரில்ஸ் அதிபராக வேண்டும். சர்வாதிகாரி வேண்டாம் என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை ஏந்தியவாறு அரச அதிபரின் இல்லத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் எல்லை மீறிச்செல்லலாம் என்று உளவுத்துறை எச்சரித்ததை அடுத்து கண்ணீர் புகைக் குண்டு வீசி மக்களைக் கலைக்க முற்பட்டது அரச படை. இத்தகைய பின்னணியிலேயே அங்கு தற்போது கலவரம் வெடித்துள்ளது. (ம)

# அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி சிரிய அரசுக்கு ரஷ்யா ஆதரவு

மொஸ்கோ, ஏப். 11
சிரிய உள்நாட்டுப் போர் விவகாரத்தில் அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி சிரிய அரசுக்கு ஆதரவு வழங்க முடிவுசெய்துள்ளது ரஷ்யா. சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் சிரிய அரசு, அல்லது சிரிய அரசின் ஆதரவு பெற்ற நாடு எனச் சந்தேகிக்கப்படும் தரப்பால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வான்வழி இரசாயனத் தாக்குதலில் 86 மக்கள் சாவடைந்தனர். இந்த இரசாயனத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன் சிரியா மீது போர் அறிவித்தலையும் விடுத்தார். இதன்அடிப்படையில் சிரிய இராணுவத்துக்கு சொந்தமான சாய்ரத் படைத்தளம் அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் நிர்மூலமானது. இதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை கூடியது.
இந்தக் கூட்டத்தில், "சிரிய அதிபர் அல் அசாத்தின் அட்டூழிய ஆட்சிக்கு பக்கபலமாக ரஷ்யா நிற்கக்கூடாது. அவரது கொடுமையான ஆட்சிக்கு நியாயம் கற்பிக்கக்கூடாது. சிரியாவுடன் இனி நாம் வார்த்தைகளால் பேசமாட்டோம். தேவை ஏற்படின் இனியும் பல்வேறு தாக்குதல்களை அங்கு நடத்துவோம். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படாது என்று கருதுகிறோம்" என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே தெரிவித்தார். இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத ரஷ்யா, இதுவரை காலமும் எவ்வாறான ஆதரவை சிரியாவுக்குக் கொடுத்தோமோ அவ்வாறான ஆதரவை இனியும் கொடுப்போம் என்று தெரிவித்தது. (ம)


ரஷ்ய அதிபர் புடின்



சிரியாவை வைத்து உலக நாடுக
உலக நாடுகள் ஒன்றிணைய வே
பூர்வ இல்லமான வெள்ளைமா
நூற்றுக்கணக்கான மக்கள் இனை
டம் ஒன்றின் ஒளிப்படமே இது

# ஆர்.கே
# கைவி



சென்னை, ஏப். 11
வாக்குகளுக்காகப் பணம் கொடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதைஅடுத்து தமிழகம் ஆர்.கே. நகர இடைத்தேர்தல் கைவிடப்பட்டது. இந்தியத் தேர்தல் ஆணையம் நேற்று அதிகாலை இந்த அறிவிப்பை வெளியிட்டது.
தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவை அடுத்து, அவர் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.கே. நகரில் நாளை இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தி.மு. கழகத்தின் சார்பில் மருதுகணேஸ், ஓ.பி. எஸ். அணியின் சார்பில்

மதுசூதல
தரப்பில்
ஜி.ஆர். -
பேரவை
ஆகியோ
தில் நின்ற
தேர்தல் க
சிகள்
பணத்து
மோசடியி
கண்டுபி
ளது. இ
மோசடி
ணங்கள
தலைமை
காரி ரா
இந்தியத்
தல் ஆ
டன் உ
அ.தி.மு.
துணைப்



# இடைத்தேர்தல் நிறுத்தம் ஏமாற்றத்தைத் தருகிறது

## ஸ்டாலின் வருத்தம்

ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் நிறுத்தப்பட்டமையானது தனக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது என்று தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின் தெரிவித்தார். டுவிற்றர் பதிவிலேயே தனது கருத்தை அவர் பதிவுசெய்தார்.
தேர்தல் ஆணையத்தால் பணவிநியோகத்தைத் தடுக்க இயலவில்லை என்பதும், நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தும் அதிகாரத்தைத் தேர்தல் ஆணையம் பெற்றுள்ளபோதும் ஆர்.கே. நகர இடைத்தேர்தல் கைவிடப்பட்டமையும் மிகுந்த ஏமாற்றத்தைத் தருகின்றன என ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டார். (ம)

# தினகரனை தகுதி நீக்கம் செய்ய வலியுறுத்துகிறார் மதுசூதனன்



ஆர்.கே. நகர இடைத்தேர்தல் மீண்டும் நடக்கும் போது தினகரனை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வத்தின் தீவிர ஆதரவாளரான மதுசூதனன் வலியுறுத்தினார்.
"தினகரன், வாக்காளர்களுக்கு ரூ.89 கோடி (இந்திய மதிப்பில்) பணம் கொடுத்திருப்பது ஆவணங்களுடன் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. எனவே தேர்தல் ஆணையம் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும். ஆர்.கே.நகர் மக்களைப்பணம் கொடுத்து வாங்கி விடலாம் என்ற அவருடைய பகல் கனவு நடக்காது. ஆர்.கே.நகர் தொகுதியில் என்னுடைய வெற்றி ஏற்கனவே உறுதியாகிவிட்டது" என மதுசூதனன்மேலும்தெரிவித்தார். (ம)

# அமெரிக்காவின் அடாவடித்தனத்தால் அணுவாயுத

## நியாயம் சொல்கிறது வடகொரியா

பியாங்யாங், ஏப். 11
சிரியா மீது அமெரிக்கா நிகழ்த்திய ஏவுகணை தாக்குதலின் அடிப்படையில் சிந்தித்தால் அணுத் திட்டத்தை வலுப்படுத்தும் தங்களின் முடிவு சரியானது என மில்லியனுக்கும் அதிகமான முறை உறுதிப்படுத்துவதாக வடகொரியா தெரிவித்துள்ளது. வடகொரிய ஊடகங்கள் இந்தத் தகவலை பகிரங்கப்படுத்தியுள்ளன.
சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சிரிய அரசால் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் 86 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
இந்தத் தாக்குதல் இலக்குத் தவறிய தாக்குதல் என்று சிரிய அரசு தெரிவித்தது. எனினும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமை போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. சிரிய அரசைக் கண்டித்து அமெரிக்கா 59 ஏவுகணைகளை அந்த நாட்டின் மீது வீசியது.
மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் நாம் சிரியாவை இனியும் தாக்குவோம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ள நிலையில் வடகொரியா இவ்வாறு தெரி




நாடுகள் குறிப்பாக அமெரிக்காவும், ரஷ்யாவும் முரண்பட்டுவரும் நிலையில் அங்கு அமைதியை ஏற்படுத்த
னய வேண்டும். சிரியாவில் போர் வேண்டாம் என்று வலியுறுத்தி அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உத்தியோக
ளைமாளிகைக்கு முன்பும், நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கு முன்பாகவும்
ர் இணைந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவ்வாறு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட போராட்
மே இது. (ம)

# சீனாவுக்கு கழுதைகள் ஏற்றுமதி பாகிஸ்தான் அரசின் திட்டம் இது


இஸ்லாமபாத், ஏப். 11

சீனாவுக்கு கழுதைகளை ஏற்றுமதி செய்ய பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இதற்காக கழுதை வளர்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 100 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் கழுதைகளுக்கான தேவை அதிகம். காரணம் அதன் தோல் மருந்து உற்பத்திகளில் பயன்படுகிறது என்பதே. மேலும் பல விதங்களிலும் சீனாவில் கழுதைகள் பயன்படுகின்றன.

சீனாவின் கழுதைகள் தேவையைக் கணக்கில் கொண்டு பாகிஸ்தான் பெரிய அளவில் கழுதை வளர்ப்புப் பண்ணைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காகப் பெரிய அளவில் பயிற்சி அளிக்கும் வல்லுநர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் பிற பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது பாகிஸ்தான்.

இந்தத் திட்டத்தால் பாகிஸ்தானில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பெரிய அளவில் பொருளாதார முன்னேற்றம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# கே. தேர்தல் விடப்பட்டது





துசூதனன், சசிகலா
ரப்பில் தினகரன், எம்.
ஜி.ஆர். - அம்மா - தீபா
பேரவை சார்பில் தீபா
ஆகியோர் தேர்தல் களத்
தில் நின்றனர்.
தேர்தல் களத்தில் சில கட்
சிகள் வாக்குகளை
பணத்துக்கு வாங்கும்
மோசடியில் ஈடுபட்டமை
கண்டுபிடிக்கப்பட்டுள்
ளது. இதையடுத்து இந்த
மோசடி தொடர்பான ஆவ
ணங்களுடன் தமிழக
தலைமை தேர்தல் அதி
காரி ராஜேஸ் லக்கானி,
இந்தியத் தலைமை தேர்
தல் ஆணையர் நஜீமு
டன் உரையாடினார்.
அ.தி.மு. கழகத்தின்
துணைப்பொதுச்செயலாளர் தினகரனின் தீவிர ஆதரவாளரும், தமிழக சுகாதாரத் துறை அமைச்சருமான விஜயபாஸ்கரின் வீட்டில் ஆர்.கே. நகரில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட விருந்தகோடிக் கணக்கான பணமும் மீட்கப்பட்டது. இந்த விடயமும் லக்கானி - நஜீம் இடையிலான உரையாடலின் போது பரிசீலிக்கப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. நீதியற்ற முறையில் தேர்தல் நடைபெற வேண்டிய சூழல் உருவானதை அடுத்தே ஆர்.கே. நகர இடைத்தேர்தல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (ம)

## புதிய கிரகம்

நியூயோர்க், ஏப். 11

வெள்ளி போன்று மற்றொரு புதிய கிரகத்தை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சிறிய அளவிலான நட்சத்திரங்களும் இப்புதிய கிரகத்தைச் சுற்றி உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

விண்வெளியில் உள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களைக் கண்டுபிடித்து ஆய்வு மேற்கொள்ள அமெரிக்காவின் நாசா மையம் கெப்லர் விண்கலத்தை அனுப்பியுள்ளது. அதில் அதிநவீன-சக்திவாய்ந்த தொலைநோக்கி பொருத்தப்பட்டுள்ளது.

அந்தத் தொலைநோக்கிச் சமீபத்தில் ஒரு புதிய கிரகத்தைக் கண்டுபிடித்து அதை ஒளிப்படம் எடுத்துப் பூமிக்கு அனுப்பியது. அது ஏற்கனவே உள்ள வெள்ளி கிரகத்தைப் போன்றே உள்ளது. பூமியில் இருந்து 219 வெளிச்ச ஆண்டு தூரத்தில் அந்தக் கிரகம் உள்ளது. அதற்கு கெப்லர் -1649 எனப் பெயரிட்டுள்ளனர். மேலும் சிறிய அளவிலான சில நட்சத்திரங்களும் இந்தப் புதிய கிரகத்தைச் சுற்றி உள்ளன என்றும் நாசா அறிவித்தது. (ம)

## தேர்தல் நடந்தால் நானே வெல்வேன்

### தினகரனின் உலகமிது

சென்னை, ஏப். 11

ஆர்.கே. நகரத் தேர்தல் நடைபெற்றால் அதில் நானே வெற்றி பெறுவேன் என்று அ.தி.மு. கழக துணைப் பொதுச் செயலாளர் தினகரன் தெரிவித்தார்.

தேர்தலைக் கைவிட்டது ஜனநாயக படுகொலையாகும். எப்போது தேர்தலை நடத்தினாலும் நான் வெற்றி பெறுவது உறுதி. அ.தி.மு. கழகத்தை அழிக்க வேண்டும் என்ற சதித் திட்டத்தில் தற்போது தேர்தலை முடக்கி இருக்கிறார்கள். ஏற்கனவே இரட்டை இலையை முடக்கினார்கள். 4 ஆண்டு கால ஆட்சி முழுமையாக நிறைவு பெறும் என்று தினகரன் மேலும் தெரிவித்தார். (ம)

# எகிப்து தேவாலயக் குண்டுவெடிப்பில் சாவு எண்ணிக்கை 44ஆக உயர்வு

கெய்ரோ, ஏப். 11

எகிப்தில் தேவாலயம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 44 ஆக அதிகரித்தது.

எகிப்து தலைநகர் கெய்ரோ அருகில் உள்ள டன்டா என்னும் இடத்தில் உள்ள செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் குருத்தோலை ஞாயிறு சிறப்பு திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. ஆரம்பத்தில் 15 பேர் உயிரிழந்தனர் 42 பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. அவர்களில் 29 பேர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 44ஆக அதிகரித்தது. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. இதுபோன்ற தாக்குதல்கள் அங்கு அதிகம் நடத்தப்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதை அடுத்து எகிப்து அதிபர் பட்டா அசிசி மூன்று மாதங்களுக்கு அவசர நிலை என்று அறிவித்தார். (ம)



# ...தத்தைப் பரிசோதிக்கிறோம்

வித்தது.
து அமெ
ள அந்த

நடத்தப்
இனியும்
மரிக்கா
லயில்
து தெரி
வித்தது. "வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே பகை நிலவி வருகிறது. இந்த விவகாரத்தில் தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது.

தென்சீனக் கடல் விவகாரத்திலும் அமெரிக்கா வடகொரியாவுடன் முரண்படுகிறது.

இதனால் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை எமக்கு உண்டு.

இந்த அடிப்படையிலேயே அணுவாயுத வல்லமையை நாம் பெருக்குகிறோம்" என்று வடகொரியாவின் தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)


Friends Pack
share பண்ணுங்க
ரூ.100/- மட்டுமே
Coca-Cola
750ml
பெற்றுக்கொள்ளலாம்.
Coca-Cola
TASTE THE FEELING
PHOENIX O&M



# ஆரோக்கிய உணவின் அவசியம்

செல்வி பா.பாலாஜினி

அவசர உலகில் அலைகிறான் மனிதன். இயந்திர நாளங்களுக்குள் குடித்தனம் செய்கின்றான். உணவுப் பசியை மறந்து பசிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகக் கூட அதற்குரிய மாத்திரைகளை உட்கொள்கின்றான். இன்னும் சில காலம் போனால் இயந்திரங்களையே அவன் உணவாக உட்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவுக்குத் தொழிநுட்பம் உச்சத்தைத் தொட்டுவிட்டது. இந்த நிலையில் அவன் எங்கே ஆரோக்கியமான உணவை உண்ண முடியும்?

ஆதிகால மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். அதனால் பச்சை இலைகுழைகளையும், பழவர்க்கங்களையும் உணவாக உட்கொண்டான். அதற்கு மேலதிகமாக விலங்கினையும் வேட்டையாடி உண்டான். விலங்கு இறைச்சியினால் உருவாக்கப்பட்ட கலோரியானது அவன் ஓடியாடி வேலைசெய்து விலங்குகளைத் துரத்துவதன் காரணமாக உடலில் சேராமல் எரிக்கப்பட்டது. மேலும் கூட்டாக வாழ்ந்து பகிர்ந்துண்ணும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டான்.

ஆனால் இன்று இயற்கையை அழித்து இயந்திர மனிதனாக உருவாக்கிக் கொள்கின்றான். அதிகரித்த சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உணவுத் தேவையைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்கை உரம், களை கொல்லி, கிருமி நாசினி முதலியவற்றைப் பயிர்ச்செய்கையில் நடைமுறைப்படுத்தினான். இதனால் இயற்கை உணவுகள் இன்று அதன் தன்மையை இழந்து விடுகின்றன. அந்த உணவுகளை அவன் உண்பதனால் புற்றுநோய், காசநோய் முதலிய தேவையற்ற நோய்களுக்கும் ஆளாகின்றான். மேலும் விலங்குணவுகளை அதிகளவு எண்ணெயில் பொரித்து உண்கின்றான். ஓடியாடி வேலை செய்யாது சொகுசு அறைகளில் ஒய்யாரமாக இருப்பதனால் அவன் உண்ணுகின்ற உணவுப் பொருள்களில் உள்ள கலோரிகளும் எரிக்கப்படாது உடலிலேயே தேங்கி விடுகின்றன. இதனால் உடற்பருமன் மற்றும் மன அழுத்தம் முதலிய நோய்களுக்கு ஆளாகி குறைவான ஆயுளிலேயே இறந்து விடுகின்றான். இதில் கவலையான விடயம் என்னவென்றால் இதைப் பற்றி நன்கு கற்று அறிந்தவர்கள் கூட அலட்சியமாகச் செயற்படுகின்றார்கள் என்பது தான்.

**நேரமின்மையும் ஒரு காரணம்**

இதைப்பற்றி அவர்களிடம் கேட்டால் நல்ல உணவுகளைச் செய்து உண்பதற்குத் தங்களுக்கு நேரமில்லையே என்று நாசூக்காகச் சொல்லி விடுகின்றார்கள் இவற்றைவிட இப்போது பாவனையில் வந்திருக்கின்ற உடனடி உணவு (Fast Food) முதலியவற்றையும் குறிப்பிடலாம். உண்மையிலேயே அவர்களுக்கு நேரம் போதவில்லை என்பதை விட நாகரீகமான முறைக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள் என்பது தான் நிச்சயம். இன்றைக்கு எம் சமூகத்தின் மத்தியில் உடற்பருமனானவர்களின் தொகை அதிகரித்து வருவதையும் குறைபாட்டு நோய்க்கு உள்ளாகுபவர்களையும் அதிகமாகக் காண முடிகின்றது. இதற்குக் காரணம் இந்தப் பழக்கவழக்கங்களே.

ஆனால் இன்று உடற்பருமனைக் குறைப்பதற்கான எத்தனையோ இயந்திர சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. சகலருமே இவற்றை வாங்கிப் பயன்படுத்துகின்றார்கள். அவற்றின் மூலம் சடுதியாக உடற்பருமன் குறைவடைகின்றது தான். ஆனால் அது ஆரோக்கியமான முறைதானா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த இயந்திரங்கள் எல்லாமே ஏதோவொரு பக்கவிளைவை எமக்குள் ஏற்படுத்தி விடுகின்றன. அத்தோடு உணவுக்கட்டுப்பாடு இல்லாத எந்தவொரு பழக்கவழக்கமும் உடல் மெலிவையோ உடல் உறுதியையோ தந்துவிடாது.

**சீரான உணவுப் பழக்கம்**

எனவே முதலில் சீரான உணவுப் பழக்கவழக்கத்தைக் கடைப்பிடியுங்கள் எண்ணெய், கொழுப்பு நிறைந்த உணவுகளை அடிக்கடி உண்பதைத் தவிருங்கள் மூன்று நேரமும் ஏதோவொரு போசாக்கு உங்களுக்கு இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். காலை வேளைகளில் கடலை, பயறு போன்ற சிறுதானிய உணவுகளையும் அதனுடன் நிறையுணவும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஒருபோதும் காலை உணவை உண்ணாது தவறவிட்டு விடாதீர்கள். ஏனெனில் சிலர் உடல் மெலிவதற்காக உணவு உண்ணாது விட்டுவிடுவார்கள். இது என்றும் உடல் நிலையை ஓர் ஆபத்தான பாதையில் கொண்டு சென்று விட்டுவிடும். மதிய உணவு வேளையில் கட்டாயமாக நெல்லரிசிச் சோற்றை எடுத்துக் கொள்ளுங்கள். சோற்றுடன் பச்சை இலைவகைகள், பீற்றூட் போன்றவற்றை இணைத்துக் கொள்வது அவசியமாகும்.

**இரவு உணவு**

இரவு வேளை உணவை எட்டுமணிக்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளுங்கள். இரவு நேரங்களில் கொஞ்சம் வயிறு நிறைவான உணவை எடுத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் வயிற்றுப்பசி தூக்கத்தைக் கெடுத்துவிடக்கூடும். இவ்வாறு மூன்று நேரமும் உணவுகளை உண்ட பிற்பாடு அளவான வெந்நீரைப் பருகிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது நீங்கள் உண்ட உணவிலுள்ள கொழுப்புக்களை உடலில் சேராது தடுத்துவிடும் தன்மை மிக்கது. இவ்வாறு மூன்று நேர உணவுகளையும் சரி விகிதத்தில் எடுத்துக் கொண்டீர்களேயானால் உணவு சம்பந்தமான ஆரோக்கியம் உங்களில் ஏற்பட்டு விடும். அத்துடன் இந்த மூன்று உணவு வேளைகளுக்கும் இடையில் பசித்தால் மிக்சர், பகோடா போன்ற நொறுக்குத் தீனிகளை உண்ணாதீர்கள். கடலை, பயறு, சமபோஷா, ஓட்ஸ் முதலிய உணவுகளை உண்ணுங்கள். இவை எல்லாவற்றையும் விட நாளாந்தம் தவறாது உடற்பயிற்சி செய்து வாருங்கள். இயந்திரங்கள் எதையும் பயன்படுத்தாது இயற்கையான முறையில் கைகால்களை அசைத்து நீட்டி நிமிர்ந்து அப்பியாசம் செய்யுங்கள். வாரத்துக்கு ஒரு முறையாவது அல்லது இரு முறையாவது தேசிக்காய் பழக்கலவை மற்றும் ஆடாதோடை பழக்கலவை முதலிய வற்றை அருந்திக் கொள்ளுங்கள். அதிகம் வெப்பம் நிலவுகின்ற காலங்களில் பப்பாசி, வெள்ளரிக்காய் முதலியவற்றை அடிக்கடி எடுத்துக் கொள்ளுங்கள். அவை உங்களின் உடலில் இருந்து அதிக வியர்வை வெளியேறுவதைத் தடை செய்கின்றது.

உடல் மெலிய வேண்டும், பருமன் குறைய வேண்டும் என்று நினைப்பவர்கள் இவற்றைக் கடைப்பிடித்து வந்தாலே போதுமானது. அத்துடன் விருந்துபசாரம், களியாட்ட நிகழ்வு போன்றவற்றில் கலந்து கொள்பவர்கள் அஜீரணமாகாத உணவு வகைகளை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இப்படியான செயற்பாடுகளை தொடர்ச்சியாக நீங்கள் முன்னெடுத்து வந்தால் உடல் ஆரோக்கியம் பலமடையும்.



இன்று இயற்கையை அழித்து இயந்திர மனிதனாக உருவாக்கிக் கொள்கின்றான். அதிகரித்த சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உணவுத் தேவையைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்கை உரம், களை கொல்லி, கிருமி நாசினி முதலியவற்றைப் பயிர்ச்செய்கையில் நடைமுறைப்படுத்தினான். இதனால் இயற்கை உணவுகள் இன்று அதன் தன்மையை இழந்து விடுகின்றன. அந்த உணவுகளை அவன் உண்பதனால் புற்றுநோய், காசநோய் முதலிய தேவையற்ற நோய்களுக்கும் ஆளாகின்றான்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கேப்பாபிலவில் இராணுவத்தின் கோரிக்கை நியாயமேயற்றது!

கேப்பாப்பிலவில் பொது மக்களின் காணிகளைத் தக்க வைப்பதற்கு இராணுத்தினர் முயல்வதற்கான காரணம்மிகவும்அபத்தமாகவும்அநியாயமாகவும்உள்ளது. அந்த மக்கள் ஒரு மாதத்துக்கும் மேலாக வீதியில் இறங்கித் தமது காணிகளைமீட்பதற்காகப்போராடி வருகிறார்கள். அரசதலைவர் வரை சென்று முறையிட்டும் காணிகள் விடுவிக்கப்படாததற்கான காரணம் என்ன என்பது இப்போதுதான் மெல்லக் கசிந்துள்ளது.

கேப்பாப்பிலவில்இராணுவத்தினர்வசப்படுத்திவைத்துள்ள காணிகள் வெளியே இருந்து பார்க்கும்போது பற்றைக் காடுகளாகத்தான் தெரிகின்றன. அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முன்னர் வான்படைத்தளத்தையும் ஓடுபாதையையும் வைத்திருந்தார்கள் என்பதால், படைத்துறை ரீதியில் அந்தப் பகுதியைப் படையினர் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதித் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறார்கள் என்றே இதுவரை காலமும் எண்ணப்பட்டு வந்தது. அந்த எண்ணத்தில் நியாயமும் இருக்கவே செய்தது.

உலகிலேயே வான் படையையும் கொண்டிருந்த அரசு அல்லாத அமைப்பு விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே. இன்றைய நவீன உலகில் போர்த்திறன் வாய்ந்திருக்காத ஒரு படையாக வான் புலிகள் இருந்தாலும் தம்மிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி எதிரியின் உள உரனை உடைக்கக்கூடிய வல்லமையையும் எதிர்காலத்தில் பலம் வாய்ந்த வான்படை ஒன்றைக்கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தையும் விடுதலைப் புலிகள் கொண்டிருந்தனர். அதற்கான பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியையும் அவர்கள் கொண்டிருந்தனர். எனவே உலகில் வேறு எங்கும் எதிர்கொள்ளப்படாத அச்சுறுத்தல் உருவானமையமான கேப்பாப்புலவை படைத்துறை ரீதியில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் படையினர் எண்ணுவர் என்பது எதிர்பார்க்கக்கூடியதே!

ஆனால், அத்தகைய எந்த படைத்துறை நோக்கமும் இன்றி, உள்ளே மக்களின் காணிகளில் தாம் அமைத்து வைத்துள்ள சொகுசுமாளிகையைப்பாதுகாப்பதற்காகத்தான் இராணுவம் அந்தக்காணிகளைத்தொடர்ந்தும்தக்கவைக்கமுயற்சிக்கிறது என்பது அநியாயத்திலும் அநியாயம்.

மக்களின் காணிகளில் இவ்வாறு மக்களின் வரிப் பணத்தைக் கொண்டே சொகுசு மாளிகைகளை அமைத்துவிட்டு அவற்றைவிட்டு இப்போது வெளியேற மறுப்பது மக்களுக்குச்செய்யும்பெருந்துரோகம். இந்தமாளிகையைத்தக்கவைப்பதற்காக அந்தப் பகுதியில் நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருப்பவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கும் இராணுவம் தயாராக இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது.

கடந்த 8 வருடங்களில்தாம்மேம்படுத்தியஅந்தஇடத்தையும் அதில்தாம்கட்டியமாளிகையையும்விட்டுவிட்டுவெளியேற இராணுவத்தால் முடியவில்லை என்றால், பல பத்தாண்டுகளாக அந்த மண்ணிலேயே வாழ்ந்து, அந்த மண்ணைச்செழிப்புறவைத்து, அதில்தமக்கென ஒருமாளிகையை (அது குடிசையாகவே இருந்தாலும்) அமைத்து, பெருங் கனவுகளோடு நகர்ந்தவர்களைப்போரின்பேரால்அங்கிருந்துகலைத்து, அவர்களின் மொத்த வாழ்க்கையையும் சிதைத்துவிட்டு இப்போது அவர்களின் காணிகளைத் திரும்ப ஒப்படைக்க மறுப்பது எப்படி நியாயமாகும்? இது அப்பட்டமான அக்கிரமம் அல்லவா?

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. அந்தப் பகுதி மக்களின் காணிகள் அவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அங்கு கட்டப்பட்டுள்ள ஆடம்பரவிடுதி அந்தப்பகுதிக்குரிய பிரதேசசபையின் சொத்தாகமாற்றப்பட வேண்டும். அதிலிருந்துகிடைக்கக்கூடிய வருவாயால் கேப்பாப்புலவு மக்கள் பயன்பெறத்தக்கதாக பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவையும்கூட மக்களின்சம்மதத்துடன்மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் செய்யவேண்டுமானால் இராணுவம் அந்த இடத்தைவிட்டு வெளியேறியே ஆகவேண்டும்.

தாம் அமைத்த ஆடம்பரவிடுதியைப்பாதுகாப்பதற்காக கேப்பாப்பிலவில் இராணுவம் நிலைத்திருக்க அரச தலைவர் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதிப்பதற்குத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இடமளிக்கக்கூடாது. இராணுவ கேந்திரநிலை என்பதற்காக அல்லாமல், ஆடம்பரவிடுதியைத் தக்கவைப்பதற்காகத்தான் இராணுவம் கேப்பாப்பிலவை வைத்திருக்க விரும்புகின்றது என்பது தெரிய வந்ததற்குப் பின்னர், தாமதிக்காது அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு அரச தலைவர் உடனடி நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

# உயர ஏற்றி வைத்த ஏணியை எட்டி உதைக்கும் அரசுத் தலைவரும் தலைமை அமைச்சரும்

சிங்களமூலம்(மவ்பிம)
ஆதிபாத
தமிழில் வீ.எஸ்.ரீ

அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் சுதந்திரக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையில், தமது மகனுக்கு அரசில் பெரிய பதவியெதனையும் தாம் வழங்கியிருக்கவில்லை எனவும், குடும்ப அரசியல் கலாசாரத்தைத் தாம் ஒரு போதும் ஊக்குவிக்கப் போவதில்லை எனவும், தெரிவித்திருந்தார். ஆனால் அரசுத் தலைவர் மேற்கொண்ட வெளிநாடுகளுக்கான பயணங்களின்போது, பெரும்பாலும் அவரது மகனும் கூடவே பங்கேற்றிருந்தார் என்பதை எவராலும் மறந்திட இயலாது.

சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி ஐ.தே.கட்சி மூலம் தேர்தலில் போட்டியிட்டு (தாம் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கவில்லை எனக் கூறுவது வெறும் சமாளிப்பே) நாட்டின் அரசுத் தலைவராகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன, மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைவராகிக் கட்சியைப் பிரபல்யம் பெற வைக்க முயல்வது வேடிக்கையே. நல்லாட்சி அரசு அமையவும், மைத்திரிபால அரசுத்தலைவராக ஆவதற்கும் பெருமளவில் ஆதரவு வழங்கியோர் ஐ.தே.கட்சித் தரப்பினர்களே. 20 ஆண்டுகள் காலம் தம்மை எதிர்க்கட்சியினராகவே செயற்படவைக்க மகிந்தவுக்கு உதவி புரிந்த மைத்திரிபாலவை, ஒரு இரவிலேயே தமது தரப்புக்குத் தாவ வைத்து அவரை அரசுத்தலைவராகவும் ஆக்கி வைத்தவர்கள் ஐ.தே.கட்சியினரே. இதனால் அதிருப்தியுற்ற ஐ.தே.கட்சியின் பழம்பெரும் புள்ளியும், பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயகா ஐ.தே.கட்சியைத் துறந்து மகிந்தவுடன் ஐக்கியமானார். ஆயினும் தமது பேராதரவால் அரசுத் தலை வரான மைத்திரிபால மீண்டும் சுதந்திரக் கட்சிக்குத் திரும்பி கட்சியின் தலைமைத்துவத்தையும் கைப்பற்றித் தம்மையெல்லாம் முட்டாள்களாக ஆக்குவாரென ஐ.தே.கட்சிக்காரர்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. மைத்திரிபாலவின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த சிவில் அமைப்புக்கள் கூட இதனை எதிர்பார்க்கவில்லை. நாட்டை ஒழுங்கமைக்கவேண்டியுள்ளது எனக்கூறியே மைத்திரிபால அரசுத் தலைவர் பதவியை ஏற்றார். நாட்டை உரியவாறு ஒழுங்கமைத்த பின்னரா அவர் தற்போது சுதந்திரக் கட்சியை ஒழுங்கமைக்கத் தயாராகிறார் என நாட்டு மக்கள் வினவத் தலைப்பட்டுள்ளனர். உண்மையில் அவர் நாட்டை ஒரு முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முயன்றிருக்கவேண்டுமேயன்றி, சுதந்திரக் கட்சியைத் தோளில் காவ முயன்னிருக்கத் தேவையில்லை. அவர் அரச தலைவரொருவரது கடமையை மட்டும் பக்கச் சார்பின்றிச் செய்தால் போதும்

### இரண்டு பொறுப்புக்களைத் தாமே தனித்துச் சுமக்க விரும்பிய மைத்திரிபால

அரச தலைவராகப் பதவியேற்ற வேளையில் ஒரு அரச தலைவரது பதவிக்காலத்தை நான்கு ஆண்டுகளாக மட்டுப்படுத்தத் தாம் விரும்புவதாக மைத்திரிபால தெரிவித்திருந்தார். அரச தலைவருக்கான அதிகாரங்களில் சிலவற்றைக் கைவிடுவது தொடர்பான அவரது கருத்து, பன்னாட்டுத் தலைவர்களது மதிப்பைப் பெற்றது. 60 இலட்சத்துக்கு அதிகமான வாக்குகளை வழங்கி அவரை அரசுத் தலைவராக்கிய வாக்காளர்கள் அவர் மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணைந்துகொள்வார் எனநினைத்திருக்கமாட்டார்கள். சுதந்திரக் கட்சியையும் அரசுத் தலைவர் பதவியையும் தாமொருவராக சுமக்க நினைத்த மைத்திரிபால, நாற்புறங்களிலிருந்தும் விமர்சனங்களை எதிர்நோக்க நேர்ந்தது. மகிந்தவைப் புறம் தள்ளி ஐ.தே.கட்சியுடன் ஒன்றிப்போன மைத்திரிபால மீது சுதந்திரக் கட்சிக்காரர்கள் கடும் கோபமுற்றுள்ளனர். அரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் மகிந்த எப்போதுமே சுதந்திரக் கட்சிக்காரர்களது வீரதீரத் தலைவரே. அவருக்கு முதுகில் குத்திய மைத்திரி சுதந்திரக் கட்சிக்காரர்களைப்பொறுத்தவரை துரோகியே. அந்த வகையில் இன்றும்கூட சுதந்திரக் கட்சிக்காரர்கள் மகிந்த மீதே மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர். நல்லாட்சிக்காக மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்கிய பொதுமக்கள், சமூக அமைப்புக்கள் யாவும் மைத்திரிபால மீது வெறுப்புக் காட்ட ஆரம்பித்ததே, 2015ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் போட்டியிட மகிந்தவுக்கு அவர் சுதந்திரக்கட்சி சார்பாக வேட்பாளர் நியமனம் வழங்கியதையடுத்தே. அது மட்டுமன்றி பொதுத் தேர்தலில்ஐ.ம.சு.கூட்டணிவெற்றி பெற்றாலும் கூட, மகிந்தவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என மைத்திரி தெரிவித்ததால் அது, சுதந்திரக்கட்சிக்காரர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

### வேண்டாப் பிரமுகராகி விட்ட அரசுத் தலைவர்

அந்தவகையில் இன்று ஐ.தே.கட்சிக்காரர்களுக்கும் சுதந்திரக்கட்சிக்காரர்களுக்கும் அரசுத் தலைவர் ஒரு வேண்டாத பிரமுகராகி விட்டுள்ளார். ஐ.தே. கட்சியின் முக்கிய தூண்களில் ஒன்றாகச் செயற்பட்ட அலுவிகாரை பரம்பரையின் இளம் அரசியல்வாதியான டல்ஜித் அலுவிகார தாம் சார்ந்த ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் மீது கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். அந்த வகையில் ரணிலுக்கு எதிராக ஐ.தே.கட்சியினரது முதலாவது வெடியின் திரி, மாத்தளையில் வைத்து பற்றவைக்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில், நாட்டைப் பற்றிச் சிந்திக்காது அதிகாரத்தை எப்படித் தக்கவைக்க இயலுமெனச் சிந்திப்பதாகவும், அரசுத் தலைவர் மைத்திரிபால, நாடு வழங்கிய பொறுப்பை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டுச் சுதந்திரக் கட்சியை எப்படிக் கட்டிக் காப்பது



என்பது குறித்துச் சிந்திப்பதாகவும் இவ்விருவர் மீதும் நாட்டு மக்கள் குற்றச்சாட்டுக் களை முன்வைக்கின்றனர்.

மற்றொரு அரசுத்தலைவர் தேர்தலை நடத்த நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என அடிக்கடி கூறுவதன் மூலம், மைத்திரிபால இன்று தடம் மாறிப் பயணிக்க ஆரம்பித்துள்ளாரா எனச்சந்தேகிக்க வேண்டியுள்ளது. ஒலிம்பிக் போட்டியில் ஓடிப் பதக்கம் வென்ற நபரொருவர், கிராமிய மட்டத்தில் நடத்தப்படும் புத்தாண்டுக்கொண்டாட்ட நிகழ்வில் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்வதுபோன்று, மைத்திரிபால இன்று செயற்படுகிறார் என சுதந்திரக்கட்சிக்காரர்கள் குரலெழுப்புகின்றனர். அவர்களுடன் சேர்ந்து ஐ.தே.கட்சிக்காரர்களும் அரசுத் தலைவர்களுக்கு எதிராகக் கூப்பாடுபோடுவதுதான் புதுமையாகத் தோன்றுகிறது.



# படையினரின் பிடியிலுள்ள நிலங்கள் குறித்து தவறான கணக்கீடு காட்டும் அரசு

■ ந.லோகதயாளன்

வடபகுதியில் மட்டும் இன்னமும் 65 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் படையினர் குந்தியிருக்கும் நிலையில், தற்போது வெறும் 27 ஆயிரத்து 230 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே வடபகுதியில் படையினர் நிலைகொண்டுள்ளதாக வேண்டுமென்றே பொய்யான தகவலொன்றைக் கசிய விடப்பட்டுள்ளதா? அதன் மூலம் சர்வதேசத்தையும் சமூக ஆர்வலர்களையும் திசைதிருப்ப முயற்சிக்கின்றதா தேசிய நல்லிணக்கசெயலணியின் அலுவலகம் என்ற மிகப்பெரும் சிக்கலான கேள்வியொன்றுஎழுப்பப்படுகின்றது.

## படையினர் பயன்படுத்தும் நிலங்கள் குறித்த தவறான கணக்கீடு

இதன்பிரகாரம்வடக்குமாகாணத்தில் முப்படையினரின் வசம் தற்சமயம் 27 ஆயிரத்து230ஏக்கர்தனியார்மற்றும் அரச காணிகள் உள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தரவுகளில் முதலாவதாக யாழ்ப்பாண மாவட்டத்தின் கணக்கை மிகச் சரியாகக் காட்டிவிட்டு வடக்கின்ஏனைய4மாவட்டங்கள் தொடர்பான தரவுகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக ஐயம் எழுந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் வசம் 3 ஆயிரத்து 92 ஏக்கர் தனியார் காணிகளும் 548.5 ஏக்கர் அரச காணிகளும், கடற்படையினர்வசம்513ஏக்கர்தனியார் காணிகளும் 108 ஏக்கர் அரச காணிகளும் , விமானப் படையினர் வசம் 646.5 ஏக்கர் தனியார் காணிகளும் 391.5 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் 5 ஆயிரத்து 299.5 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளதாக சரியான புள்ளி விவரங்கள் காட்டப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த மட்டும் இராணுவத்தினர் வசம் 217.5 ஏக்கர் தனியார் காணிகளும், 1372.5ஏக்கர்அரசகாணிகளும், கடற்படையினர் வசம் 10.38 ஏக்கர் தனியார் காணிகளும் 380.63 ஏக்கர் அரச காணிகளும் விமானப்படையினர் வசம் எந்த நிலங்களுமே இல்லை எனவும் இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 1982.10 ஏக்கர் நிலங்கள் மட்டுமே படையினர்வசம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர் வசம் 540.29 ஏக்கர் தனியார் காணிகளும் 6 ஆயிரத்து 934.38 ஏக்கர் அரச காணிகளும் உள்ளதுடன் கடற்படையினர் வசம் 671 ஏக்கர் தனியார்காணிகளும்44.80ஏக்கர்அரசகாணிகளும் உள்ளன. விமானப் படையினர் வசம் 958 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் 9 ஆயிரத்து148.47ஏக்கர்நிலங்கள்படையினர் வசம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை இராணுவத்தினர்வசம்20.45ஏக்கர்தனியார்காணிகளும்1942.27 ஏக்கர் அரச காணிகளும், கடற்படையினர் வசம் 101 ஏக்கர் தனியார் காணிகளும் 1003.70 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன. இதேபோன்று விமானப் படையினர் வசம் தனியார் காணிகள் இல்லாத போதும் 227 ஏக்கர் அரச காணிகளுமாக 3 ஆயிரத்து 294.42 ஏக்கர்கள் நிலம் படையினர் வசம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தினர் வசம் 68.46 ஏக்கர் தனியார் காணிகளும் 5 ஆயிரத்து 864.07 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன. கடற்படையினர் வசம் எந்த நிலங்களும் கிடையாது. விமானப் படையினர் வசமும் தனியார் காணிகள் கிடையாது 1571.60 ஏக்கர் அரச காணியுமாக மொத்தம் 7 ஆயிரத்து 504.13 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையிலேயே வடக்கில் மொத்தமாகஅரசகாணிகள்21ஆயிரத்து346.95 ஏக்கரர்களும், தனியார் காணிகள் 5 ஆயிரத்து 880.58 ஏக்கர்களுமாக, மொத்தமாக 27 ஆயிரத்து 221.53 ஏக்கர்கள் நிலம் படைவசமுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. இங்கே வடக்கின் 5 மாவட்டங்களிலும் 5 வகையான காணிகள் உள்ளன அவை (1) தனியாருக்குச் சொந்தமான காணிகள், (2) அரச காணிகள் (இவை பிரதேச செயலாளரின் ஆளுகையின் கீழ் உள்ளவை.) (3) வன வளத்திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், (4) வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குச்சொந்தமான காணிகள் மற்றும் (5) அரச திணைக்களங்களுக்குச் சொந்தமானவை என ஐந்து வகைகளாகும்.

## படையினர் வசம் ஐந்து வகைகளில் காணிகள்

வடக்கில் யாழ்ப்பாணத்தில் 1ஆம், 2ஆம் , 5ஆம்வகையான காணிகள் மட்டும் உள்ளபோதிலும், சிறிதளவு 4ஆம் வகைக் காணிகளும் உள்ளன. ஆனால் வடக்கில் யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த நான்கு மாவட்டங்களிலும் வன வளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசித் திணைக்களத்தின் ஆளுகையிலேயே அதிக நிலங்கள் காணப்படுகின்றன. இவை தொடர்பில்குறித்தசெயலணியால்எந்தவிதகருத்தும் முன்வைக்கப்படவில்லை.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் காணிகள் ஆயிரத்து 211.29 ஏக்கர்களும் அரச காணிகள் 7 ஆயிரத்து 937.18 ஏக்கர்களுமாக மொத்தம்9ஆயிரத்து148.47ஏக்கர்கள் நிலங்கள் மட்டுமே படையினர் வசம் உள்ளதாக வேண்டுமென்றேதவறானதகவலேகாட்டப்பட்டுள்ளது. வடமாகாணத்திலேயேஅதிகநிலம்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மாவட்டமாக விளங்குவது முல்லைத்தீவு மாவட்டம்தான் .இங்கே படைகளின் வசம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் நிலங்களின் அளவுகள் மட்டுமே இவை. இதேபோன்றுவனவளத் திணைக்களம் , வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் கீழ்வரும் பல்லாயிரம் ஏக்கர்கள் நிலங்களின் அளவு பட்டியலிடப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பகாமம் பகுதியில் 8 ஆயிரத்து 500 ஏக்கர்கள் வனப்பகுதியும், கரிப்பட்ட முறிப்பு முதல் இரணைமடுக்குளம் வரையிலான 3 ஆயிரத்து 500ஏக்கர்கள் வனப்பகுதியும், கேப்பாபுலவில் 2 ஆயிரத்து 200 ஏக்கர்களும் விமானப்படையினர் வசம் உள்ளதோடு, ஏ9 வீதிக்கு அண்மையாக முறிகண்டிப் பகுதியில் 1,750 ஏக்கர்களும், கொக்குளாயில் 520 ஏக்கர்களும், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம் என்பவற்றில் தலா 50 ஏக்கர்களும் தேறாங்கண்டலில் 120 ஏக்கர்களும் இராணுவத்தினர் வசமுள்ளதான வகையில் என மொத்தம் 16 ஆயிரத்து 720 ஏக்கர் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதிகளில்பெரியபடைநிலைகள்உள்ளதான தகவல் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது.


இதேபோன்று வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம்பிரதேசத்தில்வன்னியால்இடம்பெயர்ந்து வந்த மக்களுக்காக இடைத்தங்கல் முகாம் என்ற பெயரில் அமைக்கப்பட்ட மெனிக் முகாம் பகுதியில் 6 ஆயிரத்து 200 ஏக்கர்கள் நிலமும், கல்மடு மற்றும் முறிப்பு ஆகிய இரு இடங்களிலும் 2 ஆயிரம் ஏக்கர்கள் நிலங்களிலும், இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளதோடு 10 ஆயிரத்து 200 ஏக்கர்கள் வன வளத் திணைக்களத்தின் நிலங்களில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ள தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மன்னாரில் முள்ளிக்குளம் பகுதியில் 600 ஏக்கர்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ்வரும்நிலத்தில்,கடற்படையினரும் 3 ஆயிரம் ஏக்கர்கள் வன வளத் திணைக்கள நிலத்தில் இராணுவத்தினரும் குடிகொண்டுள்ள தகவல்களும் மறைக்கப்பட்டே உள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பகுதியில் வனவளத்திணைக்களத்தின்1100ஏக்கர்கள்,கடற்படையினரின்வசமும், புன்னை நீராவியில் 400 ஏக்கர் சிவில் பாதுகாப்பு படையினர் வசமும் உள்ளதோடு, ஜெயபுரம் பகுதியில் 450 ஏக்கர்கள் இராணுவத்தினரின் வசமும் வன்னேரியில் 25 ஏக்கர் இராணுவத்தினர் வசமும் என இங்கும் 1975 ஏக்கர்கள் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலத்தில்படையினர்நிலைகொண்டுள்ளனர்.

இவ்வாறு மறைக்கப்பட்ட அளவுகள் மட்டும் 40 ஆயிரம் ஏக்கர்களைக் கடந்து விட்டபோதிலும், அதில்முல்லைத்தீவில்16ஆயிரத்து720ஏக்கர்களும், வவுனியாவில் 10 ஆயிரத்து 200 ஏக்கர்களும், மன்னாரில்3ஆயிரத்து800ஏக்கர்களும், கிளிநொச்சியில் 1976 ஏக்கர்களுமாக மொத்தம் 32 ஆயிரத்து 695 ஏக்கர்கள் குறித்த புள்ளி விவரங்களேஇங்கேஇனம்காட்டப்பட்டுள்ளன.

இந்த வகையில் அரச அதிபரின் ஆளுகைக் காணிகளும் , தனியார் காணிகளும் 27 ஆயிரத்து 230 ஏக்கர்களிலும், வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசித் திணைக்களங்களின் காணிகள் 32ஆயிரத்து 695 ஏக்கர்களிலும் (எம்மால் இனம் காணப்பட்டவை மட்டுமே இதில் அடங்குகின்றன. இதனை விட வேறு காணிகளும் உள்ளதாகவே கூறப்படுகின்றது) என மொத்தம் 59 ஆயிரத்து 925 ஏக்கர் நிலத்தில் படையினர் நிலை கொண்டுள்ளமை இவற்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதாவது வடக்கில் 65 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இன்னமும் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்கின்ற செய்தி மீண்டும் உறுதியாக்கப்பட்டுள்ளது. அதாவது பிள்ளையார் பிடிக்க முயன்ற அரசுக்கு, மீண்டும் கிடைத்தது குரங்கு தான் என்பது நிரூபணமாகி, அரசு தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டுள்ளது. நல்லாட்சி அரசின் காலத்தில் தற்போது மக்கள் படையினர் நிலை கொண்டுள்ள அனைத்து நிலங்களையும் விடுவிக்குமாறு கோருவதான மாயை ஒன்றை ஏற்படுத்தவே அரசு முயன்று, குறித்த அளவைக் காண்பித்தது. உண்மையில் அரசிடமுள்ள மொத்த நிலங்கள் 60 ஆயிரம் ஏக்கர்களையும் தாண்டியுள்ள நிலையில் தனியாருக்குச் சொந்தமான நிலங்களையும் அரச அதிபரின் ஆளுகைக்கு உட்பட்டதான 27 ஆயிரத்து 230 ஏக்கர் காணிகளை முதல் கட்டமாக விடுவியுங்கள் என்றே தற்போது மக்கள் கோருகின்றனர். இவற்றை விடுவிக்க விரும்பாத அரசும் படைகளும் தமது பிடியில்உள்ளநிலங்களின்பொய்யான அளவுகளை தவறானவிதத்தில்காண்பித்துசர்வதேசத்தின் அழுத்தத்தில் இருந்து நழுவுவதற்கு முயல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



# வாசகர் திருமுகம்

## சுற்றுச்சூழல் பாதிப்பைக் கழைய ஒத்துழைப்பு நல்குவோமா?

'தம் கையே தமக்குதவி' என்றொரு முதுமொழி வழக்கில் உள்ளது. முன்னைய காலங்களில் மேற்குறிப்பிட்ட முதுமொழிக்கு அமைந்து சமூகத்துப் புத்திஜீவிகள், பெரியோர், பொதுஅமைப்புக்கள் தாமாக முன்வந்து ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு சமூகம் சார் பொதுப் பாதிப்புக்களைக் களைவதற்கு பங்களிப்பு வழங்கிச் செயற்பட்டுள்ளனர்.

அத்தகைய பொது நோக்கு இன்று நலிவுகண்டுள்ளமையாலேயே சுற்றுச்சூழல் பாதிப்புகள் உருவாகி அதன் மூலம் தொற்றுநோய்கள் எம் மத்தியில் பரவச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.


யாழ். மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் உள்ள கழிவுகளை அகற்றிச் சுற்றுச் சூழல் சுகாதாரம் பேணுவது குறித்து கடற்கரையோரங்களில் வாழும் மக்கள் சிறிதேனும் அக்கறை செலுத்துவதில்லை என யாழ். மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் குற்றச்சாட்டொன்றை முன் வைத்திருந்தார். குறிப்பாக குருநகர், பாசையூர் பகுதிகளது கடற்கரையோரங்களில் இத்தகைய பாதிப்புக்கள் பெருமளவில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொது மக்கள் நெருக்கமாக வாழும் குறிப்பிட்ட பகுதிகளில் கடற்கரையோரங்களில் கழிவுகள் பெருமளவில் சேர்ந்து சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்பைப் போக்க யாழ்ப்பாண பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ள முயலும் நடவடிக்கைக்கு அந்தப்பகுதிகளில் வாழும் பொதுமக்களும் உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் அது குறித்து எவரும் அக்கறை செலுத்தாதிருப்பது கவலைக்குரியது.

அரச அதிகாரத் தரப்புக்களே பொது மக்களது நலன்சார் செயற்பாடுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டுமென்ற இறுக்கமான மன உணர்வைக் கைக்கொள்ளாது, இன்றைய காலத்தின் முக்கிய தேவை கருதி, சமூகத்து உறுப்பினர்களான நாம் குறித்த விடயத்தில் எம்மாலான பங்களிப்பை வழங்கி எமது பகுதியை குப்பை கூளங்களால் பாதிப்பு ஏற்படாத பகுதியாகப் பேண ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படல் சிறப்பு. இது குறித்து நாம் அக்கறை செலுத்துவோமா?

எஸ்.எப். அன்ரன்,
பாஷையூர்

ஆர்யா நடிப்பில் உருவாகி வரும் புதிய படம் 'கடம்பன்'. இந்தப் படத்தை 'மஞ்சப்பை' இயக்குநர் ராகவா இயக்கி வருகிறார். ஆர்யாவுக்கு இணையாக கேத்ரீன் தெரசா நடித்துள்ளார். சூப்பர் குட் பிலிம்ஸ் சார்பில் ஆர்.பி.சௌத்ரி இந்தப் படத்தைத் தயாரித்துள்ளார். இந்தப் படத்துக்குத் தணிக்கைக் குழுவினர் யு சான்றிதழ் கொடுத்துள்ளனர். இந்தப் படம் தமிழில் மட்டுமல்லாது, தெலுங்கிலும் வெளியாகவிருக்கிறது. அதன்படி, இரண்டு மொழிகளிலும் இந்தப்படம் வெளியாகவுள்ளது. தமிழில் 'கடம்பன்' என்ற பெயரிலும், தெலுங்கில் 'கஜேந்திரடு' என்ற பெயரிலும் இந்தப் படம் வெளியாகிறது. கடம்பன் என்றால் முருகன், கஜேந்திரடு என்றால் விநாயகர். எனவே, தமிழில் தம்பியாகவும், தெலுங்கில் அண்ணனாகவும் அவதாரம் எடுக்கவுள்ளார் ஆர்யா. இந்தப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். படத்தின் படப்பிடிப்புகள் பெரும்பாலும் காடுகள், மலைகளில் படமாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## தமிழில் தம்பியாகவும் தெலுங்கில் அண்ணனாகவும் அவதாரம் எடுக்கும் ஆர்யா

2017 இல் சிறந்த கணவர் விருதைத் தட்டிச் சென்ற அப்பாவி...




பனிக்காலத்தில் தீ மூட்டிக் குளிர் காயும் போது வெயில் காலத்தில் பனியை வைத்து வெயில் காயக் கூடாதா...



இதச் சொன்னா மேல கீழ பார்த்துக்கிட்டு போறாங்க மக்களே...

சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கிரகம் எது?



யாழ்ப்பாணம் சார்

இவனுங்க மாசத்துக்கு ஒரு தடவை சிலிண்டர் விலைய ஏத்துறானுங்க




பேசாம சிலிண்டரப் பிடுங்கிப் போட்டுட்டு இந்த ஐடியாவைப் பின்பற்ற வேண்டியது தான்

Dear சூரியன்,
settings இற்குப் போய் கொஞ்சம்
brightness குறைக்க முடியுமா?
வெயில் தாங்க முடியல...



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** புதிய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்களுக்கு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**இடபம்:** பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு உண்டாகும்.

**மிதுனம்:** மற்றவர்களிடம் நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பணம், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கடகம்:** திட்டமிட்டுச் செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு, சகோதர வழியில் உதவி உண்டு.

**சிங்கம்:** தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். மனைவியின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். வெகுநாள் எதிர் பார்த்த சுபச் செய்தி வந்துசேரும். விருந்து விழாவில் கலந்து கொள்வர்.

**துலாம்:** மற்றவரிடம் பேசுவதில் நிதானம் பின்பற்றவும். பணியாளர்கள், வி ண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள், பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணி புரிவீர்கள். லாபம் உயரும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு, வெற்றி காண்பீர்கள். சமூகத்தில், அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில், லாபம் அதிகரிக்கும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**மகரம்:** மனக்குழப்பத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் நடக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர். பிள்ளைகளின் செயல்பாடு ஆறுதல் அளிக்கும்.

**கும்பம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்.

Vanitha @bunnyta07
சிறுவர்களை நோகடிக்காதீர்கள் ஏனெனில் அங்கிருந்து தான் வந்தீர்கள். வயதானவர்களைக் கேலி செய்யாதீர்கள் ஏனெனில் அங்கேதான் போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

41 392 536

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## சிம்மம்

அர்த்தாஷ்டம சனியின் தாக்கத்தோடு புத்தாண்டை எதிர்கொள்ள உள்ளீர்கள். இருப்பினும் குருபகவான் அருளால் கவலைகள் காணாமல் போகும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். மற்றவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக உணர்வீர்கள். உறவினர்கள் வழியில் பிரச்சினைகள் உருவாகும். நல்லது என்று நீங்கள் ஒன்று சொல்ல அது அடுத்தவர்கள் கண்களுக்குத் தவறான வழிகாட்டுதல் என்று தோன்றும் என்பதால் முற்றிலும் அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்வதைத் தவிர்க்கவும். அதுமட்டுமன்றி அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கியிருப்பது அவசியம்.

நெருங்கிய நபர் ஒருவருக்கு இக்கட்டான சூழலில் உதவி செய்ய இயலாமல் தர்ம சங்கடமான சூழலை எதிர்கொள்ள நேரிடும். ஏப்ரல், மே மாதங்களில் தொழிலில் இடமாற்றம் இருக்கும். பொருளாதார நிலையில் இழப்பு ஏதும் நிகழாத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். வருமானத்தை அசையாச் சொத்துக்களாக மாற்றிக் கொள்வது நல்லது. சொத்துக்களை வாங்கும் பொருட்டு கடன்பட நேர்ந்தாலும் கவலைப்படாதீர்கள். வீடு, வண்டி, வாகனம், மனை வாங்கும் வாய்ப்புக்கள் உருவாகும்.

சொத்துக்களை வாங்குவதில் கவனம் தேவை. உங்களின் தனிப்பட்ட திறமைகள் வெளிப்படும் நேரம் இது. எதிர்காலத்திலும் உங்கள் பெயர் நிலைத்து நிற்கும் படியான பொதுக்காரியங்களில் ஈடுபட்டுப் புகழ் பெறுவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றக் கூடுதலாகச் செலவழிக்க நேரிடும். அவர்களது எதிர்காலம் சிறக்க சில முன்னேற்பாடுகள் செய்வது நல்லது. தொடர்பணிச்சுமையால் ஓய்வெடுக்க இயலாது போகும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வீண் குழப்பத்தால் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்கவும். நெருக்கமான நபர் ஒருவரால் ஏமாற்றப்படும் வாய்ப்பு உண்டு.

மாணவர்கள் கல்வியில் இடைஞ்சல்களைச் சந்திக்க நேரும். தேர்வின்போது கூடுதல் கவனம் அவசியம். கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.

பெண்கள் கூடுதல் கவனத்துடன் குடும்ப சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டியது கட்டாயம். குடும்ப விவகாரங்களைக் கணவர் துணையுடன் அணுகுவது நலம். சொத்து விவகாரங்களில் இணைந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். முன்பின் தெரியாதவர்களிடம் அதிக எச்சரிக்கை அவசியம்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் இருக்கும். பொறுப்புக்கள் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி நகைகள், வாசனைத் திரவியங்கள், விலையுயர்ந்த பொருள்கள் செய்வோருக்கு இலாபம் கிடைக்கும். சங்கடங்கள் இருந்தாலும் கவலை கொள்ளத் தேவையில்லை. எந்தச் சூழலிலும் பாதை மாறாத நேர்மையான செயற்பாட்டின் மூலம் நற்பெயரோடு உங்கள் லட்சியத்தையும் அடைவீர்கள். பொதுவாக சனியின் தாக்கம் இருந்தாலும் குருபகவான் அருளால் அவற்றைத் தகர்த்தெடுத்த செயல்களில் எந்தச் சூழலிலும் பாதை மாறாமல் நேர்மையான செயற்பாட்டால் எதிர்பார்த்த வெற்றி பெறுவீர்கள்.

**பரிகாரம்:**
வருடப்பிறப்பன்று சிவாலயத்தில் வழிபட்டு, இயன்ற அன்னதானம் செய்யுங்கள். அவ்வப்போது தட்சணாமூர்த்தியைத் தரிசிக்கலாம்.




பெண்களுக்கான பஞ்சாபி வகைகளில் எம்பிரோயிட் வேலைப்பாடுகளுடன் நவீன வடிவத்தில் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 6 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. ஒன்லைன் மூலமாகவும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

## வயிற்றுக் கோளாறுகளை குணமாக்கும் ஆதி முத்திரை



ஆதி என்பது எல்லாவற்றுக்கும் முந்தையது, பழைமையானது. இந்த முத்திரை ஆரம்ப காலம் முதலே செய்யப்பட்டுவருவதால் 'ஆதி முத்திரை' என்று பெயர் பெற்றுள்ளது.

**செய்முறை :**
கட்டைவிரலைமடக்கி, சுண்டுவிரலின்மேட்டுப்பகுதியில்வைத்து அழுத்த வேண்டும். ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரலை மடக்கி, கட்டை விரலைச் சுற்றிப் பிடிக்க வேண்டும்.
விரிப்பின் மீது சப்பளங்கால் இட்டு, நேராக அமர்ந்தோ, நாற்காலியில் நேராக அமர்ந்து பாதம் தரையில் பதியும்படி இரு கைகளாலும் இந்த முத்திரையைப் பிடிக்க வேண்டும். தினமும், 20 முதல் 40 நிமிடங்கள் வரை செய்யலாம்.

**பலன்கள் :**
நுரையீரலின் மேல்பகுதிக்கு ஒட்சிசன் செல்ல உதவுகிறது.
முறையற்ற சுவாசம் சரியாகும். அனைத்து சுவாசப் பிரச்சினைகளும் தீரும்.
தலை, கழுத்து, தோள்பட்டை, கைகள் மற்றும் விரல்களில் வரும் இறுக்கம் தளர்கிறது.
மூளை மற்றும் தொண்டைப் பகுதிக்கு குருதி ஓட்டம் சீராகப் பாயும்.
நரம்புகளைப் பலப்படுத்தும்.
வயிற்றுக்கோளாறுகள், செரிமானப் பிரச்சனை, உணவு உண்டபின் மலம் கழித்தல், அடிக்கடி மலம் கழித்தல் சரியாகும்.
தோல், நாக்கு, கண், மூக்கு, காது ஆகிய ஐந்து புலன்களுக்கும் இழந்த சக்தியை மீட்டுத் தரும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 11.04.2017

1544 - செரிசோல் போரில் பிரெஞ்சுப் படைகளால் ஸ்பானியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
1689 - மூன்றாம் வில்லியமும் இரண்டாம் மேரியும் பெரிய பிரித்தானியாவின் இணைந்த ஆட்சியாளர்களாக முடி சூடினர்.
1809 - பிரான்ஸ் மற்றும் ஐக்கிய ராச்சியத்துக்கிடையே பாஸ்க் வீதி கடல் போர் இடம்பெற்றது.
1881 - ஆபிரிக்க-அமெரிக்க பெண்களின் உயர் கல்விக்கான ஸ்பெல்மன் கல்லூரி அல்லாண்டா, ஜோர்ஜியாவில் தொடங்கப்பட்டது.
1909 - டெல் அவிவ் நகர் உருவாக்கப்பட்டது.
1945 - இரண்டாம் உலகப் போரில் புச்சன் வோல்ட் வதைமுகாம் அமெரிக்கப் படைகளால் விடுவிக்கப்பட்டது.
1951 - கொரியப் போர்: அமெரிக்க அரச தலைவர் ஹாரி ரூமனால் இராணுவ ஜெனரல் டக்ளஸ் மக் ஆதர் கொரிய கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
1957 - சிங்கப்பூர் சுயாட்சிக்கு ஐக்கிய ராச்சியம் அனுமதியளித்தது.
1961 - நாஸி லெப்டினன் கேணல் அடொல்ப் ஈச்மன் மீதான விசாரணை ஜெருசலேமில் தொடங்கப்பட்டது.
1970 - மனிதர்களைச் சுமந்து செல்லும் 7ஆவது விண் ஓடமாக அப்பலோ-13 தொடங்கப்பட்டது.
1979 - உகண்டா சர்வாதிகாரி இடி அமிக் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.
2002 - துனிஷியாவில் அல்கெய்தா மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.
2016 பேரவையின் செயற்குழுவிலிருந்து விக்கி விலகினார் எனத் தெரிவிப்பு.

## நாளை


**பங்குனி-30**
புதன்கிழமை -12.04.2017
திதி: பிரதமை பி.ப.12.51
நட்சத்திரம்: சுவாதி முழுவதும்
சுபநேரம்:04.36-06.06 வரை
ராகுகாலம்:12.06-01.36 வரை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1356
சீட்டிழுப்பு திகதி 2017.04.10
வெற்றி இலக்கங்கள்
26 48 55 60 U
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,183,268/-

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 639
சீட்டிழுப்பு திகதி 10.04.2017
திங்கட்கிழமை
19 23 37 46 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 42, 146, 092/=
Web: www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 20.04.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2865 திகதி: 10.04.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
12 15 22 26 S
போனஸ் இல. 39
புதன்கிழமை ஜக்பொட்
ரூ. 56,436,007/-
Web: www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை **மதிவதனி** அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குமாரசாமி (K.K)

(கொழும்பு கல்சி நிறுவன முன்னாள் முகாமையாளர்,பெட்டா ரேட் கொம்பனி கொழும்பு முன்னாள் பங்காளர்,மட்டக்களப்பு குபேரன் ஏஜன் சீஸ் முன்னாள் உரிமையாளர்.)



இணுவில் கிழக்கு கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்களப்பு, வன்கூவர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட க.குமாரசாமி 08.04.2017 சனிக்கிழமை வன்கூவரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அனுமார் கதிர்காமர் கந்தையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக்கணவரும்திருமதி மகேஸ்வரி அருணாசலம், திருமதி இராசமணி சுவாமிநாதப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரதாசன் (U.K). நகுசன் (U.K).சுதர்சன் (வன்கூவர்). பவானி(U.K). ஜனனி(U.K) ஆகியோரின் அன்புத்தந்தையும். திருமதி தவமணி கணகசபாபதி. திருமதி புனிதவதி சுப்பிரமணியம் ,காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.04.2017) திங்கட்கிழமை வன்கூவரில் நடைபெறும் . இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்

**திருமதி தனலக்சுமி குமாரசாமி (வன்கூவர்) 001 6045 653763**
**திருமதி மகேஸ்வரி அருணாசலம் (கொக்குவில்)**
**திருமதி இராசமணி சுவாமிநாதபிள்ளை (இணுவில்)**
**சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்(மருமகன்) (பி.க.u) 077 740 9124**

## திருமதி சரஸ்வதி நாகேந்திரம்



தோற்றம்.09.10.1930
மறைவு.08.04.2017

கல்திட்டி லேன் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சரஸ்வதி நாகேந்திரம் 08.04.2017 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர வேலு இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகலிங்கம், கனகமணிகனிலூசியாஆகியோரின்அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற பாக்கியம், நேசம்மா, மனுவல் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் இராசரத்தினம் காலஞ்சென்ற சிவபாதம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, மகேஸ்வரி, யோகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும்குகனேஸ்வரி, தவமலர், தம்பிராசா, சொர்ணலிங்கம், காலஞ்சென்ற யோகராசா, சுனித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்திட்டி லேன், கொக்குவில்**
**தகவல்**
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

உதிப்பு
13 . 01 . 1927



உதிர்வு
08 . 04 . 2017

**யா/சாவகச்சேரி**
**இந்துக்கல்லூரியின் நிறுவுநர்**
**அமரர் தாமோதரம்பிள்ளை**
அவர்களின் பேரனும் கல்லூரியின் பயன்பாட்டுக்காக பேருந்து ஒன்றை அன்பளிப்பாக வழங்கியவருமான

### சரவணமுத்து தாமோதரன்

அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு கல்லூரிச்சமூகம் பெரும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச்சமூகம்,**
**யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்

*(சின்னத்தங்கச்சி, Doctor Aunty)*



மலர்வு 15.12.1933
உதிர்வு 07.04.2017

யாழ். தட்டா தெருச்சந்தியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் கடந்த (07.04.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் Dr.இராமலிங்கம் சுப்பிரமணியத்தின் அன்புத் துணைவியும் யாழ்.தட்டா தெருவைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா பொன்னுத்துரை-காலஞ்சென்ற விசாலாட்சி தம்பதியரின் மூத்த மகளும் அத்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம்- காலஞ்சென்ற நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் அருணன் (கண்ணன் சுவிஸ்), அனுஷா (ஜேர்மனி), அனுலா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும் விஜி (சுவிஸ்), ரவீந்திரன் (ஜேர்மனி), செல்வக்கிருபாகரன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஏஞ்சன், ஏஞ்சல், லக்ஸ்மிபிரியா, அனுஷன், யோகலக்ஸ்மி, தேனிகா அரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் (சிறாப்பர்), காலஞ்சென்ற தங்கேஷ்வரி(பேபி), புவனேஸ்வரி (Director of Small Industries, Colombo), இராசலிங்கம் (கனடா), சாந்தலிங்கம்(கனடா), யோகேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் புவனேஸ்வரி இரத்தினசிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும் காலஞ்சென்ற அருணகிரி, சரஸ்வதி, ஜெகநாதன்(கொழும்பு), சரஸ்வதி(கனடா), விமலாதேவி(கனடா), மகேந்திரா(கனடா), காலஞ்சென்றவர்களான குமாரசாமி, வைத்தியகலாநிதி விஷ்வலிங்கம்(முன்னாள் விரிவுரையாளர் லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி), செல்வபாரதி(ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ்சென்ற செல்லையா இரத்தினசிங்கம்(சேவையர்) அவர்களின் ஒன்றுவிட்ட மைத்துனியும் யாழ். தட்டா தெருவைச்சேர்ந்த காலஞ்சென்ற இராசையா தங்கரத்தினத்தின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2017) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**396/570, K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 3359, 077 639 6305**

**தகவல்:**
**Dr.சுப்பிரமணியம் (கணவர்)**
**பிள்ளைகள்**

*பன்றித்தலைச்சி...*

னர். அடியவர்கள் அலையென திரண்டதால் நேற்றைய திருவிழாவில் 27 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அடியார்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் உட்பட சாரணர்கள் ஆலய நிர்வாகிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கினர். எங்கு பார்த்தாலும் அடியார்களின் கூட்டம் காணப்பட்டதால் கடந்த இரண்டு திங்கட்கிழமைகளில் ஏற்படாதிருந்த திருட்டுச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன என ஆலய அறிவிப்பு பகுதியில் கடமையாற்றியோர் தெரிவித்தனர்.

ஆலயத்தில் நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். இந்தச் சந்தர்ப்பங்ளை திருடர்களும் பயன்படுத்திக் கொண்டனர். ஒருதாலிக் கொடி 11 சங்கிலிகள் ஒரு மோதிரம் உட்பட 27 பவுண் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதென அறிவிப்பு அலுவலகத்தில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆலய வீதிகள் உள் பிரவாகம் பொங்கல் படையல் செய்யும் இடம், கடைத் தொகுதிகள், அன்னதான மடங்கள் போன்ற இடங்களில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

ஆலய வீதியில் விளையாடிக் கொண்டிருந்த 2 வயது குழந்தையைக் கையில் பிடித்து அழைத்துச் செல்வது போல கூட்டிச் சென்ற நபர், குழந்தை அணிந்திருந்த மோதிரத்தை அபகரித்துச் சென்றுள்ளார் என்று முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அலைபேசிதிருடிய சுன்னாகம்பகுதியைச்சேர்ந்த இளம்பெண்ணை அலைபேசியின் உரிமையாளர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார் எனவும் வேறொரு பெண்ணும் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் பிடிககப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று காலை தொடக்கம் இரவு வரை தொடர்ந்து தூக்குக்காவடிகள் ஆலயத்தைநோக்கிவந்தவண்ணமிருந்தன. நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் பொங்கல் இடம்பெற்றது. ஒருவர் பொங்கும் வரை மற்றவர் நீண்டநேரம் காத்திருக்கவேண்டியநிலை காணப்பட்டது. இதனால் இரவு 9 மணி வரை அடியார்கள் கூட்டம் குறையவில்லை.

"ஆலய உள்வீதி மற்றும் அடியார்கள் அதிகமாகக் காணப்பட்ட இடங்களில் ஏற்கனவே இரகசியக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் பதிவுகள் பார்வையிடும்போது திருடர்கள் சிக்குவார்கள்" என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-9-101)

*கறுப்பு...*

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் ஆலய முன்றிலில் காணாமற் போனோரின் உறவினர்கள் முன்னெடுத்து வருகின்ற போராட்டம் நேற்றுடன் 50 ஆவது நாளை எட்டியது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரி அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

"இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. 14ஆம் திகதி சித்திரைப் புதுவருடம். எம்மைப்பொறுத்தவரை பிள்ளைகள் திரும்பி வந்தால்தான் எந்தக் கொண்டாட்டம் என்றாலும் நடக்கும். கறுப்பு ஆடை அணிந்து புதுவருடத்தில் போராட்டம் நடத்தவுள்ளோம்"என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும், யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கும் போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன. (கு-5-6)

# வளி மண்டலத் தூய்மை.!

## மழைக்காடுகளின் பங்குபற்றுதல்

நில நடுக்கோட்டுப் பகுதியில் காணப்படும் மழைக்காடுகளின் மொத்தப் பரப்பளவு 17.8 மில்லியன் சதுர கிலோமீற்றர்கள் எனச் சொல்லப்படுகிறது. இவற்றுள் 4.2 மில்லியன் சதுர கிலோமீற்றர் நீளமான உலர்ந்த காடுகளும் அடக்கம். உலகில் உள்ள மழைக்காடுகளில் 50 சதவீதம் தென் அமெரிக்காவிலும் 30 சதவீதம் ஆபிரிக்காவிலும் மீதமுள்ளவை தெற்கு ஆசியா உள்ளடங்கலான பல பிரதேசங்களிலும் பரந்து காணப்படுகின்றது. பெற்றோல், டீசல் போன்ற படிம எரிபொருள்களால் வெளிவிடப்படுவதான காபனீரொக்சைட்டின் அளவில் ஏறத்தாழ ஐந்திலொரு பங்கை இந்த மழைக்காடுகள் உறிஞ்சி எடுத்துக் கொள்வதாக தாவரவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**காபனீரொக்சைட்**

நாடுகளுக்கிடையேயான புவிவெப்பமாதல் தொடர்பான குழுவின் அறிக்கைகள் ஒவ்வோர் ஆண்டும் 32 பில்லியன் தொன்கள் காபனீரொக்சைட் வெளிவிடப்படுவதான தகவலைச் சுட்டிக்காட்டியுள்ளது. இவற்றில் 15 பில்லியன் தொன் அளவுடையதான காபனீரொக்சைட் வளிமண்டலத்திலேயே தங்கியிருந்து பூமியை வெப்பமடையச் செய்கிறது. ஏனையவை குறிப்பாக, 17 பில்லியன் தொன் அளவுடையதான காபனீரொக்சைட் எங்கே போகிறது என்பது குறித்தான ஆய்வுகள் தற்போது நிகழ்த்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ பாதியளவு காபனீரொக்சைட் கடல் நீரில் கரைந்து போவதாகக் கூறப்படுகிறது. 4.8 பில்லியன் தொன் அளவிலான காபனீரொக்சைட்டை இந்த மழைக் காடுகளே உண்பதாக விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் மட்டும் இந்த அளவீடு என்பது 1.2 பில்லியன் தொன்களாகக் காணப்படுகிறது. ஆபிரிக்காவின் ஒவ்வொரு ஹெக்ரெயர் காடுகளும் 0.6 தொன் காபனீரொக்சைட்டை உண்பதான தகவல் சொல்லப்படுகிறது. ஆபிரிக்காவின் மழைக்காடுகளைப் பற்றியதான நாற்பது ஆண்டு கால ஆய்வுகள் இடம்பெற்றுள்ளதுடன் அந்த ஆய்வு கள் குறித்தான முடிவுகள் கூட வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.



**ஆய்வுகளின் செயல் நிலை**

ஆபிரிக்கக் காடுகள் மட்டுமன்றி தென்னமெரிக்க மற்றும் ஆசியக் காடுகளிலும் பரந்து கிடக்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் மரங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டது. வளிமண்டல காபனீரொக்சைட்டை உறிஞ்சுவதன் மூலம் இயற்கையானது எமக்கு உதவுகிறது. வாழ்தலுக்கான உதவிக்கரத்தை நீட்டுகிறது என்கிறார் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் ரோயல் சொசைட்டி ஆய்வாளர் மருத்துவர் சைமன் லூயிஸ். வளிமண்டலத்தில் உள்ள அதிகப்படியான காபனீரொக்சைட் மரங்களுக்கு உரமாக அமைவதால் மரங்களின் அளவு பெருக்கிறது. இந்த நிலையிலே மரங்கள் தொடர்ந்தும் அளவில் பெருத்துக்கொண்டே செல்லாது என்பதும் இந்த மழைக்காடுகளை மட்டுமே தொடர்ந்து நம்பிக் கொண்டிருக்க முடியாது என்பதும் ஆய்வாளர்களின் எச்சரிக்கையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் துடைத்தெடுக்கப்படும் 5 பில்லியன் தொன் காபனீரொக்சைட்டில் உள்ள காபனின் பெறுமான மதிப்பீடு என்பது 13 பில்லியன் பவுண்ட் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் முக்கியத்துவத்தை இந்தத் தொகையில் இருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது.


வளிமண்டலத்தை மாசுபடுத்துவதில் முன்னணியில் உள்ள நாடுகள் வனவளத்தைப் பாதுகாக்க முயற்சிக்கும் நாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய நட்ட ஈட்டுத்தொகையை இந்த ஆய்வுகள் முடிவு செய்வதாகச் சொல்லப்படுகிறது. மழைக்காடுகளின் மரங்கள் பெரிதாகிக்கொண்டே போகும் தன்மையின் அடிப்படையிலே புவிவெப்ப மண்டலக் காடுகளின் பல்லுயிர்களுக்கிடையே ஏற்படும் மாற்றங்களையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

**எதிர்வுகூறல்களில் இருந்தான முடிவு**

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் காடுகளில் சேமிக்கப்படும் காபனின் அளவைக் கண்டறிய லைபீரியாவில் இருந்து தன்சானியா வரையில் உள்ள ஆபிரிக்க நாடுகளுக்குரித்தான 79 அடர்ந்த வனப்பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் இருந்த 70 ஆயிரம் மரங்களின் சுற்றளவுகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பதிவு செய்யப்பட்டது. மரங்களின் உயரம், அடர்த்தி ஆகியவற்றைக் கொண்டு மேற்படி 79 வனப் பகுதிகளிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் எவ்வளவு காபன் சேமிக்கப்பட்டுள்ளது என்பதான தரவு கணக்கிடப்பட்டது. ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையிலே வளிமண்டலத்தில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் 1.2 பில்லியன் தொன் அளவுடையதான காபனீரொக்சைட் ஆனது இந்த வனப் பகுதிகளிலேயே உறிஞ்சி எடுக்கப்படுவது கணக்கிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்துரை



கச்சாய் வீதி, பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை கடந்த (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தையா மீனாட்சி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற இராசரத்தினம் (முன்னாள் அதிபர், ஸ்ரீசண்முகாந்தா வித்தியாலயம்) அவர்களின் அருமைச் சகோதரனும் கனகம்மாவின்(கிளி) அன்புக் கணவரும் முகுந்தன்(லண்டன்), காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் உதயணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேக்காவின் (லண்டன்) அன்பு மாமனும் கேசிகனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மதுரவாணி, கலைவாணி(கனடா), ஜெயானந்தசிவம், சிவநாராயணதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சரஸ்வதி(கனடா), தேவமலர்(விசுவமடு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2017) புதன்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சாய் றோட்,**
**பெரியமாவடி, சாவகச்சேரி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி நடராசா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.08.1937 | 10.04.2017 |

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி நடராசா (10.04.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சௌந்தரிப்பிள்ளை (பூநகரி) தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற செல்லத்துரை மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் வள்ளியம்மை காலஞ்சென்ற முத்துலிங்கம் (லிங்கம் சூ பலஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் இராசலட்சுமி, ஜெயலட்சுமி, வனிதாலட்சுமி (ஆசிரியர் யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சுகல்யா (ஆசிரியர் கொ/கள/சா அன்னம்மாள் மகா வித்தி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற கணேச பிள்ளை (முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்) மற்றும் சுந்தரலிங்கம் (கணக்காய்வாளர்), ரங்கநாதன் (மெக்கானிக்), ஜீவாகரன் (டிஜிரல் பிறிண்டிங், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் மதனராஜ் (Store Keeper, Freivht Link International), யாமினி (சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, கைதடி), கோவர்த்தனி, நிஷாயினி, தினாதிபன், ரிஷிகேஷ், அபிராமி, யதுசன், சதுசியன், காயத்திரி, சண்முகேஷ், சந்திரகாந்தன், தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நந்துஜன், தனுஷ்காந் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

---

தொடர்ச்சிகள்...

### விகிதாசார...

செப்ரெம்பருடன் முடிவடையவுள் ளது. இந்த நிலையிலேயே, மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே இடம்பெறும் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தலை நாடாளுமன்ற வரவுசெலவுத் திட்டத்துக்கு முன்னர் நடத்துவதற்கு அரசு எண்ணியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (து-5)

### ரூ.200...

கான வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வவுனியா சின்னடம்பன் கிராமத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (து-21)

### வேலை தேடும்...

யாள உணவு ஒறுப்புப் போராட்டத்திலும் ஈடுபடப்போவதாக வடக்கு மாணத்தை சேர்ந்த வேலை தேடும் பட்டதாரிகள் அறிவித்தனர்.

இந்தப் போராட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெறும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"அரச அலுவலங்கங்களில் வேலைவாய்ப்பு வழங்குமாறு வலியுறுத்தி வேலை தேடும் பட்டதாரிகள் நேற்றுடன் 43 நாட்களாக வடக்கு மாகாண ரீதியில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். உரிய பதில்கள் எதுவும் வழங்கப்படாததன் காரணமாக போராட்டத்தின் 45ஆவது நாளான நாளையதினம், அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் தெரிவித்தனர். அனைத்து பட்டதாரிகளையும் அணி திரண்டு வந்து இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (வ-21)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை **திருமதி மனோராஜி தர்மசீலன்** அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி சற்குணேஸ்வரி மருதையினார்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்**
**யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

## சிறுவர்...

செய்து கொண்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 21 சிறுவர்கள் தற்கொலை செய்துள்ளனர். இதன் பின்னர் தற்கொலை செய்து கொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்தது. 2013, 2014 ஆம் ஆண்டுகளில் எந்தச் சம்பவங்களும் பதிவாகவில்லை. 2015 ஆம் ஆண்டு 2 தற்கொலைச்சம்பவங்களும், 2016 ஆம் ஆண்டு 8 தற்கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு 48 தற்கொலை முயற்சிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதுவே அதிகூடிய பதிவாகக் கடந்த 7 ஆண்டுகளில் காணப்படுகின்றது. தொடர்ந்து வந்த ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 30 சம்பவங்களும், 2015 ஆம் ஆண்டு 21 சம்பவங்களுமாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மீண்டும் அதிகரித்து 22 தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-5)

## 15,000 முஸ்லிம்களை

நடத்தியும் எமது பிரச்சினைகளை அரச தலைவர் கவனத்தில் கொள்ளாவிட்டால் நாடு முழுவதும் உள்ள 20 இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்களால் அரச தலைவர் செயலகம் முற்றுகையிடப்படும்"

இவ்வாறு மன்னார் முசலி பிரதேசத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

முசலிப் பிரதேச மக்களின் வாழ்விடங்களையும், வாழ்வாதாரங்கள் வழங்கும் நிலங்களையும் சுவீகரிக்கும் வகையில் வில்பத்து சரணாலயம் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தி நேற்று 15ஆவது நாளாக முசலி மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளர்.

"எமது பூர்வீகமான குடியிருப்பு நிலங்களையும் விவசாயக் காணிகளையும் மேய்ச்சல் தரைகளையும், மேட்டு நிலக் காணிகளையும் புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அபகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த பகுதியில் உள்ள காணிகள் எமக்குச் சொந்தமானவை என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன" என்று முசலி மக்கள் தெரிவித்தனர். (வ-21)

## முன்னாள்...

பெரேராவின் வீட்டில் சமையல்காரராகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கோப்ரல் செனிவிரத்ன மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி கெக்கிராவவில் உள்ள கோப்ரலின் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் சிலர், அவர் வாகன விபத்தில் காயமடைந்து ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறி அவரது தந்தை மற்றும் இருவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

அவர்களை ராகம மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், ராமக பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்று, கோப்ரல் செனிவிரத்ன தற்கொலை செய்துகொண்டார் எனச் சடலத்தை ஒப்படைத்துள்ளனர். இதனை ஒரு விவகாரம் ஆக்காமல் சடலத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லுமாறு மேஜர் ஜெனரல் உதய பெரேரா கூறியிருக்கிறார்.

இந்த உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாக உயிரிழந்த கோப்ரலின் சகோதரர் கந்தானை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோதும், அந்த முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை. ராகம மருத்துவமனையில் தாம் மிரட்டப்பட்டதாகவும் சகோதரர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சடலத்தைக் கெக்கிராவவுக்குக் கொண்டு வந்த உறவினர்கள், கெக்கிராவ காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். நீதிவான் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சடலம் தற்போது அனுராதபுர மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை வரும் 20 ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (த5)

## மகிந்தவைப்...

தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

23 கோடி ரூபா செலவில் லைக்கா நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 150 வீடுகளைக் கொண்ட கிராமத்தை மக்களிடம் கைளிக்கும் நிகழ்வு, வவுனியா சின்ன அடம்பன் பகுதியில் நேற்று நடைபெற்றது. தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி என்று கூறும் மைத்திரி - ரணில் அரசு தமிழ் மக்களுக்குச் சார்பான சில கருமங்களை ஆற்றியிருந்தாலும், அதில் முழுமையாக திருப்தி கொள்ளமுடியாது.

தமிழ் மக்கள் தமது காணிகளை மீட்பதற்காகவும், காணாமற் போனோரைக் கண்டறிவதற்காகவும் தொடர்ந்து போராடுகின்றனர். ஒரு சிலர் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும், பட்டதாரிகள் தமது வேலைவாய்ப்புக்காகவும் போராடி வருகின்றனர். இந்த அரசு போராட்டங்களில் அக்கறைகொள்ளாமல் இருக்கின்றது.

இவ்வாறான நிலமை நீடித்துத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டால் தயவு தாட்சணியமின்றி இந்த அரசையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்படும்.

நாட்டிலுள்ள தேசியப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட்டு ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அந்த அரசமைப்பினூடாக நாங்களும் சமமாக, ஒற்றுமையாக, சுயமரியாதையுடன் வாழ வேண்டுமென்று இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு கோரிக்கையை முன்வைத்து வருகிறோம்.

கடந்த 80 வருடங்களாக மக்கள் ஜனநாயக ரீதியாக தேர்தல்களின் மூலமாக அம்முடிவைத் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் அந்த முடிவு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த கோரிக்கையை தொடர்ந்து எமது மக்கள் முன்வைத்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதனுடன் வேறு பல கோரிக்கைகளையும் முன்வைத்துப் போராடுகிறார்கள். குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகள், காணிகள் சம்பந்தமான பிரச்சினைகள், மக்களின் மீள்குடி யேற்றம், அரசியல் கைதிகள் சம்பந்தமான பிரச்சினைகள், புனர்வாழ்வு, தொழில் வாய்ப்பு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அத்துடன் இந்தப்பிரச்சினைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட வேண்டிய தேவையிருக்கின்றது. புதிய அரசை உருவாக்குவதற்கு தமிழ் மக்கள் ஒரு பெரும் பங்களிப்பை செய்தார்கள். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் பெரியளவில் இருந்தது. ஆனால் அரசின் போக்கானது அவர்களுடைய கொள்கைகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய பேச்சைப்பொறுத்த வரையில் பழைய அரசுக்கும் புதிய அரசாங்கத்திற்குமிடையில் ஒரு மாற்றத்தை காண்கிறோம். இருந்தாலும் எமது மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், காணாமல் போனோர் சம்பந்தமாக ஒரு முடிவு விரைவில் கிடைக்க வேண்டும், அரசு துரிதமாக செயற்படவேண்டும் என்பது அத்தியாவசியமாக இருக்கிறது. அது அவர்களின் கடமை. அரசு பதவி ஏற்று இரண்டு வருடகாலமாகி விட்டது. மக்களுடைய காணிகள் மக்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இராணுவம் மக்களுடைய காணியில் விவசாயம் செய்து அதில் வியாபாரம் செய்து தொழில்செய்து உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எமது மக்கள் நலன்புரி நிலையங்களிலும், முகாம்களிலும், இன்னொருவர் வீடுகளிலும், அவர்களின் தயவில் தங்கி வாழ முடியாது தவிக்கின்றார்கள்.

எமது மக்கள் தங்களுடைய காணிகளுக்கு திரும்ப வேண்டும். ஓரளவுதான் அரசு மக்களின் காணிகளை விடுவித்திருக்கிறது. மன்னாரில், வவுனியாவில், கிளிநொச்சியில், திருகோணமலையில், மட்டக்களப்பில், அம்பாறையில் கூட காணிகள் விடப்பட வேண்டியிருக்கின்றன. ஆனபடியால் இனியும் தாமதிக்காமல் அரசு மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும். அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டால் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என சொல்லப்படுகின்றது. அந்தச் சட்டமும் நீக்கப்படவில்லை. அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இந்த நிலமை தொடர முடியாது. புதிய அரசு இரண்டு வருடமாக ஆட்சியில் இருக்கின்றது. எமது மக்கள் இன்னும் பொறுமையாக இருக்க முடியாது. நீதியைக் கேட்டு காணாமல் போனோர் சம்பந்தமாக முடிவைக் கேட்டு காணிகள் மற்றும் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் எனக் கேட்டும் போராடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலைவாய்ப்புக் கோரி போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் எமது இளைஞர்களுக்கு போதிய அளவுக்கு வேலைவாய்ப்பு இருக்கவில்லை. இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இந்தவிதமான புறக்கணிப்பு தொடர முடியாது. இந்த நிலமை தொடருமாக விருந்தால் இந்த அரசை மக்கள் வெறுக்க வேண்டிய நிலமை ஏற்படும். இதனை அரசு புரிந்து கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார். (த-5-37)

## அரசியல்...

மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் எடுக்க வேண்டும்"

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மாரிமுத்து சக்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச 3 மாத காலத்துக்குள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பிணை வழங்க மறுப்பு தெரிவிக்க வேண்டாம் எனவும் புதுவருடத்துக்கு முன்னர் அவர் தொடர்பான குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலைமை அமைச்சரின் தனிப்பட்ட தலையீடு காணப்படுவதை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. எனினும் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக உரிய குற்றச்சாட்டுகளின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் உணவு ஒறுப்பு போராட்டங்களை பல தடவைகள் நடத்தியிருந்தனர். ஆனால் அவர்களை அரசு கண்டு கொள்ளவே இல்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. இதுதவறான அணுகுமுறையாகும். இந்த ஆண்டு பன்னாட்டு வெசாக் தினம் இலங்கையில் கொண்டாடப்படவுள்ளது. வெசாக் மாதத்தின்போது அரச தலைவர் தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவார். எனவே பன்னாட்டு வெசாக் பண்டிகைக் காலத்தின் அரசியல் கைதிகளை விடுவிக்கும் அரசியல் தீர்மானத்தை அரச தலைவரும் தலைமை அமைச்சரும் எடுக்க வேண்டும். அவர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்றுள்ளது. (வ-21)

## பொன்சேகாவை...

கட்சியில் உயர்பதவி வழங்கமுடியுமென்றால், 30 வருடங்களாக கட்சிக்காகப் பாடுபட்ட எனக்கு ஏன் மீண்டு மொரு சந்தர்ப்பத்தை வழங்கக்கூடாது?

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பதவிகளில் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியில் மீண்டும் இணைந்து தனது அரசியல் பயணத்தை ஆரம்பிப்பார் என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இது குறித்து திஸ்ஸ அத்தநாயக்கவிடம் 'சுடர் ஒளி' நேற்று வினவியது.

இதற்குப் பதிலளித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் சாதகமான முறையில் கருத்து வெளியிட்டுள்ளார். அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை; நண்பரும் இல்லை. சில வேளைகளில் அரசியல் சூழ்நிலைக்கேற்ப முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அது சரியாக இருக்கலாம். பிழைத்தும் போகலாம். அந்த வகையில், 2015 ஆம் ஆண்டு நான் எடுத்து முடிவு குறித்து கவலை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால், இது அரசியல் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்காகப் பல வருடங்கள் உழைத்துள்ளேன். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லாம் கட்சியுடன் இருந்துள்ளேன். மீண்டுமொரு வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டால் அதை நிச்சயம் ஏற்பேன். மன்னிப்புக் கேட்கமாட்டேன். முன்கூட்டியே கூறியது போல் இது ஒரு அரசியல் முடிவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச வேண்டியுள்ளது. அந்தப் பேச்சின் பின்னரே அடுத்த கட்டம் பற்றி அறிவிக்கப்படும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தீவிர பரப்புரை செய்தார். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் உயர் பதவி வழங்க முடியும் என்றால், எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவது நியாயமாகத்தானே இருக்கும் என்றார். (த-5)

## போர்க்...

னெடுக்க வேண்டும்"

இவ்வாறு, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெரி வலியுறுத்தினார்.

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்ன அடம்பனில் 150 வீடுகளை பயனாளிகளிடத்தில் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் முன்னாள் தலைமை அமைச்சர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து உங்களுடைய முதலமைச்சருடன் பேசியிருந்தார். இங்குள்ள அவலங்கள் குறித்து அவர் அறிந்து கொண்டார். இங்கு நடந்த மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று டேவிட் கமரூன் ஐக்கிய நாடுகள் சபையிடம் வலியுறுத்தியிருந்தார். இலங்கைக்குச் சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.


2015ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத் தொடரிலும், ஏன் கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத் தொடரிலும் தமிழ் மக்களுக்காக நானும் குரல் கொடுத்தேன். சில விடயங்களையும் குறிப்பிட்டிருந்தேன். அவரும் நாங்களும் சேர்ந்து உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்தும் கரிசனை செலுத்தி வருகின்றோம்."

ஜெனிவா கூட்டத் தொடரில் உங்கள் பிரச்சினை தொடர்பில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். சில விடயங்களை குறிப்பிட்டு வருகின்றோம். எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டது போன்று தற்போதைய அரசு முன்னைய அரசை விட மாறுபட்ட அரசாக இருக்கிறது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி வருவதை நாங்கள் அறிகின்றோம். நாம் இந்த அரசிடம் இருந்து எதிர்பார்ப்பது ஓரளவு நடவடிக்கைகளை அல்ல. மேலும் பல நடவடிக்கைகளை அவர்கள் செய்ய வேண்டியுள்ளது. உங்களுடைய சாதாரண வாழ்க்கை வழமைக்கு திரும்பவும் இந்த அரசு நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டும். இங்குள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும். அங்கிருக்கின்ற முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்பது குறித்தும் நாங்கள் கூடிய கவனம் செலுத்துகின்றோம்.


உங்களுடைய இடங்கள் குறித்து அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும் என இந்த இடத்தில் கேட்டுக் கொள்கின்றோம். அதனை முறையாகச் செயற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். உங்களுடைய வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அந்த வகையில் உங்கள் சொந்தக் காணியில் நீங்கள் மீள்குடியேற அனுமதி வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அனைத்து மக்களும் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும்.

இதுதான் கடைசி மீள்குடியேற்றம் எனக் கூறும் அளவுக்கு நிலமை மாற வேண்டும். உள்நாட்டுப் போரில் இறந்தவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் என்ற அடிப்படையில் ஒரு நீதியான விசாரணை நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இவை எல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை அரசு நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இங்கு இருக்கின்ற உங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்று நாங்கள் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் உங்களுக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். இப்படி இப்படி செய்யுங்கள் என நாங்கள் இந்த அரசை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்-என்றார். (வ-21-37)

# சிறுத்தையும் இரு மான்களும்



ஒரு நாள் ஒரு சிறுத்தை பசியுடன் உணவைத் தேடி அலைந்தது. அப்போது காட்டில் உள்ள மலையடி வாரத்தில் ஒரு கறுப்பு மானும், ஒரு புள்ளி மானும் மேய்ந்து கொண்டிருப்பதை அது கண்டது. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடி வாரத்துக்குச் சென்றது. அது எந்த மானைத் தன் இரையாக்குவது என்று இன்னமும் முடிவு செய்யவில்லை. அதேவேளையில் மான்கள் இரண்டும் சிறுத்தையைக்கவனித்து விட்டு வேகமாக ஓடத் தொடங்கின. இப்போது அவற்றை சிறுத்தை துரத்த ஆரம்பித்தது. சிறிது தூரம் ஒன்றாகச் சேர்ந்து ஓடிய மான்கள் ஓர் இடத்தில் வலது இடது எனப் பிரிந்து ஓடத் தொடங்கின. துரத்தி வந்த சிறுத்தையோ அவ்விடத்துக்கு வந்து சிறிது தயங்கி நின்றது. பின்னர் "சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதுதான் கொழு கொழு என்று இருக்கிறது. அடித்தால் அதிக இறைச்சி கிடைக்கும்" என்று முடிவு செய்து கறுப்பைத் துரத்தத் தொடங்கியது.




அதற்குள் அந்த மான் சிறுத்தையால் துரத்திப் பிடிக்க முடியாத அளவு தொலை தூரத்துக்குச் சென்று விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக்கூடிய மான். அதை இப்போது பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகிவிட்டது. சரி.. புள்ளிமானைப் பிடிப்போம்" என பாதையை மாற்றி புள்ளி மான் போன திசையில் ஓடத் தொடங்கியது. ஆனால் புள்ளி மானோ எப்போதோ வெகு தூரத்துக்கு பஞ்சாய்ப் பறந்து சென்று விட்டிருந்தது.

**காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.**
**சந்தர்ப்பத்தைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்.**

**முக்கியமான நேரத்தில் முக்கியமான முடிவை விரைவாக எடுக்க வேண்டும்.**

# தாஜ்மஹால்



உலகில் உள்ள அழகான கட்டடங்களில் ஒன்றாக தாஜ்மஹால் கருதப்படுகிறது. இது முழுவெண் சலவைக் கற்களால் கட்டப்பட்ட கட்டடம். இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ரா என்னுமிடத்தில் யமுனை நதிக் கரையில் இது அமைந்துள்ளது. இது மொகலாய மாமன்னர் 'ஷாஜகான்' இறந்ததன்மனைவிமும்தாஜின் நினைவாகக் கட்டிய கட்டடமாகும். 'மும்தாஜ்' என்றால் அரண்மனை அணிகலன் என்பது பொருள். இது பெரும் செலவில் மொகலாயப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இதனைக் கட்டிமுடிக்க 21 ஆண்டுகள் பிடித்தன. ஆசியாவின் பல பகுதிகளிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் கட்டடக் கலைஞர்கள் பலர் வந்து இதனை அழகுபடுத்தினர். இந்தக் கட்டடத்தின் உட்பகுதி அழகிய பூ வேலைப்பாடுகளோடு இஸ்லாமிய இறைமறையான திருக்குர்ஆனின் வாசகங்களையும் கொண்டமைந்துள்ளது. இந்தக் கட்டடத்தைச் சுற்றிலும் நடைபாதையில் வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டு அதனைச் சூழ அழகிய பூந்தோட்டங்களும் நீர்த்தடாகங்களும் உள்ளன. முற்றிலும் சலவைக் கல்லாலான இந்தக் கட்டடம் நிலாவொளியில் மிக அழகாகக் காட்சியளிக்கும். இதன் பிம்பம் நீர்த்தடாகங்களில் விழுவது கண் கொள்ளாக் காட்சியாகும். இது உலக அதிசயங்களில் ஒன்றாகும்.



## வீதியிலே வாகன வரிசை

1. முதலாவது வாகனத்தைச் சுற்றி வட்டம் வரைவோம்.
2. நான்காவது வாகனத்தின் கீழ் ✓ இடுவோம்.
3. மூன்றாவது வாகனத்தை நிறம் தீட்டுவோம்.
4. இரண்டாவது வாகனத்தின் கீழ் X இடுவோம்.

# பார்த்தெழுதுதல்

பாட நூல்களில் இருந்தோ, அல்லது பாட நூல் அல்லாத மேலதிக வாசிப்பு நூல்களில் இருந்தோ கொடுக்கப்படும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், பந்தி, பாடல் என்பவற்றைப் பார்த்து பிரதி பண்ணல் பார்த்தெழுதுதல் எனப்படும்.

### பார்த்தெழுதும்போது கவனிக்க வேண்டியவை:

1. எழுத்துக்களைச் சீராகவும், தெளிவாகவும் எழுதுதல்.
2. எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து உறுப்பமைய எழுதுதல்.
3. எழுத்துக்களிடையேயும், சொற்களிடையேயும் ஏற்றதான இடைவெளிகளை விட்டு எழுதுதல்
4. நிறுத்தற் குறிகளை சரியான இடத்தில் இட்டு எழுதுதல்.
5. வாக்கியங்களின் ஆரம்பத்திலும் சொற்களின் முதலெழுத்தாகவும் மெய் எழுத்துக்கள் வராதவாறு கவனித்து எழுதுதல்.
6. எழுத்தின் உறுப்புக்களைப் பிரித்து விடாது சரியான உயிர்க் குறிகளை இட்டு எழுதுதல்.
7. பொருளில் மயக்கம் ஏற்படாதவாறு பொருள் விளங்கி அதற்கேற்ப ஒழுங்கமைய எழுதுதல்.

### பார்த்தெழுதலின் நன்மைகள்

தினமும் ஒரு சிறிய பந்தியை அல்லது ஐந்து வாக்கியங்களை அல்லது பத்துச் சொற்களையாயினும் பார்த்தெழுதி வருவதால் பல நன்மைகள் ஏற்படும்.

1. எழுத்துக்கள் உறுப்பமைய எழுதப்படும்.
2. நிறத்தற் குறியீடுகள், உயிர்க்குறிகள் என்பன சரியானபடி அமையும்.
3. தெளிவாகவும் ஒழுங்காகவும் எழுதப்பழக்கப்படும்.
4. சொற்களுக்கிடையிலான இடைவெளிகள் சரியாக அமையும்.
5. உச்சரித்து வாசிக்கும் தன்மை விருத்தியடையும்.
6. கையெழுத்து வியக்கத்தக்க வகையில் அழகாகவும் தெளிவாகவும் அமையும்.
7. ஆக்கங்களை வாசிக்கவும் எழுதவும் ஆர்வம் ஏற்படும்.
8. மொழியில் ஈடுபாடும் வாசிப்புத் திறனும் மேம்படும்.

### உயிர்க்குறிகள்

ஆரம்பக் கல்வி வகுப்புக்களில் மொழிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழ் எழுத்துக்களின் உயிர்க்குறிகள் பற்றி அறிந்திருத்தல் மிகவும் அவசியமானது. புதிதாக எழுத்துக்களை எழுத ஆரம்பிக்கும் பிள்ளைகள் (மாணவர்கள்) இந்த உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதினாலே எழுத்துக்களை உறுப்பமைய எழுத முடியும்

| உயிர்க்குறிகள் | பெயர் | உதாரணம் |
|---|---|---|
| ா | அரவு | காப்பு, மாடு |
| ி | விசிறி | சிறப்பு, கிளி |
| ீ | விசிறியும் சுழியும் | மீன், நீலம் |
| ெ | ஒற்றைக் கொம்பு | கொக்கு, வெற்றி |
| ே | இரட்டைக் கொம்பு | மேசை, நேரம் |
| ை | சங்கிலிக் கொம்பு | கை, வைகாசி |
| ெ...ா | ஒற்றைக் கொம்பும் அரவும் | தொட்டில், பொந்து |
| ே...ா | இரட்டைக் கொம்பும் அரவும் | தோட்டம், சோதனை |
| ு | கீழ்க்கால் | யுத்தம், புத்தகம் |
| ூ | கீழ்க்காலும் சுழியும் | சூரியன், பூமி |
| ு | மடக்கேறு | நுங்கு கறுப்பு |
| ூ | மடக்கேறும் அரவும் | தூக்கம், நூதனம் |

# கின்னஸ் [சாதனைகளின் நூல்]

உலகில் பல வீரர்கள் தங்கள் சாதனைகள் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் போட்டிகளில் பங்கு பற்றுகிறார்கள். ஆனால் இந்தப் புத்தகம் தோன்றிய வரலாறு பலருக்குத் தெரியாது. 'கின்னஸ் புக் ஒப் வேல்ட்' என்பது ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனம். இது சர் ஹக்ஃபீவர் என்ற ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஒருமுறை வேட்டைக்குச் சென்றபோது 'கோல்டன் பிளவர்' என்ற பறவையைத் துப்பாக்கியால் சுட நேர்ந்தது. ஆனால் அந்தப் பறவை குண்டின் வேகத்தைத் தாண்டி தப்பி ஓடி விட்டது. அதிலிருந்து ஹக். அந்தப் பறவையின் வேகம், அது மணிக்கு எத்தனை கிலோ மீற்றர் பறக்கும் என்ற விவரங்களை விசாரிக்கத் தொடங்கினார். பல புத்தங்களையும் புரட்டிப் பார்த்தார். ஆனால், அந்தப் பறவை பற்றி சரியானவிபரங்கள் கிடைக்கவில்லை. இதனால் ஆய்வு செய்து தாமாகவே அந்தப் பறவையின் வேகத்தைக் கணித்துக் கொண்டார். தன்னைப் போன்றே உலகில் பலர் எத்தனையோ அற்புதமான சாதனைகள் படைத்திருக்கக் கூடும் என்று எண்ணி எல்லாவற்றையும் தொகுத்தார். வருடா வருடம் அந்த சாதனைகளும் முறியடிக்கப்பட்டு வந்தன. அதனால் சாதனைகளுக்கென வருடா வருடம் ஒரு புத்தகம் கொண்டு வருவதாக முடிவெடுத்தார். அதுவே 'கின்னஸ் புக் ஒவ் வேல்ட்' நிறுவனம் வெளியிடும் 'கின்னஸ் சாதனைகள்' புத்தகமாகும்.


GUINNESS WORLD RECORDS

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# யாழ்ப்பாணம் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 11
கிறிஸ்துவுக்காக இளைஞர் அமைப்பினால் யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய அணி சம்பியனானது.
இந்தத் தொடரின் இறுதியாட்டம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பிராந்திய அணியை எதிர்த்து தென்மராட்சி பிராந்திய அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணம் பிராந்திய அணி 12:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)



## யூனியனை வென்றது சென்றல்

கரணவாய், ஏப். 11
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றல் வி.கழகம் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரஜீவ்குமார் 29 ஓட்டங்களையும், மதுசன் 26 ஓட்டங்களையும், சுதர்சன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் அதிகபட்சமாக தயாளன் 4 இலக்குகளையும், சயந்தன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
174 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய யூனியன் அணி 29.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 159 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்றல். சுயந்தன் 58 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் கிருசாந்தன் 4 இலக்குகளை அதிகபட்சமாக வீழ்த்தினர். (ம-23)



## பல்கலைக் கழகம் கிண்ணம் வென்றது

கரணவாய், ஏப். 11
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத்தில் 'பி' பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி கிண்ணம் வென்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'பி' பிரிவு இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்து வென்றது. சரிவில் இருந்து மீண்டுவந்து அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:21, 25:19, 31:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணம் கல்கலைக்கழக அணி. (ம-108-23)



# ஆவரங்கால் மத்தி: அசத்தல் ஆட்டம்

கரணவாய், ஏப். 11
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத்தில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்தி கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது கலைமதி.
மூன்றாவது மற்றும் நான்காவது செற்களை முறையே 25:22, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 செற்கணக்கில் சம்பியனாகியது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-108-23)



கிராஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர்களை வைத்து உருவாக்கப்பட்ட அணி, மலேசியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 15ஆம், 16 ஆம் திகதிகளில் நட்புரீதியிலான தொடர்களில் விளையாடவுள்ளது. இந்த அணிக்கான ஜெர்சி அறிமுக விழா சுன்னாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் நிகழ்வில் கலந்துகொண்டார். (ம)

## ஐக்கியம் சம்பியன்

கரணவாய், ஏப். 11
திக்கம் மத்திய சனசமுக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கபடியில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கியம் அணி கிண்ணம் வென்றது.
திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜெசிந்தா அணியும் பருத்தித்துறை ஐக்கிய அணியும் மோதின.
பரபரப்பாக இடம்பெற்ற முதல் பாதியாட்டத்தில் 11:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜெசிந்தா அணி முன்னிலை பெற்றது.
தொடர்ந்து இரண்டாம்பாதியில் அபாரமாக விளையாடி பருத்தித்துறை ஐக்கியம் அணி முடிவில் 36:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. (ம-108)

# தீவுகளுக்கு பாகிஸ்தான் கொடுத்தது தக்க பதிலடி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 74 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான். இந்த வெற்றியின் மூலம் முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பாகிஸ்தான் பதிலடி கொடுத்தது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடர் தற்போது 1:1 என்றுள்ளது. அடுத்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 5 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரர்கள் பெரிதாக பிரகாசிக்கா விட்டாலும் பாபர் அசாம் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களை விளாசினார். அவரை விட இமாட் வசிம் 43 ஓட்டங்களையும், ஹபீஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கபிரியேல் 2 இலக்குகளையும், ஜோசெப், பிஸ்கூ, நேர்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு முன்வரிசை, மத்திய வரிசை வீரர்கள் எவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. அணித்தலைவர் கோல்டர் பெற்ற 68 ஓட்டங்களே அதிகபட்சம். 208 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது தீவுகள். நேர்ஸ் 44 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இரண்டாவது அதிகபட்சம்.

பந்துவீச்சில் கசன் அலி 5 இலக்குகளையும், கபீஸ் 2 இலக்குகளையும், ஆமிர், யுனைட்கான், சடப்கான் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பாபர் அசாம் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)






# நடப்பு வருட ஐ.பி.எல்லில் வோர்ணரே நாயகனாவார்

## பொண்டிங் ஆருடம்



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணியின் தலைவர் வோர்ணரே தொடராட்ட நாயகனாவார் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங் தெரிவித்தார்.

"இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் (இந்திய மண்ணில்) விளையாடிய அனுபவம் வோர்ணருக்கு உள்ளது. அவர் நடப்புச் சம்பியனாக உள்ள அணியின் தலைவராகவும் உள்ளார். கடந்த வருடம் ஹைதராபாத் கிண்ணம் வெல்ல வோர்ணர் முக்கிய பங்காற்றினார். இவற்றைவிட ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் அவர் உள்ளார். இந்தக் காரணங்களின் அடிப்படையில் வோர்ணருக்கு தொடர்நாயகன் விருது கிடைக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன" என்று பொண்டிங் மேலும் தெரிவித்தார்.

ஒருவேளை வோர்ணருக்கு அந்த விருது கிடைக்காவிட்டால் ஒரு சுழல்பந்து வீச்சாளர் தொடராட்ட நாயகனாக வாய்ப்புள்ளது என்றும் பொண்டிங் மேலும் தெரிவித்தார். (ம)

# இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 11


பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பொற்பதி அணி மோதவுள்ளது. (ம-422)

# ஆப்கானுக்கு அங்கீகாரம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் ஆப்கானிஸ்தான் வீரர் ரசிட்கான், ஆப்கானிஸ்தான் அணிக்கான ஓர் அடையாளமாக உள்ளார் என்று கிரிக்கெட் வல்லுநர்கள் பலரும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் ரசிட்கானை 4 கோடி ரூபாவுக்கு (இந்திய மதிப்பில்) வாங்கியது ஹைதராபாத். அவருக்கு இந்தத் தொகை மிகவும் அதிகம் என்றே ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. ஆனால் இந்தத் தொகை மிகவும் குறைவானது என்று தனது செயற்பாடுகளின் மூலம் அவர் சொல்ல வைத்து வருகிறார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் மக்கலம், பின்ஞ், ரெய்னா மூவரையும் வெளியேற்றினார். ஹைதராபாத் வெற்றிபெற முக்கிய காரணமாக இருந்த அவரே அந்த ஆட்டத்தின் நாயகனாகவும் தெரிவானார். மொத்தத்தில் ஆப்கானிஸ்தானின் ஓர் அடையாளமாகவும் ரசிட்கான் உருவெடுத்துள்ளார். (ம)



# உலக கார்ப் பந்தயத் தொடர் சீனாவில் ஹமில்டன் சம்பியன்

உலககார்ப்பந்தயத்தொடரின் இரண்டாவது சுற்று சீன ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தச் சுற்றில் பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன் சம்பியனானார்.

பிரிட்டன் வீரர் (மெர்சிடஸ் அணி) லூயிஸ் ஹமில்டன் பந்தய தூரத்தை ஒரு மணி நேரம் 37 நிமிடங்கள், 36 செக்கன்கள் 58 மில்லி செக்கன்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். ஹமில்டனை விட 6 செக்கன்கள் பின்தங்கிய வெட்டல் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். வெர்ஸ்டாப்சன் மூன்றாவது இடத்துக்கு வந்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரில் ஹமில்டன் இரண்டாவது இடத்தை பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உலக கார்ப்பந்தயத் தொடரின் மூன்றாவது சுற்று பக்ரைனில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ம)



# மாகாண மட்ட மேசைப்பந்தில் யாழ்ப்பாணம் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 11

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. 3:1 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாணம் அணி கிண்ணம் வென்றது. (ம-422-108)

# பஞ்சாப் அசத்தல் வெற்றி



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரை இலகுவாக வீழ்த்தியது பஞ்சாப்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 148 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 9 சிக்சர்கள் உள்ளடங்கலாக 89 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் 33 பந்துகள் மீதமிருக்கையில் இரு இலக்குகளை மட்டுமே இழந்து வெற்றிபெற்றது. அம்லா 58 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 43 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். (ம)

**நித்திய பூசகர் தேவை**

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், நுணாவில், சாவகச்சேரி.

காலை, மாலை (இருநேரமும்) நித்திய பூசைகள் செய்யக்கூடிய பூசகர் தேவை. ஆர்வமுள்ள பூசகர்கள் 2017.04.16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆலயத்திற்கு சமுகம் தரவும்.

செயலாளர்
ஆலய பரிபாலன சபை. 077 968 3964

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
03 . 08 . 1935

மறைவு
06 . 04 . 2017

எமது நிறுவன உயிரியல் ஆசான்

**திரு. V. உமாசங்கர்** அவர்களின் பாசமிகு தந்தை

**உயர்திரு. வேலாயுதபிள்ளை**

அவர்கள் இயற்கை எய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

துயருடன்
சக ஆசிரியர்களும் பணியாளர்களும்.
New Science World
Brown Road - Jaffna.

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோகத்தர்களான கணவன், மனைவி இருவருக்கு மட்டும் பலாலி வீதியை அண்மித்ததாக கோண்டாவில் கிழக்கில் வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு. 077 937 0253

**வேலையாள் தேவை**

றக்காவீதியில் அமைந்துள்ள சிறிய புத்தகக் கடைக்கு (Fancy Bookshop) பொறுப்பாக நிற்கக்கூடிய பில் போடக்கூடிய படித்த நம்பிக்கையான பெண்பிள்ளை தேவை.

தொடர்புக்கு - 077 047 6236. 077 997 8332

**கடைகள் வாடகைக்கு**

மானிப்பாய் வீதியில் அமைந்திருக்கும் 2 கடைகள் (பிள்ளையார் ஸ்ரோர்ஸுக்கு அருகில்) வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு - 077 248 3353

**பணியாளர் தேவை**

1. கணக்காளர் (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)
2. கணினியில் வேலை செய்யக்கூடியவர்கள் (பெண்கள் மட்டும்)

Siva Brothers
4th Lane, Brown Road, Jaffna. 077 772 2215

**சிறுநீரகம் தேவை**

20 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளமையால் O+, O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு - 077 3911406. 021 222 7263, 077 979 7403

## மரண அறிவித்தல்



### திருமதி சறோஜினி பாலகிருஷ்ணன்

தோற்றம்
11.04.1957

மறைவு
24.03.2017

யாழ். கலட்டி சீனியர் லேனை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சறோஜினி (தேவி) பாலகிருஷ்ணன் கடந்த 24.03.2017 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - அழகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற நாகேந்திரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலகிருஷ்ணன் (பாலா மாஸ்ரர் - ஓய்வுநிலை உப அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, இயக்குநர் "BITSMANS" Institute மானிப்பாய்) அவர்களின் ஆருயிர் துணைவியும், டினோஜன் (லண்டன் - 2004 உயர்தரம், யாழ். இந்துக் கல்லூரி), நிரோஜன் (2009 உயர்தரம் - யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுஷ்பிரியாவின் அன்பு மாமியாரும், ரித்வியின் அன்புப் பேர்த்தியும், குலசிங்கம் (ஓய்வுநிலை தபால் அதிபர்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் நித்தியானந்தம் (கனடா), மகாலிங்கம் (நோர்வே), சாந்தாதேவி (சாந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகௌரி, மனோரஞ்சிதம் (கனடா), தயா (நோர்வே), சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை கிராம சேவையாளர்), இராஜலட்சுமி, காலஞ்சென்றதங்கரத்தினம் மற்றும் ஜீவரஞ்சினி (லண்டன்), பாலச்சந்திரன் (கனடா), இராஜகுமாரன் (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணராஜா, சற்குணராஜா மற்றும் சக்திக்குகன் (லண்டன்), கலைவாணி (கனடா), அனுஷா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21/2, சீனியர் லேன்,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**021 222 8764**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.